In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ப்ரதிஷ்டா முஹூர்த்த நிர்ணய:

சிவாகம ஞானபானு

சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்

நயினாதீவு - இலங்கை.

2002

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

க. திருக்குமரன்
In Public domain. Digitization Muthulakshmi Research Academy
கடப்பாக்கம்.

உ



சுபானு-சித்திரை-6
19.4.2005 அன்று திரு. அருணசுந்தர சிவாச்சாரியர் அவர்கள்
ஆசீர்வதித்து கொடுத்த புஸ்தகம்.

ப்ரதிஷ்டா முஹூர்த்த நிர்ணய:

பிரதிஸ்டா முகூர்த்த நிர்ணயம்

சிவாகம ஞானபானு

சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்

நயினாதீவு,

இலங்கை.

2002

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சமர்ப்பணம்



சிவஸ்ரீ நா. சாமிநாதக் குருக்கள், செல்லம்மா அம்மாள் ஆகிய எனது பெற்றோருக்கு இந் நூலை பணிவன்புடன் சமர்ப்பிக்கிறேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சித்தாந்த
ஈசான சி
சிவஸ்ரீ.
கோப்பாய

ந
பரம்பன
தேவஸ
வெளியி
காரியங்
நாட்கள்
இந்த அ
தந்தை
என்பது

ப
இன்னே
பரவைய
தெய்வ
வேண்டு
சாந்நித்
தொன்ற

அ
ஆலயங்
வந்தார்
அப்பர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசியுரை

சித்தாந்தபானு, திருமந்திரப் பேரறிஞர்,
ஈசான சிவாச்சாரியார்
சிவஸ்ரீ. சோ. சுப்பிரமணியக் குருக்கள்
கோப்பாய், யாழ்ப்பாணம்.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான ஆதீன அர்ச்சக பரம்பரையினரான சிவஸ்ரீ. சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் அவர்கள் தேவஸ்தானங்களில் பணிபுரியும் குருமாருக்கான ஒரு நூலை வெளியிட்டிருக்கிறார். ஆலயங்களில் பிரதிஷ்டை, பாலஸ்தாபனம் முதலிய காரியங்களை நடாத்துவதற்கு ஏற்ற குற்றமற்ற, அபிவிருத்திக்குரிய நாட்களில் செய்து உலகத்தவர் உயர்நிலை அடையச் செய்வதற்காக இந்த அருமையான நூலை வெளியிட்டு இருக்கிறார். இந் நூல் தமது தந்தையாருக்கும் மாமனாருக்கும் ஓர் ஞாபகார்த்தமாகவும் அமையும் என்பது அவரது எண்ணம் ஆகும்.

பாலஸ்தாபனம் என்பது ஓரிடத்தில் விளங்குகின்ற சாந்நித்தியத்தை இன்னோர் இடத்தில் விளங்கச் செய்வதே ஆகும். சுந்தரமூர்த்தி நாயனார் பரவையாருக்கு சத்தியம் செய்து கொடுப்பதற்காக கோவிலுக்குள் இருந்த தெய்வ சாந்நித்தியத்தை ஸ்தல விருட்சமாகிய மகிழமரத்தடியில் இருக்க வேண்டும் என பிரார்த்தித்தார். இந்த வரலாற்றால் ஒரு இடத்தில் இருக்கின்ற சாந்நித்தியத்தை இன்னோர் இடத்தில் விளங்கச் செய்வது நடைமுறையில் தொன்றுதொட்டு நடைபெற்று வரும் நிகழ்ச்சியே ஆகும்.

ஆதிகாலம் தொட்டு ஜனங்கள் குடியிருப்புக்களில், ஊர்களில் ஆலயங்களை அமைத்து தினந்தோறும் பூஜை, வழிபாடுகளைச் செய்து வந்தார்கள். திருக்கோவில் இல்லாத ஊர்கள் சிறப்புடையன அல்ல என அப்பர் சுவாமிகள் தாம் பாடிய தேவாரத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்கோயிலில்லாத திருவிலூரும்
திருவெண்ணீறணியாத திருவிலூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடாவூரும்
பாங்கினொடு பலதாளிகளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதாவூரும்
அருப்போடு மலர் பறித்திட்டுண்ணா வூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவிகாடே

எனக் கூறியுள்ளார்.

இதனாலே ஊர்கள் தோறும் ஆலயங்கள் அமையவேண்டிய அவசியத்தை வற்புறுத்துகிறார். அவ்வாறு வழிபாட்டுக்குரிய ஆலயங்கள் இல்லாத ஊரில் ஆலயங்கள் அமைக்கத் தொடங்கும் போது முதலில் பாலாலயம் ஒன்று அமைத்து ஒரு வருடம் முதற்கொண்டு பன்னிரண்டு வருட காலங்கள் வரை பூஜை செய்தல் வேண்டும். அதன் பின் மூலாலயம் என்ற பெரிய கோயிலை அமைத்து பிரதிஷ்டை செய்தல் வேண்டும். புதிதாக கோயில் கட்டும் பொழுது முதலில் பாலாலயம் அமைத்து பூஜை செய்தல் முக்கியமான விடயம்.

ஸாமுஹாஜ்யம் விநாவஷ்வம்
ஶூமுஷ்யாநம் ந காரயேத்||

என்ற ஆகமப் பிரமாணத்தால் இந்த பாலாலயங்கள் இரண்டுவகைப்படும். ஒன்று ஆத்தியம் தருணாலயம் இரண்டாவது துவிதீயம் தருணாலயம். கோவில் இல்லாத இடத்தில் முதலில் ஸ்தாபிக்கப்படுவது ஆத்தியம் தருணாலயம் எனவும், பழைய கோயிலின் விக்கிரகங்களில் ஏதும் பழுதடைந்தால் பாலாலயம் கட்டி அதில் ஸ்தாபித்தல் துவிதீயம் தருணாலம் எனவும் கூறப்படுகிறது. அப்படியாக பாலஸ்தாபனம் செய்யும் பொழுது அந்தக் குருக்கள் சொல்கின்ற பிரார்த்தனை இது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஊகூவதூ௱ஊா௱ஹு யாவகூ ஸூாகூ ௩ாஉஶாவுகூ௧।
தெஷூஹெ௱ நவீகூரதூ வு௱நஃ ஸஂஸூாவயா௵ஹ௧॥

கிரியா லிங்கங்களை 100 வருடத்திற்கு மேல் இடம் பெயர்க்கக் கூடாது. அதனை ஆகமத்தில் சொல்லப்பட்டபடி மரத்திலோ அல்லது துணியினால் எழுதப்பட்ட சித்திரத்தில் பாலாலய மூர்த்தியை ஆவாகணம் செய்தல் வேண்டும். குறிப்பிட்டகால எல்லையில் மூலஸ்தானத்தில் மீண்டும் பிரதிஷ்டை செய்ய வேண்டும். இளங்கோவில் என்பது பாலாயத்தைக் குறிக்கும். இவ்வாறாக தெய்வங்களை பிரதிஷ்டை செய்யும் பொழுதும் பாலஸ்தாபனம் செய்யும் பொழுதும் முகூர்த்த நிர்ணயம் பிரதானமானது.

ஆகமத்தின்படியும், ஜோதிட சாஸ்திரத்தின்படியும் குற்றமற்ற சுபமுகூர்த்தங்களை தெரிந்தெடுத்து பாலஸ்தாபனம், பிரதிஷ்டை செய்தல் வேண்டும். அது அபிவிருத்தியான வாழ்க்கை விருத்தி என்பவற்றை உண்டாக்கும்.

குற்றமுள்ள முகூர்த்தங்களில் பாலஸ்தாபனம் பிரதிஷ்டை செய்தால் ஆலயமும் ஊரும் பாழடையும். இதனால் முகூர்த்த நிர்ணயம் எவ்வளவு பிரதானமானது என்று அறிய முடியும். இதனாலே தான் திருகோண மலையிலே நீண்டகாலம் சிறந்த கல்விமானாக தமிழ், சமஸ்கிருதம், ஆகமம், ஜோதிடம் ஆகியனவற்றில் வல்லவராக சிவாகம வித்யா பூஷணம் எனும் பட்டத்திற்கு உரியவராக விளங்கியிருந்த சிவஸ்ரீ. இ.கு. பூர்ணானந் தேஸ்வரக் குருக்கள் அவர்கள் தமது நீண்டகால அனுபவத்தைக் கொண்டு முகூர்த்த நிர்ணயம் என்ற இந்த அருமையான நூலை ஆகமங்கள், ஜோதிடங்களில் இருந்து தொகுத்து எழுதினார். அப்படியாகத் தொகுக்கும் பொழுது தம்முடைய சம்பந்தியாராகிய நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் பரம்பரை அர்ச்சகரும், இந்நூலின் பதிப்பாசிரியர் சிவஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள் அவர்களோடு கலந்துபேசி பல சந்தேகங்களை சிவாச்சாரியார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிறந்த தேவி பக்தரும் உபாசகரும் ஆவார். இந்த உபாசனை முறைகளை முனீஸ்வரம் தேவஸ்தானம் பெரிய சிரேஷ்டாச்சாரியார் மு. சோமாஸ்கந்தக் குருக்களுடன் இருந்து தெரிந்து கொண்டார் எனவும் அறிகின்றோம். பக்திமான்களும், உபாசகர்களுமாகிய அந்தண சிரேஷ்டர்கள், பூசகர்களாக இருக்கின்றவர்கள் நாளுக்கு நாள் தெய்வீகத்தன்மையில் சிறந்து விளங்கி வருவது அனைவருக்கும் தெரிந்ததே. இத்தகைய பெரியோர்கள் தொகுத்த நூலை இப்பொழுது அச்சில்பதித்து வெளியிடுவது சிவஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள் அவர்களுடைய சிறந்த பணியாகும். இந்நூல் சிவாச்சாரியார் களுக்கு பேருபகாரமாக விளங்கும். சிவாச்சாரியார்களும். சிவாச்சாரிய மாணவர்களும் இந்நூலைப் பெற்று தோஷமற்ற முகூர்த்தங்களைத் தெரிந்தெடுத்து பாலஸ்தாபனம், கும்பாபிஷேகம் இவைகளை நடாத்தி தேவஸ்தானங்களும் உலகமும் சிறப்புற்றோங்க வேண்டும் என்று நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மனை பிரார்த்திக்கிறேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

அணிந்துரை

பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்
தலைவர்: இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்,
சேர்.பொன். இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவனம்,
பரமேற்வரன் ஆலயம், நியந்த்ரீ,
நல்லூர் சிவன் கோவில்

சிவாகமங்கள் திருக்கோயிற்கிரியை மரபுக்குப் பிரமாண நூல்களாகும். அவை கூறும் கிரியை மரபில் பிரதிஷ்டை முக்கியத்துவம் பெறுகின்றது. சிவாகம கிரியாபாதத்தில் கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் பற்றிய விபரங்கள் இடம் பெறுகின்றன. திருக்கோயில் வழிபாட்டு மரபு வளம்பெற இத்தகைய கிரியைகள் பெரிதும் உதவுவன. நாடு வளம் பெறவும் பஞ்சம் பட்டினி போன்ற துயர் நீங்கி மக்கள் சுபீட்சத்துடன் வாழவும் இத்தகைய கிரியைகள் உரிய காலங்களில நிகழ்த்தப்பட வேண்டியதன் அவசியம் பற்றிக் காலங்காலமாக உணரப்பட்டுவந்துள்ளது. சிவாகமக்கிரியை மரபு ஒழுங்காகப் பேணப்படுவதற்கு எமக்கு பத்ததிகள் உதவுவது போன்று அக்கிரியைகள் நிகழ்த்தப்படுவதற்குரிய கால ஒழுங்கையும் சுபமுகூர்த்தத்தையும் அறிந்து கொள்ளும் வகையில் *'பிரதிஷ்டா முகூர்த்த நிர்ணயம்'* என்ற இத்தொகுப்பு நூல் ஒன்று வெளிவருவதையிட்டு யான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இந்நூல் காலத்தின் தேவையாகும்.

இத்தொகுப்பு நூலின் ஆசிரியர் சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் ஆவார். இவர் நயினை ஸ்ரீ நாகபூஷணி தேவஸ்தானத்தில் பரம்பரை ஆதீன குருவாக விளங்குபவர். சிறந்த சிவாச்சாரிய மரபைச் சேர்ந்தவர். எமது நாட்டிலும் பிறநாடுகளிலும் எமது சிவாகம மரபு சிறப்பாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வளம்பெற தொண்டாற்றி வருபவர். அண்மையில் கனடா நாட்டில உள்ள ரொறன்றோ துர்க்கையம்மன் கோவில் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் ஒன்றினை மிகவும் விஸ்தாரமாக நிகழ்த்தி நாடு திரும்பியபின், கொழும்பு சம்மாங்கோட்டார் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகத்தை பக்திபூர்வமாகவும் கிரியா நுட்பத்துடனும் தென்னிந்திய சிவாச்சாரியர்களுடன் எமது நாட்டுச் சிவாச்சாரியர்களுடனும் இணைந்து நடத்திய பெருமைக்குரியவர். தமது வாழ்நாளில் அனுபவத்தின் வெளிப்பாடாக பிரதிஷ்டை நிகழ்த்தப்படுவதற்குப் பொருத்தமான முகூர்த்த நிர்ணயம் செய்யும் நடைமுறைகளை யாவரும் அறிந்து பயன்பெறும் வகையில் சிவஸ்ரீ குருக்கள் இந்நூலைத் தொகுத்துள்ளார். இதனை சிவாச்சாரிய உலகமும் சைவ அன்பர்களும் மனமுவந்து வரவேற்பர் என்பதில் ஐயமில்லை.

பிரதிஷ்டை என்பது இறைவனை ஆலயத்தில் வழிபாட்டிற்கென தெய்விகப் பொலிவுடன் நன்கு சாந்நித்தியம் பெறச் செய்வதற்குரிய கிரியை ஆகும். எனவே அக்கிரியை நிகழ்த்துவதற்குரிய காலநிர்ணயம் பற்றி நாமனைவரும் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டிய தேவையுள்ளது. அதற்கேற்ப மிகவும் விபரமாகப் பல விடயங்களை பல நூல்களிலிருந்து பெற்று மரபுக்கேற்ப ஆசிரியர் இந்நூலைத் தொகுத்துள்ளார். தமது மூதாதையர் பேணிய இவ்விபரங்களை சிவாச்சாரியர்களது நன்மைகருதி ஆசிரியர் வெளியிட முன் வந்துள்ளமை பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

இத்தொகுப்பு நூலில் உத்தரகாரணாகமம், பூர்வகாரணாகமம், பூர்வகாமிகாகமம், குமாரதந்திரம், காலாமிர்தம், காலப்பிரகாசிகை, முகூர்த்த சிந்தாமணி, காலவிதானம், வீமேசுர உள்ளமுடையான், சூடாமணி உள்ள முடையான், சரசோதிமாலை ஆகிய நூல்களிலிருந்து பிரதிஷ்டைக்குரிய காலநிர்ணயம் தொடர்பான பலவிடயங்களை ஆசிரியர் தொகுத்துத் தருகின்றார். இந்நூலில் உள்ள மற்றுமொரு சிறப்பம்சம் இத்தகைய விதி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முறைகளை ஆலய அறங்காவலர்களும், மற்றும் அன்பர்களும் பயன் பெறத்தக்கவகையில் தமிழ் மொழிபெயர்ப்புத் தரப்பட்டுள்ளமையாகும்.

தேவப்பிரதிஷ்டைக்கான காலநிர்ணயத்தில் கரிநாள் நீக்கப்பட வேண்டிய விபரம், குறித்தமாதங்களில் பிரதிஷ்டை நிகழ்த்துவதால் ஏற்படும் பயன்கள், பிரதிஷ்டை நிகழ்ந்தால் கிடைக்கும் நற்பேறுகள், பிரதிஷ்டைக்குப் பொருத்தமான பட்சங்கள், நீக்கப்பட வேண்டிய திதிகள், பொருத்தமான திதிகள், ஏழுகிழமைப்பலன், நட்சத்திரப்பலன், இராசிகளுக்குள்ள பலன், பகற்பொழுது, இராப்பொழுது பற்றிய பலன், ஆகியவை பிரமாணரீதியில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. திருக்கோயில் தொடர்பான நீண்டகாலப் பாரம்பரியத்தை நிகழ்காலத்தில் நாம் தவறின்றிப்பேண இத் தொகுப்பு நூல் எமக்கு உதவுகின்றது. தேவப்பிரதிஷ்டைக்குரிய ஸ்திரராசிகள், உபய ராசிகள் மற்றும் நீக்கப்படத்தக்க சரராசிகள் கூறப்படுகின்றன. பிரதிஷ்டைக்கான கிரகநிலைகளும் அவற்றின் பலன்களும் மிகத்தெளி வாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. பாபக்கிரகங்கள், சுபக்கிரகங்கள்பற்றிய விளக்கம் பலருக்கும் நன்கு பயன்படக் கூடியது. கோசரபலன் மற்றும் வாஸ்து சாந்திக்குரிய காலம் ஆகியவையும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. காலவிதானத்தை அடிப்படையாகக் கொண்டு நன்றாக முகூர்த்தங்களை ஆராய்ந்து தோஷமற்றதும் குணங்களுடன் கூடியதுமான காலத்தில் பிரதிஷ்டை போன்ற சுபகாரியங்கள் செய்யபட வேண்டும் என்பது இந்நூலில் பொருத்தமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

பல நூல்களில் உள்ள விடயங்களை நன்று திரட்டி தேவப் பிரதிஷ்டைக்குரிய முகூர்த்த நிர்ணயம் இந்நூலில் நன்கு தெளிவாக்கப் பட்டுள்ளது. வளர்ந்து வரும் இளஞ் சிவாச்சாரியர்களும் ஆலய அறங் காலர்களும் தமது கிராம நன்மைகருதி ஆலயப் பிரதிஷ்டைகளை மேற் கொள்வதற்கு சிவஸ்ரீ குருக்களின் இவ்வரிய முயற்சி வழிகாட்டி நிற்கின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் அவர்கள் இந்நூலின் வழி எமது சிவாகம மரபுக்கு வளம் சேர்ந்துள்ளார். அவரது இப்பணியை பாராட்டுவதோடு அவர் மேன்மேலும் இதுபோன்ற பயனுள்ள பல தொகுப்பு நூல்களைத் தொகுத்து வெளியிட்டு தமது நீண்டகால அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கேற்ற வகையில் அவரது அனைத்து முயற்சிகளும் சிறக்கவும் நல்ல தேகசுகத்துடன் இனிதே வாழ்ந்து சிவாகம மரபைப் பேணவும் முன்னெடுக்கவும் எல்லாம் வல்ல நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் திருவருள் பொலிவதாகுக என வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

திருநெல்வேலி *பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஸ்ரீகுருப்யோ நமஃ

வாழ்த்துரை

வியாகரண சிரோமணி, வியாகரண விசாரத,
சைவாகம வித்வான், சாமவேதாத்யாயி.
சிவஸ்ரீ. எஸ். அருணசுந்தரம். M.A, M.Phil, B.Ed.
(சேகர்)
விரிவுரையாளர், சம்ஸ்கிருதக் கல்லூரி,
சென்னை 4.

அனாதி சைவராகிய பரமேசனால் ஆன்மாக்களின்மேற்கொண்ட அன்பினால் அருளப்பட்டவை ஆகமங்கள்.

"வெஶாமஜஂ ஜயா வெ்ாகூஂ துயி வெஹுஹெந வாவ¬தி ||"

என்று பார்வதியைக் குறித்த வசனத்தால் இதை உணரலாம். தனது அருவநிலையின் உபாசனையின் பொருட்டு ஞானபாதத்தினையும், அருவுருவ, உருவ வழிபாட்டின் பொருட்டு பிற மூன்று பாதங்களையும் ஆகமங்களில் அருளிய இறைவன், ஆன்மாக்களின் விருப்பத்திற்கேற்ப **'சிந்தாமணி'** கல்போன்று அந்தந்த வடிவம் கொள்கிறார். அதாவது,

"஥ிகூ் கூாஞாஶி ஊநவஹிந ஊநஜ ஹிநாதுஶுத¬யெ |"

என்று பர்த்ருஹரி கூறியபடி, திசைகள், காலங்கள் போன்ற எவைகளாலும் பிரிக்கப்படாத, உட்படுத்தப்படாத இறைவன், அவைகளுக்கு உட்பட்டது போலக் காட்சியளிக்கும் நிலைகளே அருவுருவ உருவ நிலைகள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறைவனின் இந்நிலைகளை நாம் அனுபவிக்கக் பெரும் துணையாய் நிற்பது காலதத்துவமே ஆகும். காலத்திற்கெல்லாம் அப்பாற்பட்ட இறைவனை ஓரிடத்தில் காலங்களைக் கொண்டு நிலைநிறுத்த, சிவாகமங்களில் உபதேசிக்கப்பட்டவையே பிரதிஷ்டா முகூர்த்தங்கள்.

ஒரு நூற்கண்டில் சுற்றப்பட்ட நூல், அதன் தொடக்கம் முதல் இறுதி வரை எவ்விதப் பாகுபாடுமின்றி ஒன்றாகவே இருப்பது போல காலதத்துவமும் சிருஷ்டி முதல் லயம் வரை எவ்விதப் பிரிவுமின்றி ஒன்றாகவே உள்ளது. இருப்பினும், மேற்கண்ட நூலில் பல்வேறு வண்ணங்கள் பூசப்பட்டால், அவ்வண்ணங்களின் பேதம் காரணமாய், நூலிலும் எவ்வாறு பேதம் உணரப்படுகிறதோ, அதுபோல விண்ணில் உள்ள கிரக நட்சத்திரங்களின் சஞ்சாரங்களுக்கேற்ப, அவற்றின் பேதம் காலதத்துவத்தில் உணரப்படுகிறது. கிரக சஞ்சாரத்தின் பேதம் காலபேதமாய் கொள்ளப்படுகிறது. அக்கிரகங்களில் முக்கியமாய் மிளிரும் **'ஜ்யோதிஸ'** கிரஹங்களாகிய சூரிய, சந்திரர்களை மையமாக வைத்து காலத்தைப் பேசுவதாலேயே காலநூல்களுக்கு **'ஜ்யௌதிஷம்'** என்ற பெயர் வந்தது. இறைவனும் இக்கால வடிவம் கொண்டே நம் கருமங்களுக்கு சாட்சியாய் நிற்கிறான் என்பதை

•"ꯀாலாத்ꯦநா த்வயா ஜெவ யꯦꯦ்ரஷ்ம ꯃாஃகெ வியஎ"

என்ற பவித்ர ச்லோகத்தால் அறியலாம்.

எனவே, எவ்விதப்பிரிவுமற்ற காலம் ஸ்திதி என்ற நடைமுறையில் பல்வேறு பேதங்களுடையதாய் இருப்பதால், அவற்றுள் எந்த காலபேதத்தில், அதாவது எந்த காலத்தில் பிரதிஷ்டை என்ற ஙு வள் மங்களத்தைச் செய்யவேண்டும் என்று விளக்குபவையே பிரதிஷ்டா முஹுூர்த்த விதிகள். இவ்விதிகள் பல்வேறு ஆகமங்களில், பல்வேறு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

படலங்களில் சிதறியுள்ளன. ஜ்யௌதிஷ நூல்களிலும் இவ்விதிகள் காணப்படுகின்றன. இவை அனைத்தையும் ஒன்றுசேர லோகோபகாரமாய் சைவ உலகிற்கு அளிக்க, நயினை சிவஸ்ரீ பரமேசுவரக் குருக்கள் எடுத்துக் கொண்ட பெருமுயற்சியின் பயனே **பிரதிஷ்டா முஹூர்த்த நிர்ணயம்** எனும் இந் நூலாகும்.

இந்நூல் பதிநான்கு சிறு பகுதிகளைக் கொண்டது. அவற்றுள் நான்கு பகுதிகள் 'குருக்கள்' அவர்களின் மூதாதையரின் கையேட்டுக் காகிதப்ரதிகள். அதில் மூலச்லோகங்களும், உரைகளும் மிகவும் சிரத்தையுடன் எழுதப்பட்டு இருந்தன. ஆகமங்களை ஒன்றுசேரக் காணவேண்டும் என்ற அவா அவ்வேட்டில் தெரிந்தது. மேலும் மூலாகமங்களில் உள்ள சங்கேத பதங்களை விளக்க, காலாம்ருதம் போன்ற நூல்களை எடுத்துப் பொருளெழுதியிருப்பது அம்மூதாதையரின் சிரத்தையை உணர்த்துகிறது. 'குருக்கள்' அவர்கள் தான் படித்த விஷயங்களையும் பிற பத்துபகுதிகளாய் இந்நூலில் சேர்ப்பதால் அவ்வவாவினை சிறப்பாகத் தணித்திருக்கிறார். பிரதிஷ்டா முஹூர்த்தங் களை ஒருசேர ஆராய விரும்பும் ஆதிசைவர்களுக்கு இந்நூல் வரமாகும்.

இந்நூலினைக் கையாள்பவர்கள் இதனை சாதாரணமாகப் படிப்பதைவிட கீழ்கண்டவாறு ஒப்பிட்டுப்படித்தால் இந்நூற்பயன் வெகுவாய் அமையும். அதாவது, அனைத்துப் பகுதிகளிலும் உள்ள உகந்த காலங்களையும், தகாத காலங்களையும் பிரித்து அறியவேண்டும். அதிலும், முதலில் வருடங்கள், பிறகு அயனங்கள் பிறகு அயனங்களுக்குட்பட்ட மாதங்கள், சாந்த்ரமான மாதங்கள், பக்ஷங்கள் பக்ஷங்களிலும் பல பட்சங்கள் பிறகுதிதிகள், வாரங்கள் நக்ஷத்திரங்கள், யோகங்கள், கரணங்கள், ராசிகள் (லக்கினங்கள்) பிறகு வேளைகள், லக்கினத்திற்கேற்ப கிரஹ நிலைகள் என்ற முறையில் அனைத்துப் பகுதிகளையும் ஒப்பிடவேண்டும். அதன் பின்பு மூன்று வித காலச்சேர்க்கையை ஒப்பிடவேண்டும். அதாவது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாரமும் நட்சத்திரமும் சேர்ந்தால் எழும் பலன். வாரமும் திதியும் சேர்ந்ததின் பலன். திதியும் நட்சத்திரமும் சேர்ந்தபலன் என்று. இவை அனைத்திற்கும் மேலாக சீரானதாய் அமையாத காலங்களாகிய கிரஹணம், அஸ்தமனம், தூமகேது, எரிநட்சத்திரம் விழுதல் போன்ற காலங்களை முன் கூட்டியே ஒப்பிட்டறிய வேண்டும்.

இவ்வாறு ஒப்பிட்டறியும்போது ஆகம - ஜ்யௌதிஷ நூல்களுக்கும், ஆகம நூல்களுக்கும் இடையேகூட வேறுபாடும் நேரெதிர் கருத்துக்களும் உள்ளதைக் காணலாம். அவ்வாறு நிகழும்போது, அவ்வேறுபாட்டிற்கு வெறேதேனும், அதாவது காலங்களின் சேர்க்கை போன்ற காரணம் உள்ளதா என்பதை ஆராய்ந்து அதற்குத் தகுந்தாற்போல் பொருள் காணவேண்டும். வேறுகாரணம் காணப்படாத போது, ஜ்யௌதிஷ நூல்களைவிட ஆகம நூல்களுக்கே பிராமாண்யம் அளிக்கப்படவேண்டும். ஆகம நூல்களுக்குள்ளேயே வேறுபட்ட கருத்து காணப்பட்டால் அவ்விரு கருத்துக்களையும் முரண்பட்டதாகக் கொள்ளாமல் விகல்பமான இருபக்ஷமாகக் கொள்ள வேண்டும். இதுவே இந்நூல்களைக் கையாளும் விதமும் மரபும் ஆகும்.

உதாரணமாக திருவாதிரை, பூரம், பூரட்டாதி ஆகிய நட்சத்திரங்களை பிரதிஷ்டையின் பொருட்டு, பூர்வகாரணம், உத்தரகாரணம், காலாம்ருதம் போன்ற அனைத்து நூல்களும் தகாததாக விதித்தாலும் பூர்வகாமிகம் காலவிதிபடலம் அவற்றை தேவர்களுக்கு, அதிலும் சிவனுக்கு உகந்ததாக விதிக்கிறது. எனவே இந்நட்சத்திரங்களை ஒரு பக்ஷமாகக் கொள்வதில் தவறேதுமில்லை. ஆனால் இப்பக்ஷத்திற்கு பெரும்பான்மை இல்லை என்பதை உணர்ந்து வேறு வழியில்லாச் சமயம் இவற்றை எடுப்பது சாலச்சிறந்தது. மேலும் பூர்வகாமிகம் - காலவிதிபடலம் அனைத்துக் காலங்களுக்கும் பொதுவானதா அல்லது வாஸ்து சம்பந்தப்பட்டது மட்டுமா? என்பது ஆராயப்பட வேண்டியது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வகையில் இந்நூலை ஆராய்ந்தபோது எழுந்த சந்தேகத்தினை இங்கு எழுதுகிறேன். பூர்வகாரணம் லிங்கஸ்தாபன விதியில் (பக்கம் -) திதி, நக்ஷத்ர, வாரங்களின் சேர்க்கை பலனைக் கூறும்போது வைஷ்ணவ என்றும், ஸௌம்ய என்றும் வருகிறது. இவ்விருபதங்களுக்கும் திதிபரமாக பொருள் கூறினால் ‘துவாதசி’ ‘பௌர்ணமி’ என்றே கூறவேண்டும். அதுவே காகிதப்பிரதியில் உள்ளது.

ஆனால் சுத்த வாக்கிய பஞ்சாங்கத்தில் (மனோன்மணி விலாஸ் பிரஸ்) உள்ள நக்ஷத்ர சேர்க்கைப்பட்டியல்படி, நூலில் காணும் பொருள் முழுமையாகப் பொருந்தவில்லை. எனவே அங்கு வைஷ்ணவ சொல்லிற்கு ‘சிரவணம்’ என்றும் ஸௌம்ய சொல்லிற்கு ‘மிருகசீர்ஷம்’ என்றும் பொருள் கொண்டு மேலும் சில அன்வயமாற்றங்களைச் செய்தால் கீழ்கண்ட பொருள் அமையும்.

பூசம்	- வெள்ளி சேர்ந்தால்	-	தக்தயோகம்
திருவோணம்	- வெள்ளி சேர்ந்தால்	-	தக்தயோகம்
உத்தரம்	- வியாழன் சேர்ந்தால்	-	தக்தயோகம்
மிருகசீர்ஷம்	- வியாழன் சேர்ந்தால்	-	தக்தயோகம்
உத்தராடம்	- திங்கள் சேர்ந்தால்	-	தக்தயோகம்
ஹஸ்தம்	- புதன் சேர்ந்தால்	-	தக்தயோகம்

ஆனால் கையேட்டுப் பிரதியில் இதுபோன்ற மாற்றம் செய்யத் துணிவு வரவில்லை. எனவே ஜ்யோதிட வல்லுனர்களே வேறுபல நூல்களின் ஆதாரம் கொண்டு இதற்கான தீர்வினை வழங்கவேண்டும்.

ஷொஷாநு ஸவர்ஹாநு வஙி தூக்ஷூம்
கூஶக்ஷ்யம் ஙஹூர்வஸ்ஸௌஶ: ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசியுரை

சித்தாந்தபானு, திருமந்திரப் பேரறிஞர்,
ஈசான சிவாச்சாரியார்
சிவஸ்ரீ. சோ. சுப்பிரமணியக் குருக்கள்
கோப்பாய், யாழ்ப்பாணம்.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான ஆதீன அர்ச்சக பரம்பரையினரான சிவஸ்ரீ. சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் அவர்கள் தேவஸ்தானங்களில் பணிபுரியும் குருமாருக்கான ஒரு நூலை வெளியிட்டிருக்கிறார். ஆலயங்களில் பிரதிஷ்டை, பாலஸ்தாபனம் முதலிய காரியங்களை நடாத்துவதற்கு ஏற்ற குற்றமற்ற, அபிவிருத்திக்குரிய நாட்களில் செய்து உலகத்தவர் உயர்நிலை அடையச் செய்வதற்காக இந்த அருமையான நூலை வெளியிட்டு இருக்கிறார். இந் நூல் தமது தந்தையாருக்கும் மாமனாருக்கும் ஓர் ஞாபகார்த்தமாகவும் அமையும் என்பது அவரது எண்ணம் ஆகும்.

பாலஸ்தாபனம் என்பது ஓரிடத்தில் விளங்குகின்ற சாந்நித்தியத்தை இன்னோர் இடத்தில் விளங்கச் செய்வதே ஆகும். சுந்தரமூர்த்தி நாயனார் பரவையாருக்கு சத்தியம் செய்து கொடுப்பதற்காக கோவிலுக்குள் இருந்த தெய்வ சாந்நித்தியத்தை ஸ்தல விருட்சமாகிய மகிழமரத்தடியில் இருக்க வேண்டும் என பிரார்த்தித்தார். இந்த வரலாற்றால் ஒரு இடத்தில் இருக்கின்ற சாந்நித்தியத்தை இன்னோர் இடத்தில் விளங்கச் செய்வது நடைமுறையில் தொன்றுதொட்டு நடைபெற்று வரும் நிகழ்ச்சியே ஆகும்.

ஆதிகாலம் தொட்டு ஜனங்கள் குடியிருப்புக்களில், ஊர்களில் ஆலயங்களை அமைத்து தினந்தோறும் பூஜை, வழிபாடுகளைச் செய்து வந்தார்கள். திருக்கோவில் இல்லாத ஊர்கள் சிறப்புடையன அல்ல என அப்பர் சுவாமிகள் தாம் பாடிய தேவாரத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்கோயிலில்லாத திருவிலூரும்
திருவெண்ணீறணியாத திருவிலூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடாவூரும்
பாங்கினொடு பலதாளிகளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதாவூரும்
அருப்போடு மலர் பறித்திட்டுண்ணா வூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவிகாடே

எனக் கூறியுள்ளார்.

இதனாலே ஊர்கள் தோறும் ஆலயங்கள் அமையவேண்டிய அவசியத்தை வற்புறுத்துகிறார். அவ்வாறு வழிபாட்டுக்குரிய ஆலயங்கள் இல்லாத ஊரில் ஆலயங்கள் அமைக்கத் தொடங்கும் போது முதலில் பாலாலயம் ஒன்று அமைத்து ஒரு வருடம் முதற்கொண்டு பன்னிரண்டு வருட காலங்கள் வரை பூஜை செய்தல் வேண்டும். அதன் பின் மூலாலயம் என்ற பெரிய கோயிலை அமைத்து பிரதிஷ்டை செய்தல் வேண்டும். புதிதாக கோயில் கட்டும் பொழுது முதலில் பாலாலயம் அமைத்து பூஜை செய்தல் முக்கியமான விடயம்.

பாலாலயம் விநா தேவம்
ஜீர்ணோத்தாரம் ந காரயேத்॥

என்ற ஆகமப் பிரமாணத்தால் இந்த பாலாலயங்கள் இரண்டுவகைப்படும். ஒன்று ஆத்தியம் தருணாலயம் இரண்டாவது துவிதீயம் தருணாலயம். கோவில் இல்லாத இடத்தில் முதலில் ஸ்தாபிக்கப்படுவது ஆத்தியம் தருணாலயம் எனவும், பழைய கோயிலின் விக்கிரகங்களில் ஏதும் பழுதடைந்தால் பாலாலயம் கட்டி அதில் ஸ்தாபித்தல் துவிதீயம் தருணாலம் எனவும் கூறப்படுகிறது. அப்படியாக பாலஸ்தாபனம் செய்யும் பொழுது அந்தக் குருக்கள் சொல்கின்ற பிரார்த்தனை இது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

[illegible]

கிரியா லிங்கங்களை 100 வருடத்திற்கு மேல் இடம் பெயர்க்கக் கூடாது. அதனை ஆகமத்தில் சொல்லப்பட்டபடி மரத்திலோ அல்லது துணியினால் எழுதப்பட்ட சித்திரத்தில் பாலாலய மூர்த்தியை ஆவாகணம் செய்தல் வேண்டும். குறிப்பிட்டகால எல்லையில் மூலஸ்தானத்தில் மீண்டும் பிரதிஷ்டை செய்ய வேண்டும். இளங்கோவில் என்பது பாலாயத்தைக் குறிக்கும். இவ்வாறாக தெய்வங்களை பிரதிஷ்டை செய்யும் பொழுதும் பாலஸ்தாபனம் செய்யும் பொழுதும் முகூர்த்த நிர்ணயம் பிரதானமானது.

ஆகமத்தின்படியும், ஜோதிட சாஸ்திரத்தின்படியும் குற்றமற்ற சுபமுகூர்த்தங்களை தெரிந்தெடுத்து பாலஸ்தாபனம், பிரதிஷ்டை செய்தல் வேண்டும். அது அபிவிருத்தியான வாழ்க்கை விருத்தி என்பவற்றை உண்டாக்கும்.

குற்றமுள்ள முகூர்த்தங்களில் பாலஸ்தாபனம் பிரதிஷ்டை செய்தால் ஆலயமும் ஊரும் பாழடையும். இதனால் முகூர்த்த நிர்ணயம் எவ்வளவு பிரதானமானது என்று அறிய முடியும். இதனாலே தான் திருகோண மலையிலே நீண்டகாலம் சிறந்த கல்விமானாக தமிழ், சமஸ்கிருதம், ஆகமம், ஜோதிடம் ஆகியனவற்றில் வல்லவராக சிவாகம வித்யா பூஷணம் எனும் பட்டத்திற்கு உரியவராக விளங்கியிருந்த சிவஸ்ரீ. இ.கு. பூர்ணானந் தேஸ்வரக் குருக்கள் அவர்கள் தமது நீண்டகால அனுபவத்தைக் கொண்டு முகூர்த்த நிர்ணயம் என்ற இந்த அருமையான நூலை ஆகமங்கள், ஜோதிடங்களில் இருந்து தொகுத்து எழுதினார். அப்படியாகத் தொகுக்கும் பொழுது தம்முடைய சம்பந்தியாராகிய நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் பரம்பரை அர்ச்சகரும், இந்நூலின் பதிப்பாசிரியர் சிவஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள் அவர்களோடு கலந்துபேசி பல சந்தேகங்களை சிவாச்சாரியார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிறந்த தேவி பக்தரும் உபாசகரும் ஆவார். இந்த உபாசனை முறைகளை முனீஸ்வரம் தேவஸ்தானம் பெரிய சிரேஷ்டாச்சாரியார் மு. சோமாஸ்கந்தக் குருக்களுடன் இருந்து தெரிந்து கொண்டார் எனவும் அறிகின்றோம். பக்திமான்களும், உபாசகர்களுமாகிய அந்தண சிரேஷ்டர்கள், பூசகர்களாக இருக்கின்றவர்கள் நாளுக்கு நாள் தெய்வீகத்தன்மையில் சிறந்து விளங்கி வருவது அனைவருக்கும் தெரிந்ததே. இத்தகைய பெரியோர்கள் தொகுத்த நூலை இப்பொழுது அச்சில்பதித்து வெளியிடுவது சிவஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள் அவர்களுடைய சிறந்த பணியாகும். இந்நூல் சிவாச்சாரியார் களுக்கு பேருபகாரமாக விளங்கும். சிவாச்சாரியார்களும். சிவாச்சாரிய மாணவர்களும் இந்நூலைப் பெற்று தோஷமற்ற முகூர்த்தங்களைத் தெரிந்தெடுத்து பாலஸ்தாபனம், கும்பாபிஷேகம் இவைகளை நடாத்தி தேவஸ்தானங்களும் உலகமும் சிறப்புற்றோங்க வேண்டும் என்று நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மனை பிரார்த்திக்கிறேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

அணிந்துரை

பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்
தலைவர்: இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்,
சேர்.பொன். இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவனம்,
பரமேஸ்வரன் ஆலயம், நியந்திரீ,
நல்லூர் சிவன் கோவில்

சிவாகமங்கள் திருக்கோயிற்கிரியை மரபுக்குப் பிரமாண நூல்களாகும். அவை கூறும் கிரியை மரபில் பிரதிஷ்டை முக்கியத்துவம் பெறுகின்றது. சிவாகம கிரியாபாதத்தில் கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் பற்றிய விபரங்கள் இடம் பெறுகின்றன. திருக்கோயில் வழிபாட்டு மரபு வளம்பெற இத்தகைய கிரியைகள் பெரிதும் உதவுவன. நாடு வளம் பெறவும் பஞ்சம் பட்டினி போன்ற துயர் நீங்கி மக்கள் சுபீட்சத்துடன் வாழவும் இத்தகைய கிரியைகள் உரிய காலங்களில நிகழ்த்தப்பட வேண்டியதன் அவசியம் பற்றிக் காலங்காலமாக உணரப்பட்டுவந்துள்ளது. சிவாகமக்கிரியை மரபு ஒழுங்காகப் பேணப்படுவதற்கு எமக்கு பத்ததிகள் உதவுவது போன்று அக்கிரியைகள் நிகழ்த்தப்படுவதற்குரிய கால ஒழுங்கையும் சுபமுகூர்த்தத்தையும் அறிந்து கொள்ளும் வகையில் ***'பிரதிஷ்டா முகூர்த்த நிர்ணயம்'*** என்ற இத்தொகுப்பு நூல் ஒன்று வெளிவருவதையிட்டு யான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இந்நூல் காலத்தின் தேவையாகும்.

இத்தொகுப்பு நூலின் ஆசிரியர் சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் ஆவார். இவர் நயினை ஸ்ரீ நாகபூஷணி தேவஸ்தானத்தில் பரம்பரை ஆதீன குருவாக விளங்குபவர். சிறந்த சிவாச்சாரிய மரபைச் சேர்ந்தவர். எமது நாட்டிலும் பிறநாடுகளிலும் எமது சிவாகம மரபு சிறப்பாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வளம்பெற தொண்டாற்றி வருபவர். அண்மையில் கனடா நாட்டில உள்ள ரொறன்றோ துர்க்கையம்மன் கோவில் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் ஒன்றினை மிகவும் விஸ்தாரமாக நிகழ்த்தி நாடு திரும்பியபின், கொழும்பு சம்மாங்கோட்டார் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகத்தை பக்திபூர்வமாகவும் கிரியா நுட்பத்துடனும் தென்னிந்திய சிவாச்சாரியர்களுடன் எமது நாட்டுச் சிவாச்சாரியர்களுடனும் இணைந்து நடத்திய பெருமைக்குரியவர். தமது வாழ்நாளில் அனுபவத்தின் வெளிப்பாடாக பிரதிஷ்டை நிகழ்த்தப்படுவதற்குப் பொருத்தமான முகூர்த்த நிர்ணயம் செய்யும் நடைமுறைகளை யாவரும் அறிந்து பயன்பெறும் வகையில் சிவஸ்ரீ குருக்கள் இந்நூலைத் தொகுத்துள்ளார். இதனை சிவாச்சாரிய உலகமும் சைவ அன்பர்களும் மனமுவந்து வரவேற்பர் என்பதில் ஐயமில்லை.

பிரதிஷ்டை என்பது இறைவனை ஆலயத்தில் வழிபாட்டிற்கென தெய்விகப் பொலிவுடன் நன்கு சாந்நித்தியம் பெறச் செய்வதற்குரிய கிரியை ஆகும். எனவே அக்கிரியை நிகழ்த்துவதற்குரிய காலநிர்ணயம் பற்றி நாமனைவரும் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டிய தேவையுள்ளது. அதற்கேற்ப மிகவும் விபரமாகப் பல விடயங்களை பல நூல்களிலிருந்து பெற்று மரபுக்கேற்ப ஆசிரியர் இந்நூலைத் தொகுத்துள்ளார். தமது முதாதையர் பேணிய இவ்விபரங்களை சிவாச்சாரியர்களது நன்மைகருதி ஆசிரியர் வெளியிட முன் வந்துள்ளமை பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

இத்தொகுப்பு நூலில் உத்தரகாரணாகமம், பூர்வகாரணாகமம், பூர்வகாமிகாகமம், குமாரதந்திரம், காலாமிர்தம், காலப்பிரகாசிகை, முகூர்த்த சிந்தாமணி, காலவிதானம், வீமேசுர உள்ளமுடையான், சூடாமணி உள்ள முடையான், சரசோதிமாலை ஆகிய நூல்களிலிருந்து பிரதிஷ்டைக்குரிய காலநிர்ணயம் தொடர்பான பலவிடயங்களை ஆசிரியர் தொகுத்துத் தருகின்றார். இந்நூலில் உள்ள மற்றுமொரு சிறப்பம்சம் இத்தகைய விதி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முறைகளை ஆலய அறங்காவலர்களும், மற்றும் அன்பர்களும் பயன் பெறத்தக்கவகையில் தமிழ் மொழிபெயர்ப்புத் தரப்பட்டுள்ளமையாகும்.

தேவப்பிரதிஷ்டைக்கான காலநிர்ணயத்தில் கரிநாள் நீக்கப்பட வேண்டிய விபரம், குறித்தமாதங்களில் பிரதிஷ்டை நிகழ்த்துவதால் ஏற்படும் பயன்கள், பிரதிஷ்டை நிகழ்ந்தால் கிடைக்கும் நற்பேறுகள், பிரதிஷ்டைக்குப் பொருத்தமான பட்சங்கள், நீக்கப்பட வேண்டிய திதிகள், பொருத்தமான திதிகள், ஏழுகிழமைப்பலன், நட்சத்திரப்பலன், இராசிகளுக்குள்ள பலன், பகற்பொழுது, இராப்பொழுது பற்றிய பலன், ஆகியவை பிரமாணரீதியில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. திருக்கோயில் தொடர்பான நீண்டகாலப் பாரம்பரியத்தை நிகழ்காலத்தில் நாம் தவறின்றிப்பேண இத் தொகுப்பு நூால் எமக்கு உதவுகின்றது. தேவப்பிரதிஷ்டைக்குரிய ஸ்திரராசிகள், உபய ராசிகள் மற்றும் நீக்கப்படத்தக்க சரராசிகள் கூறப்படுகின்றன. பிரதிஷ்டைக்கான கிரகநிலைகளும் அவற்றின் பலன்களும் மிகத்தெளி வாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. பாபக்கிரகங்கள், சுபக்கிரகங்கள்பற்றிய விளக்கம் பலருக்கும் நன்கு பயன்படக் கூடியது. கோசரபலன் மற்றும் வாஸ்து சாந்திக்குரிய காலம் ஆகியவையும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. காலவிதானத்தை அடிப்படையாகக் கொண்டு நன்றாக முகூர்த்தங்களை ஆராய்ந்து தோஷமற்றதும் குணங்களுடன் கூடியதுமான காலத்தில் பிரதிஷ்டை போன்ற சுபகாரியங்கள் செய்யபட வேண்டும் என்பது இந்நூலில் பொருத்தமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

பல நூல்களில் உள்ள விடயங்களை நன்று திரட்டி தேவப் பிரதிஷ்டைக்குரிய முகூர்த்த நிர்ணயம் இந்நூலில் நன்கு தெளிவாக்கப் பட்டுள்ளது. வளர்ந்து வரும் இளஞ் சிவாச்சாரியர்களும் ஆலய அறங் காலர்களும் தமது கிராம நன்மைகருதி ஆலயப் பிரதிஷ்டைகளை மேற் கொள்வதற்கு சிவஸ்ரீ குருக்களின் இவ்வரிய முயற்சி வழிகாட்டி நிற்கின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் அவர்கள் இந்நூலின் வழி எமது சிவாகம மரபுக்கு வளம் சேர்ந்துள்ளார். அவரது இப்பணியை பாராட்டுவதோடு அவர் மேன்மேலும் இதுபோன்ற பயனுள்ள பல தொகுப்பு நூல்களைத் தொகுத்து வெளியிட்டு தமது நீண்டகால அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கேற்ற வகையில் அவரது அனைத்து முயற்சிகளும் சிறக்கவும் நல்ல தேகசுகத்துடன் இனிதே வாழ்ந்து சிவாகம மரபைப் பேணவும் முன்னெடுக்கவும் எல்லாம் வல்ல நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் திருவருள் பொலிவதாகுக என வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

திருநெல்வேலி

பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஸ்ரீகுருப்யோ நமః

வாழ்த்துரை

வியாகரண சிரோமணி, வியாகரண விசாரத,
சைவாகம வித்வான், சாமவேதாத்யாபி,
சிவஸ்ரீ. எஸ். அருணசுந்தரம். M.A, M.Phil, B.Ed.
(சேகர்)
விரிவுரையாளர், சம்ஸ்கிருதக் கல்லூரி,
சென்னை 4.

அனாதி சைவராகிய பரமேசனால் ஆன்மாக்களின்மேற்கொண்ட அன்பினால் அருளப்பட்டவை ஆகமங்கள்.

"வெஊாமஊள ஊயா வெ்ாகூள துயி வெஹெந வாவ்தி ||"

என்று பார்வதியைக் குறித்த வசனத்தால் இதை உணரலாம். தனது அருவநிலையின் உபாசனையின் பொருட்டு ஞானபாதத்தினையும், அருவுருவ, உருவ வழிபாட்டின் பொருட்டு பிற மூன்று பாதங்களையும் ஆகமங்களில் அருளிய இறைவன், ஆன்மாக்களின் விருப்பத்திற்கேற்ப **'சிந்தாமணி'** கல்போன்று அந்தந்த வடிவம் கொள்கிறார். அதாவது,

"ஓிக்ஃ கூாமுாஓி கூநவஓிந கூநஜ ஓிநூாதுூஂஂதெ்யெ |"

என்று பர்த்ருஹரி கூறியபடி, திசைகள், காலங்கள் போன்ற எவைகளாலும் பிரிக்கப்படாத, உட்படுத்தப்படாத இறைவன், அவைகளுக்கு உட்பட்டது போலக் காட்சியளிக்கும் நிலைகளே அருவுருவ உருவ நிலைகள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறைவனின் இந்நிலைகளை நாம் அனுபவிக்கக் பெரும் துணையாய் நிற்பது காலதத்துவமே ஆகும். காலத்திற்கெல்லாம் அப்பாற்பட்ட இறைவனை ஓரிடத்தில் காலங்களைக் கொண்டு நிலைநிறுத்த, சிவாகமங்களில் உபதேசிக்கப்பட்டவையே பிரதிஷ்டா முகூர்த்தங்கள்.

ஒரு நூற்கண்டில் சுற்றப்பட்ட நூல், அதன் தொடக்கம் முதல் இறுதி வரை எவ்விதப் பாகுபாடுமின்றி ஒன்றாகவே இருப்பது போல காலதத்துவமும் சிருஷ்டி முதல் லயம் வரை எவ்விதப் பிரிவுமின்றி ஒன்றாகவே உள்ளது. இருப்பினும், மேற்கண்ட நூலில் பல்வேறு வண்ணங்கள் பூசப்பட்டால், அவ்வண்ணங்களின் பேதம் காரணமாய், நூலிலும் எவ்வாறு பேதம் உணரப்படுகிறதோ, அதுபோல விண்ணில் உள்ள கிரக நட்சத்திரங்களின் சஞ்சாரங்களுக்கேற்ப, அவற்றின் பேதம் காலதத்துவத்தில் உணரப்படுகிறது. கிரக சஞ்சாரத்தின் பேதம் காலபேதமாய் கொள்ளப்படுகிறது. அக்கிரகங்களில் முக்கியமாய் மிளிரும் **'ஜ்யோதிஸ'** கிரஹங்களாகிய சூரிய, சந்திரர்களை மையமாக வைத்து காலத்தைப் பேசுவதாலேயே காலநூல்களுக்கு **'ஜ்யௌதிஷம்'** என்ற பெயர் வந்தது. இறைவனும் இக்கால வடிவம் கொண்டே நம் கருமங்களுக்கு சாட்சியாய் நிற்கிறான் என்பதை

•"காலாத்மநா த்வயா தேவ யத்த்ருஷ்டம் ஸாக்ஷி விபோ"

என்ற பவித்ர ச்லோகத்தால் அறியலாம்.

எனவே, எவ்விதப்பிரிவுமற்ற காலம் ஸ்திதி என்ற நடைமுறையில் பல்வேறு பேதங்களுடையதாய் இருப்பதால், அவற்றுள் எந்த காலபேதத்தில், அதாவது எந்த காலத்தில் பிரதிஷ்டை என்ற ஈ ஒள் மங்களத்தைச் செய்யவேண்டும் என்று விளக்குபவையே பிரதிஷ்டா முஹூர்த்த விதிகள். இவ்விதிகள் பல்வேறு ஆகமங்களில், பல்வேறு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

படலங்களில் சிதறியுள்ளன. ஜ்யௌதிஷ நூல்களிலும் இவ்விதிகள் காணப்படுகின்றன. இவை அனைத்தையும் ஒன்றுசேர லோகோபகாரமாய் சைவ உலகிற்கு அளிக்க, நயினை சிவஸ்ரீ பரமேசுவரக் குருக்கள் எடுத்துக் கொண்ட பெருமுயற்சியின் பயனே **பிரதிஷ்டா முஹூர்த்த நிர்ணயம்** எனும் இந் நூலாகும்.

இந்நூல் பதிநான்கு சிறு பகுதிகளைக் கொண்டது. அவற்றுள் நான்கு பகுதிகள் 'குருக்கள்' அவர்களின் முதாதையரின் கையேட்டுக் காகிதப்ரதிகள். அதில் மூலச்லோகங்களும், உரைகளும் மிகவும் சிரத்தையுடன் எழுதப்பட்டு இருந்தன. ஆகமங்களை ஒன்றுசேரக் காணவேண்டும் என்ற அவா அவ்வேட்டில் தெரிந்தது. மேலும் மூலாகமங்களில் உள்ள சங்கேத பதங்களை விளக்க, காலாம்ருதம் போன்ற நூல்களை எடுத்துப் பொருளெழுதியிருப்பது அம்மூதாதையரின் சிரத்தையை உணர்த்துகிறது. 'குருக்கள்' அவர்கள் தான் படித்த விஷயங்களையும் பிற பத்துபகுதிகளாய் இந்நூலில் சேர்ப்பதால் அவ்வவாவினை சிறப்பாகத் தணித்திருக்கிறார். பிரதிஷ்டா முஹூர்த்தங் களை ஒருசேர ஆராய விரும்பும் ஆதிசைவர்களுக்கு இந்நூல் வரமாகும்.

இந்நூலினைக் கையாள்பவர்கள் இதனை சாதாரணமாகப் படிப்பதைவிட கீழ்கண்டவாறு ஒப்பிட்டுப்படித்தால் இந்நூற்பயன் வெகுவாய் அமையும். அதாவது, அனைத்துப் பகுதிகளிலும் உள்ள உகந்த காலங்களையும், தகாத காலங்களையும் பிரித்து அறியவேண்டும். அதிலும், முதலில் வருடங்கள், பிறகு அயனங்கள் பிறகு அயனங்களுக்குட்பட்ட மாதங்கள், சாந்த்ரமான மாதங்கள், பக்ஷங்கள் பக்ஷங்களிலும் பல பட்சங்கள் பிறகுதிதிகள், வாரங்கள் நக்ஷத்திரங்கள், யோகங்கள், கரணங்கள், ராசிகள் (லக்கினங்கள்) பிறகு வேளைகள், லக்கினத்திற்கேற்ப கிரஹ நிலைகள் என்ற முறையில் அனைத்துப் பகுதிகளையும் ஒப்பிடவேண்டும். அதன் பின்பு மூன்று வித காலச்சேர்க்கையை ஒப்பிடவேண்டும். அதாவது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாரமும் நட்சத்திரமும் சேர்ந்தால் எழும் பலன். வாரமும் திதியும் சேர்ந்ததின் பலன். திதியும் நட்சத்திரமும் சேர்ந்தபலன் என்று. இவை அனைத்திற்கும் மேலாக சீரானதாய் அமையாத காலங்களாகிய கிரஹணம், அஸ்தமனம், தூமகேது, எரிநட்சத்திரம் விழுதல் போன்ற காலங்களை முன் கூட்டியே ஒப்பிட்டறிய வேண்டும்.

இவ்வாறு ஒப்பிட்டறியும்போது ஆகம - ஜ்யௌதிஷ நூல்களுக்கும், ஆகம நூல்களுக்கும் இடையேகூட வேறுபாடும் நேரெதிர் கருத்துக்களும் உள்ளதைக் காணலாம். அவ்வாறு நிகழும்போது, அவ்வேறுபாட்டிற்கு வெறேதேனும், அதாவது காலங்களின் சேர்க்கை போன்ற காரணம் உள்ளதா என்பதை ஆராய்ந்து அதற்குத் தகுந்தாற்போல் பொருள் காணவேண்டும். வேறுகாரணம் காணப்படாத போது, ஜ்யௌதிஷ நூல்களைவிட ஆகம நூல்களுக்கே பிராமாண்யம் அளிக்கப்படவேண்டும். ஆகம நூல்களுக்குள்ளேயே வேறுபட்ட கருத்து காணப்பட்டால் அவ்விரு கருத்துக்களையும் முரண்பட்டதாகக் கொள்ளாமல் விகல்பமான இருப்பமாகக் கொள்ள வேண்டும். இதுவே இந்நூல்களைக் கையாளும் விதமும் மரபும் ஆகும்.

உதாரணமாக திருவாதிரை, பூரம், பூரட்டாதி ஆகிய நட்சத்திரங்களை பிரதிஷ்டையின் பொருட்டு, பூர்வகாரணம், உத்தரகாரணம், காலாம்ருதம் போன்ற அனைத்து நூல்களும் தகாததாக விதித்தாலும் பூர்வகாமிகம் காலவிதிபடலம் அவற்றை தேவர்களுக்கு, அதிலும் சிவனுக்கு உகந்ததாக விதிக்கிறது. எனவே இந்நட்சத்திரங்களை ஒரு பக்ஷமாகக் கொள்வதில் தவறேதுமில்லை. ஆனால் இப்பக்ஷத்திற்கு பெரும்பான்மை இல்லை என்பதை உணர்ந்து வேறு வழியில்லாச் சமயம் இவற்றை எடுப்பது சாலச்சிறந்தது. மேலும் பூர்வகாமிகம் - காலவிதிபடலம் அனைத்துக் காலங்களுக்கும் பொதுவானதா அல்லது வாஸ்து சம்பந்தப்பட்டது மட்டுமா? என்பது ஆராயப்பட வேண்டியது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வகையில் இந்நூலை ஆராய்ந்தபோது எழுந்த சந்தேகத்தினை இங்கு எழுதுகிறேன். பூர்வகாரணம் லிங்கஸ்தாபன விதியில் (பக்கம் -) திதி, நக்ஷத்ர, வாரங்களின் சேர்க்கை பலனைக் கூறும்போது வைஷ்ணவ என்றும், ஸௌம்ய என்றும் வருகிறது. இவ்விருபதங்களுக்கும் திதிபரமாக பொருள் கூறினால் 'துவாதசி' 'பௌர்ணமி' என்றே கூறவேண்டும். அதுவே காகிதப்பிரதியில் உள்ளது.

ஆனால் சுத்த வாக்கிய பஞ்சாங்கத்தில் (மனோன்மணி விலாஸ் பிரஸ்) உள்ள நக்ஷத்ர சேர்க்கைப்பட்டியல்படி, நூலில் காணும் பொருள் முழுமையாகப் பொருந்தவில்லை. எனவே அங்கு வைஷ்ணவ சொல்லிற்கு 'சிரவணம்' என்றும் ஸௌம்ய சொல்லிற்கு 'மிருகசீர்ஷம்' என்றும் பொருள் கொண்டு மேலும் சில அன்வயமாற்றங்களைச் செய்தால் கீழ்கண்ட பொருள் அமையும்.

பூசம்	- வெள்ளி சேர்ந்தால்	-	தக்தயோகம்
திருவோணம்	- வெள்ளி சேர்ந்தால்	-	தக்தயோகம்
உத்தரம்	- வியாழன் சேர்ந்தால்	-	தக்தயோகம்
மிருகசீர்ஷம்	- வியாழன் சேர்ந்தால்	-	தக்தயோகம்
உத்தராடம்	- திங்கள் சேர்ந்தால்	-	தக்தயோகம்
ஹஸ்தம்	- புதன் சேர்ந்தால்	-	தக்தயோகம்

ஆனால் கையேட்டுப் பிரதியில் இதுபோன்ற மாற்றம் செய்யத் துணிவு வரவில்லை. எனவே ஜ்யோதிட வல்லுனர்களே வேறுபல நூல்களின் ஆதாரம் கொண்டு இதற்கான தீர்வினை வழங்கவேண்டும்.

ஶேஷாஸ் ஸர்வாஸ் ஸந்தி தஜ்ஞை:
ஸுஶக்யம் ஸஹாயவத்பி: ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று இப்பதிப்பாசிரியர் காலவிதான வசனத்தை (பக்கம் -) மேற்கோள் காட்டியதுபோல, ஒன்றாயினும் பல்வேறாய் காட்சியளிக்கும் காலதத்துவத்தின் சூட்சுமத்தை அளப்பது அவ்வளவு எளிதல்ல. எனினும்

ஷுஷு ஷொஷெ ஶுணாயிகெ

என்று பூர்வகாமிக, காலவிதான வசனங்களின்படி கூடியவரை நல்ல முஹூர்த்த காலத்தினைத் தேர்ந்தெடுக்க இந்நூல் மிகவும் உதவும். வயது முதிர்ந்த காலத்திலும் இப்பதிப்பாசிரியர் சிவஸ்ரீ குருக்களிடமிருந்த அயராத லட்சியம் காரணமாக நானும் இப்பணியில் கலந்துகொள்ள நேரிட்டதற்கு எண்ணிலா நன்றிகளையும் ஸாஷ்டாங்க நமஸ்காரங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆய்வுரை

பிரதிஷ்டா முஹூர்த்த நிர்ணயம் என்ற இந்நூலில் பல்வேறு நூல்களின் மூலவசனங்கள் தொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில மாறுபட்ட கருத்துக்களும், விசேஷ விஷயங்களும், சிலவற்றில் இல்லாமல் பிறவற்றில் காணப்படுகின்றன.

இதுபோல் முரண்பட்ட மற்றும் சிறப்புக்கருத்துக்களின் விஷயத்தில் எவ்வாறு முடிவு எடுக்கப்படவேண்டும் என்பதனை நாம் சாஸ்திரங்களில் விரிவாகக் காணலாம்.

அவ்வகையில் திசைகாட்டியைப்போல சிறியதாய் எடுக்கப்பட்ட முயற்சியே இவ்வாய்வுரை ஆகும். பூர்வகாரணம் உத்தரகாரணம் பூர்வகாமிகம் காலாம்ருதம் ஆகிய நூல்களின் சில விஷயங்கள் இங்கே ஒப்பாய்வு செய்யப்படுகின்றன.

ஆருத்ரா நக்ஷத்ரம்

திருவாதிரை எனும் ஆருத்ராவை, பிரதிஷ்டையின் பொருட்டு பூர்வ காரணம் எடுக்கவில்லை. உத்தரகாரணம் 'சர்வநாசம்' ஏற்படும் என்று விபரீத பலனைக் கூறுகிறது. ஆனால் பூர்வகாமிகமோ சிவனுக்கு உகந்ததாகக் கூறும். எனவே சிவன் விஷயத்தில் வேறு வழியில்லாச்சமயம் 'ஆதிரை' தவறற்றது எனத் தெளிகிறது.

இதுபோல பூரம், விசாகம், பூராடம், அவிட்டம், பூரட்டாதி ஆகிய நக்ஷத்திரங்கள் உத்தரகாமிகத்திலும், சில காலாம்ருதத்திலும் எடுக்கப்பட்டுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலும், தக்ஷிணாயனத்தை பூர்வகாரணம், உத்தரகாரணம், காலாம்ருதம் ஆகியவை குறிப்பிடாவிட்டாலும், பூர்வகாமிகம், ச்ராவணம், (ஆவணி), ஆச்வயுஜம் (ஐப்பசி), கார்த்திகம் (கார்த்திகை) ஆகிய மாதங்களை மத்யமபக்ஷமாகக் குறிப்பிடுகிறது. ஆனால் அம்மாதங்கள் சாந்திரமான மாகக் கூறப்பட்டுள்ளனவா! ஸௌரமானப்படியா? என்பதை வேறு சில ஆகமங்களுடன் ஒப்பிட்டுத் தீர்மானிக்க வேண்டும். இதுபோல உத்தர காரணமும், மேற் கூறிய மூன்று மாதங்களை பிரதிஷ்டைக்கு உகந்ததாகக் குறிப்பிடுகிறது.

பக்ஷவிஷயத்தில் மூன்று பக்ஷங்கள் காணப்படுகின்றன.

1. சுக்லபக்ஷத்தை ஸ்வீகரித்து, க்ருஷ்ணபக்ஷத்தைத் தவிர்ப்பது ஒரு பக்ஷம். இதனை பூர்வகாரணத்தில் காணலாம்.
2. சுக்லபக்ஷத்தையும், க்ருஷ்ணபக்ஷத்தில் ஸப்தமி வரையும் ஸ்வீகரிப்பது ஒரு பக்ஷம். இதனை பூர்வகாமிகத்தில் காணலாம்.
3. பூர்வகாமிகம் க்ருஷ்ணபக்ஷத்தினையும் சேர்த்து உத்தமபக்ஷம், மத்யமபக்ஷம் என இருவிதமாய் விளக்குகிறது. இதனை கீழ்காணும் வரைபடத்தில் காணலாம்.



இது மூன்றாவது வகை.

இதுபோல ஞாயிறு, செவ்வாய், சனி ஆகிய கிழமைகளை பூர்வ காரணம் நிநதித்தாலும், உத்தரகாரணம் ஞாயிறை சுகமளிப்பதாகக் கூறு கிறது. இருப்பினும் குறிப்பிட்ட நட்சத்திரங்கள் சேர்ந்தால் மேற்கூறிய கிழமை களிலும் பிரதிஷ்டை செய்யலாம் என பூர்வகாரணத்திலேயே காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலும் சூலம், கண்டம், வ்ருத்தி ஆகிய யோகங்களை பூர்வ காரணம் நிந்தித்தாலும், உத்தரகாரணம் அவற்றிற்கான சிறப்புப் பயன் களையே கூறுகிறது.

இதுபோல சரராசிகளை பூர்வகாமிகம் ஒட்டுமொத்தமாக தடுத்தாலும், உத்தரகாரணம் மேஷம், கடகம், துலாம், ஆகிய சரலக்கினங்களுக்கு சிறப்புப் பலன்களைக் கூறி உகந்ததாகவே குறிப்பிடுகிறது. ஆனால் உபயராசியாகிய தனு லக்கினத்தினை பூர்வகாமிகம் நிந்தித்தாலும், உத்தரகாரணம் 'ஞானம் பெறுதலை' அதன் பயனாகக் குறிப்பிடுகிறது.

எனவெ பிரதிஷ்டைக்கான காலங்கள் ஆகமங்களில் முரண்பட்டே காணப்படுகின்றன. என பொருள் கொள்ளாமல் முரண்பட்டதுபோலக் காணப்படும் காலங்கள் இரண்டாம் வகையில் எடுத்துக்கொள்ளத் தக்கவையே. அவ்வாறு எதிலும் முரண்பாடு இல்லாதவை உத்தமமானவை என தீர்மானிக்கவேண்டும்.

யஜ்ஞாநாநுகூலம் முஹூர்த்தம் ஸ்வதோஷகுணாதிகம்

என்ற காமிகாகம வசனப்படி, சிற்சில தோஷங்கள் இருப்பினும், குணங்கள் அதிகம் உள்ள காலத்தினைத் தேர்ந்தெடுப்பதே இறைவனின் சித்தமாகும்.

சிவஸ்ரீ. எஸ். அருண சுந்தரம M.A, M.Phil, B.Ed
விரிவுரையாளர், சமஸ்கிருதக் கல்லூரி,
சென்னை 4.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நான்முகம்

நயினாதீவு இலங்கையின் வடபால் உள்ள சப்த தீவுகளில் ஒன்றாகும். அறுபத்து நான்கு சக்திபீடங்களில் ஒன்றானதுமான புவனேஸ்வரி பீடமும், சரித்திரப் பிரசித்தி பெற்றதும், மகப்பேறுக்கும். நாகதோஷம் நீங்குவதற்கும் பிரசித்தி பெற்ற ஆலயமான நாகபூஷணியம்மன் இங்கு கோவில் கொண்டு எழுந்தருளியுள்ளாள். மணிபல்லவம், மணித்துவீபம், நாகதுவீபம் என்ற பழம் பெரும் பெயர்களால் அழைக்கப்பட்டதும் குறிப்பிடத் தக்கது. லங்காயாம் சாங்கரீதேவி என்றும் பழம் பெரும் பெருமையுடையது மாகும். இவ்வாலயத்தில் அன்னை சுதந்திர சக்தியாக உள்ளாள். கர்பக்கிரகத்தில் அருவுருவமாக மிகவும் பழமை வாய்ந்த சிலாரூபமும் ஐந்து தலை நாகமும் உண்டு. அம்பாள் ஒரு பீடமாகவும் ஐந்து தலை நாகம் பின்னுக்கு தனியாகவும் அமைந்துள்ளது. நச்சுவாய் அகிமாலினி என்று அபிராமிப்பட்டர் கூறியது நாகபூஷணி அம்பாளையே என பழைய கர்ண பரம்பரைக் கதை கூறுகிறது. இச் சிலை அமைப்புக்களைக் கண்ட ஆராய்ச்சியாளர்கள் இது ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியதாகும் எனக் கூறுகின்றனர்.

இத்தகு பெருமை வாய்ந்த ஆலயத்தில்தான் எனது தந்தை ***சிவஸ்ரீ சுவாமிநாதக் குருக்கள***. இவ் ஊரில் இவரின் பிரபலமான பெயர் சின்னத்துரை குருக்கள் என்பதாகும். அன்னைக்கு பூஜைகள் செய்து வந்தார். எனது தந்தையார் யாழ்ப்பாணத்தில் நாவலர் பாடசாலையில் கல்வி பயிலும் போது திருகோணமலை ***சிவாகம வித்யா பூஷணம் சிவஸ்ரீ. இ.கு. பூர்ணானந் தேஸ்வரக்*** குருக்களுடன் தொடர்பு ஏற்பட்டது. இருவரும் ஒன்றாகவே நாவலர் பாடசாலையில் கல்வி பயின்றனர். இலங்கையில் இவர்கள் குருத்துவம், கும்பாபிஷேகம் செய்யாத இடங்களே இல்லை எனலாம். என் தந்தையார் தனது ஒய்வு நேரங்களில் ஆகம ஆய்வுகள் செய்து கையெழுத்துப் பிரதிகளை எழுதி வைத்திருந்தார். அதன் பயனே இன்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்நூல் வரக்காரணம் ஆகும். எனது 26வது வயதில் தந்தையார் இறைவனடி சேர, எனது பெரிய தந்தையின் மகனான *பிரதிஷ்டா பூஷணம் சிவாகம ஞானபானு சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்* குருக்கள் அவர்களே எனக்கு சிவதீக்ஷை, ஆசாரியாபிஷேகம் செய்து வைத்தார்கள். அண்ணா அவர்கள் ஆழ்ந்த அறிவும், விவேகமும், கிரியைகளை உணர்ந்து செய்யும் ஆற்றலும் உடையவர். ஆகமாமிர்தவர்ஷிணி என்ற நூலை யாத்து வெளியிட்டவர். அதன் பெருமை உலகறிந்த உண்மை. இவரோடு 25 வருடம் உதவியாளராகவும், சாதகராகவும் இருந்த எனக்கு லண்டன், கனடா, அவுஸ்திரேலியா, சிங்கபூர், மலேசியா எல்லாம் சென்று பெருமை பெற அன்னாரது ஆசியே காரணம். எனது மாமா சிவஸ்ரீ.இ.கு. பூர்ணானந்தேஸ் வரக் குருக்கள் திருகோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில் துவஜாரோகணத்தை என்னைக் கொண்டு செய்வித்தது எனக்குக் கிடைத்த பெரும் பேறாகும். பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் கொழும்பில் இருந்த ஐந்து வருடகாலத்தில் தினசரி அவர்களுடன் காலை மாலை வேளைகளில் உரையாடும் சந்தர்ப்பங்கள் நிறையவே கிடைத்தன. அவ்வுரையாடலின் போது பல அரிய விஷயங்களை தெளிவு படுத்தி னார்கள். இது நான் செய்த புண்ணியமே.

இவ்வாறு பல வழிகளாலும் எனக்கு கிடைத்த அனுபவமும், எனது தந்தையார் எழுதி வைத்திருந்த நூலினால் நான் பெற்ற பயன்களுமே எனது முன்னேற்றத்திற்கும், முகூர்த்தங்களை அறிந்து செய்வதற்கும் பயன்பட்டது. எனது முன்னேற்றத்திற்கு இவை எவ்வாறு பயன்பட்டதோ அதுபோல் எங்கள் இளம் குருமாருக்கும் பயன்படவும், அவர்களது முன்னேற்றத்திற்கு உதவவும் வேண்டும் என்ற பேரெண்ணத்தின் காரணமாகவே இந்நூலை வெளியிடுகின்றேன்.

பிரதிஷ்டா முகூர்த்த நிர்ணய கையெழுத்துப் பிரதியில் எல்லாம் ஆகம வசனங்கள் சேர்த்து எழுதப்பட்டு இருந்தது. சிலவற்றிற்கு பெயரும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாக்கியங்களும் இருந்தன. சிலவற்றிற்கு அடிக்குறிப்பு இல்லை. அவைகளைத் தேடும் முயற்சியில் இறங்கினேன்.

வியாகரண சிரோமணி, வியாகரண விசாரதா, சைவாகம வித்வான், சாமவேதாத்யாயி, ***சிவஸ்ரீ எஸ். அருணசுந்தரம*** சிவாச்சாரியார் M.A, M.Phil, B.Ed. (சேகர்) விரிவுரையாளர் சென்னை சமஸ்கிருதக் கல்லூரி. இவர்கள் சமஸ்கிருத வாக்கியங்களைப் பிரித்து, யாவரும் அறிந்து கொள்ளக் கூடியவாறு இலகு படுத்தி எழுத பெரிதும் உதவி செய்தார். கொம்பனித் தெரு சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பிரதமகுரு ஜோதிட மாமணி ***சிவஸ்ரீ எஸ். சந்திரசேகரக*** குருக்களிடம் சென்றபோது சூடாமணி உள்ளமுடையான் நூலின் பிரதி தந்து உதவினார்.

அம்பாறை ஆலையடி வேம்பு பிரதமகுருவும், கனடா ஸ்ரீ சித்தி விநாயகர் வாக்கிய பஞ்சாங்க வெளியீட்டாளருமான சிவாகம கிரியாபீடம் ***சிவஸ்ரீ வீ.கு. சிவஞானச் செல்வக்*** குருக்கள் அவர்கள் வீமேசுர உள்ள முடையான், சூடாமணி உள்ளமுடையான், பெரிய வருஷாதி நூல், சரசோதி மாலை, ஜீர்ணோத்தாரண தசகம் ஆகிய அரிய நூல்களை நான் கேட்டதும் அதன் பிரதிகளை உடனே கனடாவில் இருந்து விரைவுத் தபாலில் மனமுவந்து அனுப்பி வைத்தார். இவர் இளைப்பாறிய தலைமை ஆசிரியரும், தமிழ் சமஸ்கிருதம், ஜோதிடம் என்பவற்றில் வல்லுனரும் ஆவார். இவர் செய்த உதவி பெருமை உடையதாகும்.

அறிவுச் செம்மலும் இலங்கையின் மூத்த சிவாச்சாரியரும், சாஸ்திர அறிவும், தமிழ் அறிவும் நிரம்பியருவம், திருமந்திரத்தில் பேராற்றல் உள்ள வருமான சிவாகம ஞானபானு, சித்தாந்தச் செம்மல் கோப்பாய் சிவஸ்ரீ.கி.சுப்பிரமணிய குருக்கள் அவர்களுக்கும் எனது நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எனது வேண்டுகோளை ஏற்று அன்புடன் அணிந்துரை தந்த பேராசிரியர் பி. கோபாலகிருஷ்ண ஐயர் (தலைவர் இந்து நாகரீகத்துறை யாழ் பல்கலைக்கழகம்) அவர்கள் யாழ் பல்கலைக் கழகத்தில் இந்து நாகரிகத்துறையில் சிறப்பாகத் திகழ்வதோடு, பல சந்தேகங்களைக் கேட்டு அறிந்து அதற்கு சான்று பகர்வதில் அறிவு மிக்கவர். எந் நூல் வெளியீட்டிலும் அவரது அணிந்துரை நன்னூல் தொல்காப்பியத்தில் கூறியிருப்பது போல, அணிந்துரையை வாசித்தே அந்நூலில் உள்ள சகல விஷயங்களையும் அறிந்து கொள்ள முடியும். அவர்கட்கும் என்றும் எனது பணிவான நன்றிகள்.

இணுவில் கந்தசுவாமி கோவில் தர்மகர்தா சிவாகம கிரியாரத்தினம் அமரர். கு. இராமநாதக் குருக்கள் அவர்களின் பேரன் பிரம்மஸ்ரீ பால இந்திரசர்மா இவ் விஷயங்கள் அனைத்தையும் கிரந்த லிபியில் எழுதித்தந் துதவினார். இவர் சிறந்த கல்விமானாக ஜெயத்துடன் விளங்க இறையருளை வேண்டி எனது பூரண நல்லாசிகளை நல்குகிறேன்.

இந்நூலை நல்ல முறையில் கணனி மூலம் வடிவமைத்து பல சிரமங்களுக்கு மத்தியிலும் உதவிபுரிந்த பிரம்மஸ்ரீ க. விஸ்வநாத சர்மா (விசு) அவர்கட்கும், இந்நாலை அழகிய முறையில் அச்சிட்ட உதவிய லஷ்மி பிரிண்டர்ஸ் உரிமையாளர் நீலகண்டன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இந்நூல் எழுத வேண்டும் என என்றும் உறுதுணையாக இருந்து இவை எல்லாம் சிறப்பாக நடக்க மந்திரி போன்று இருந்த அன்பகலா தர்ம பத்தினி பி. லலிதா அவர்கட்கும் பிள்ளைகள் மருமக்கள் அனைவருக்கும் அன்னை நாகபூஷணியின் பாதம் பணிந்த எனது நல்லாசிகள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அர்த்த நாரீஸ்வரர் த்யானம்

ஏகாஸ்யம் வாமபா₄க₃ந்து ஹராஸ்யம் த₃க்ஷிணம் வபு: |
ஸஜடாமகுடம் த₃க்ஷம் ஶஶ்யங்கிதமூர்த₄ஜா: ||
கர்ணம் மகுடம் வாமே குஞ்சிகேன ஸமந்விதே |
ஶ்ருஶ்ராட த₃க்ஷிணே பா₄கே₃ நயநார்தே₄ன ஸம்யுதே ||
வக்த்ரம் து வாமகர்ணஸ்யாசு வாமே குசேனாபி ஸம்யுதே |
ஸநக்ர குண்ட₃லம் ஸவ்யே தம் விநா வாம கர்ணகே ||
ஸவ்யே டங்காப₄யௌ ஹஸ்தே உத்பலம் வாமகே கரே |
தே₃வ்யா யஸ்யா யோஷிதாஸ்யம் வா த₃ர்ணாஸக்தலோசநே ||
த₃ர்ணம் கவசஸ்யாசு தநூஷி ஸ்த₂ம்ப₄மத்₄யத: |
தத்வஷும் ஜ்ஞாநஜாங்காரம் வாமே ஸேஸாபா₄ விராஜிதே ||

ஏகாபா₄ம் ஸ்த₂ணோவைதம் ஷித்ரவஸ்த்ர பரித₄பே |
வ்யாக்₄ராஜிநாம்ப₃ரம் ஸவ்யவாமம் கு₃ஞ்சிதஶிரோவரே ||
ஸூசிதம் வாமசரணம் ந்ருத்யவாமண்ட₃லம் க்ருதே |
அந்யே வாமவகு ஶேஷம் குர்வ்யா ஹி ஜ்ஞாநிஶ்வரா: ||

விஷ்ணுமாந்த பிரதிஷ்டாவிதி 2, 3, 4, 5, 6, 7, 8.A, 12 B ஸ்லோகங்கள்

காமிகாகமம் உத்தரபாகம்

அர்த₄நாரீஶ்வர மூர்த்தி:

அதா₂த: ஸம்ப்ரவக்ஷ்யாமி அர்த₄நாரீஶ்வரம் ஶ்ருணு
வக்ஷ்யேஹம் லோகரக்ஷார்த்₂ம் ஶிவார்த்₄ம் பார்வதீவரா
ஸவ்யே ஸ்யாச்சு விஶ்வாகாரம் வாமே ஶ்யாமநிப₄ம் ஶிவா
கர்ணமகுடாம் மௌலிம் ஜடாமகுடமண்டி₃தாம்
ஶ்ருஶ்ராடே₃சார்த்₄ நயநம் ஸவ்யே சைவ ஸரோஜயே |
டங்கம் த₃க்ஷிணே பார்ஶ்வே ந்ருத்யமுத்₃ராக்ஷமாலிகே
வாமே நீலோத்பலம் சைவ ஸ்தநமேகம் து பாத₃த:
க₃ஜசர்மதா₄ரம் த₃க்ஷே து₃கூலம் வாமபா₄க₃கே
பஞ்சவீராவதிஸ்த₂ம் பத்₃மவாஸ்வ பத்₃மஜயா
ஸர்வம் யஸ்யாஸ்வாவிஶேஷேண அர்த்₄ந்யஸ்தாயகோத₃ம:||

(உத்தரகாரணாகமம் அர்த்தநாரீஸ்வர பிரதிஷ்டா படலம் பக்கம் 299-300)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

𑌅𑌰𑍍𑌧𑌨𑌾𑌰𑍀𑌶𑍍𑌵𑌰𑌂 𑌚𑍈𑌵 𑌚𑌤𑍁𑌰𑍍𑌬𑌾𑌹𑍁𑌂 𑌦𑍍𑌵𑌿𑌬𑌾𑌹𑍁𑌕𑌂
𑌦𑍍𑌵𑌿𑌯𑌂 𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 𑌚𑍈𑌵 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌸𑌮𑌭𑌙𑍍𑌗𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍
𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌕𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌪𑌾𑌦𑌂 𑌵𑌾𑌮𑌪𑌾𑌦𑌂 𑌤𑍁 𑌕𑍁𑌞𑍍𑌚𑌿𑌤𑌂
𑌵𑌾𑌮𑌾𑌰𑍍𑌧𑌂 𑌪𑌾𑌰𑍍𑌵𑌤𑍀𑌰𑍂𑌪𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌰𑍍𑌧𑌂 𑌤𑍁 𑌶𑌙𑍍𑌕𑌰𑌂
𑌕𑌹𑌯𑌂 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌶𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌪𑌰 𑌹𑌸𑍍𑌤 𑌦𑍍𑌵𑌯𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍
𑌵𑌾𑌮𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑌰𑌕𑍍𑌷𑍈𑌕𑍇𑌯𑍂𑌰 𑌶𑌿𑌰𑌸𑌿 𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌕𑍂𑌰𑍍𑌪𑌰𑌃
𑌕𑌰𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌕𑌟𑌕𑍇𑌨 𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌂
𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌜𑌂 𑌵𑌾 𑌪𑍍𑌰𑌯𑍋𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌸𑌵𑍍𑌯𑌰𑍂𑌪𑌾𑌕𑌾𑌰𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍
𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌂 𑌵𑌾𑌮𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌶𑌿𑌵𑌭𑍂𑌷𑌣𑌂
𑌸𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑌂 𑌤𑍁 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌚 𑌤𑍍𑌰𑌿𑌶𑍂𑌲𑌕𑌂
𑌅𑌰𑍍𑌧𑌵𑌕𑍍𑌷𑌶𑌿𑌰𑍋𑌨𑍍𑌯𑌸𑍍𑌤 𑌕𑍂𑌰𑍍𑌪𑌰𑌂 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑌕𑍇
𑌅𑌰𑍍𑌧𑌨𑌾𑌰𑍀𑌶𑍍𑌵𑌰𑌂 𑌚𑍈𑌵 𑌸𑌰𑍍𑌵𑌲𑌕𑍍𑌷𑌣𑌸𑌂𑌯𑍁𑌤𑌂
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌪𑌾𑌦𑌂 𑌹𑌸𑍍𑌤𑍇 𑌪𑌦𑍍𑌮𑌂 𑌤𑍁 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃

சகலாதிலகாரம் தஞ்சை
சரஸ்வதி மகால்
No. 92

அர்த்த நாரீஸ்வரரின் பொதுலக்ஷணம

அர்தநாரீஸ்வரரை இரண்டு கைகளுடனே அல்லது நான்கு கைகளுடனே அமைக்கலாம். இந்த மூர்த்திக்கான சூத்திரம், சமபங்கத்திற்கான முறையில் தொங்கவிடப்பட வேண்டும். வலதுகால் ஸ்வஸ்திகமாகவும் இடதுபாதம் சிறிது வளைக்கப் பட்டும் இருக்க வேண்டும். இடது பாதிபார்வதியின் உருவத்தோடும் வலது பாதிசங்கரரின் உருவத்தோடும் இருக்கவேண்டும். இடது பாகத்தில் ஸ்திரீகளுக்கான ஆபரணங்களையும் வலது பாதியில் புருஷர்களுக்கான ஆபரணங்களையும் அணிவிக்க வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

𑌅𑌰𑍍𑌧𑌨𑌾𑌰𑍀𑌶𑌮𑍂𑌰𑍍𑌤𑍇𑌸𑍍𑌤𑍁 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇𑌽𑌹𑌂 𑌶𑍃𑌣𑍁 𑌸𑍁𑌵𑍍𑌰𑌤।
𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌂 𑌚 𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌜𑌂 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌂 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍॥
𑌸𑌮𑌭𑌙𑍍𑌗𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑍋𑌕𑍍𑌤𑌮𑌾𑌰𑍍𑌗𑍇𑌣𑍈𑌵 𑌨𑌤𑌾𑌦𑌯𑌃।
𑌸𑍁𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌪𑌾𑌦𑌂 𑌵𑌾𑌮𑌪𑌾𑌦𑌂 𑌤𑍁 𑌕𑍁𑌞𑍍𑌚𑌿𑌤𑌮𑍍॥
𑌪𑌾𑌦𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌾𑌵𑌰𑍍𑌤𑍀𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌃।
𑌅𑌭𑌯𑌂 𑌪𑌰𑌶𑍁𑌂 𑌸𑌵𑍍𑌯𑍇 𑌹𑌸𑍍𑌤𑍇 𑌤𑌤𑍍𑌤𑍁 𑌶𑌿𑌵𑌾𑌂𑌶𑌕𑌃॥
𑌵𑍃𑌷𑌭 𑌮𑍂𑌰𑍍𑌧 𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌕𑍂𑌰𑍍𑌪𑌰𑌂 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑌕𑌃।
𑌤𑌦𑌨𑍍𑌯𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑍇 𑌤𑍁 𑌕𑌟𑌕𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍॥
𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌜𑍇 𑌵𑌰𑌦𑌂 𑌸𑌵𑍍𑌯𑍇 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑍇 𑌤𑍁 𑌪𑍁𑌷𑍍𑌪𑌧𑍃𑌤𑍍।
𑌶𑌿𑌵𑌸𑍍𑌯𑌾𑌭𑌰𑌣𑌂 𑌸𑌵𑍍𑌯𑍇 𑌵𑌾𑌮𑍇 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌭𑍂𑌷𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍॥
𑌪𑍁𑌂𑌸𑍍𑌤𑌨𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌵𑌾𑌮𑍇 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃 𑌪𑌯𑍋𑌧𑌰𑌃।
𑌅𑌥𑌵𑌾 𑌕𑍁𑌞𑍍𑌚𑌿𑌤𑌂 𑌸𑌵𑍍𑌯𑌂 𑌪𑌾𑌦𑌂 𑌵𑌾𑌮𑌂 𑌤𑍁 𑌸𑍁𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍॥
𑌸𑌵𑍍𑌯 𑌶𑍂𑌲𑌧𑌰𑌂 𑌹𑌸𑍍𑌤𑌂 𑌵𑌾𑌮𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌧𑌰𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍।
𑌵𑌰𑌦𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌹𑌸𑍍𑌤𑌮𑌨𑍍𑌯𑌾𑌕𑍍𑌷𑌶𑌿𑌰𑌕𑍂𑌰𑍍𑌪𑌰𑌃॥
𑌕𑌪𑌾𑌲𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌹𑌸𑍍𑌤𑍇 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌸𑌾𑌰𑌿𑌤𑌮𑍍।
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌰𑍌𑌦𑍍𑌰𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌃 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌾𑌮𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌤𑍁 𑌶𑍀𑌤𑌲𑌃॥
𑌮𑍁𑌕𑍁𑌲𑌂 𑌜𑍋𑌰𑍁𑌦𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑌵𑍍𑌯𑍇 𑌲𑌾𑌞𑍍𑌛𑌨𑌨𑍍𑌯𑌕𑍇।
𑌏𑌵𑌂 𑌸𑌮𑌾𑌸𑌤𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑌰𑍍𑌧𑌨𑌾𑌰𑍀𑌶𑍍𑌵𑌰𑌂 𑌹𑌰𑌃॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

𑌅𑌥 𑌅𑌰𑍍𑌧𑌨𑌾𑌰𑍀𑌶𑍍𑌵𑌰𑌮𑍂𑌰𑍍𑌤𑍇𑌃 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍

𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌂 𑌤𑍍𑌰𑌿𑌣𑍇𑌤𑍍𑌰𑌂 𑌚 𑌶𑌿𑌵𑌾𑌂𑌶𑌂 𑌦𑌕𑍍𑌷𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌕𑍇।

𑌵𑌾𑌮𑌾𑌰𑍍𑌧𑌂 𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑍇 𑌤𑍁 𑌶𑍀𑌤𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌕𑌲𑌾𑌯𑍁𑌤𑌃॥ ௧ ॥

𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌧𑌂 𑌤𑍁 ([illegible]) 𑌲𑌲𑌾𑌟𑍇 𑌤𑍁 𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌂𑌶𑌕𑍇॥

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌂 𑌕𑌰𑍍𑌣𑍇 𑌦𑌧𑌨𑍁 𑌪𑌾𑌦𑍇 𑌤𑍁 𑌪𑌤𑍍𑌰𑌕𑌃॥ ௨॥

𑌕𑌟𑍍𑌯𑌾𑌂 𑌵𑌾 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌂 𑌪𑌾𑌦𑍇 𑌹𑍍𑌯𑌧𑌟𑌙𑍍𑌕𑌳 𑌚 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 ।

𑌵𑌾𑌮𑍋𑌦𑍍𑌵𑌯𑌕𑍇 𑌪𑌾𑌦𑍇 𑌕𑍇𑌯𑍂𑌰𑌕𑌟𑌕𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ॥ ௩॥

𑌵𑌾𑌮𑌾𑌂𑌶𑍇 𑌤𑍁 𑌸𑍍𑌤𑌨𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑍍𑌵𑌾𑌹𑌾𑌕𑌾𑌰 (𑌕𑌾𑌲𑍇𑌨)

𑌯𑍁𑌤𑌂 𑌤𑍁𑌵𑌾।

𑌶𑍍𑌰𑍋𑌣𑍍𑌯𑌰𑍍𑌧𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌶𑌂𑌭𑍋𑌃 𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌚𑌰𑍍𑌮 𑌕𑍃𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑌃॥

𑌵𑌾𑌮𑌾𑌰𑍍𑌧𑌂 𑌕𑌟𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 (𑌹𑌾𑌰𑌂) 𑌤𑍁 𑌚𑌿𑌤𑍍𑌰𑌵𑌸𑍍𑌤𑍍𑌰 𑌪𑌰𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑌂।

𑌨𑍂𑌪𑍁𑌰𑌾𑌢𑍍𑌯𑌂 𑌕𑍃𑌤𑌂 𑌪𑌾𑌦𑍇 𑌸𑌵𑍍𑌯𑌪𑌾𑌦𑌂 𑌤𑍁 𑌕𑍁𑌞𑍍𑌚𑌿𑌤𑌃॥

𑌸𑍍𑌵𑌯𑌂 𑌪𑍍𑌰𑌵𑌾𑌳𑌵𑌰𑍍𑌣𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑍁𑌕𑍃𑌷𑍍𑌣𑌂 𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌕𑌂।

॥

𑌅𑌰𑍍𑌧𑌨𑌾𑌰𑍀𑌶𑍍𑌵𑌰𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂

(𑌈𑌶𑍍𑌵𑌰𑌭𑌾𑌗𑍋 𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌃 𑌦𑍇𑌵𑍀𑌭𑌾𑌗𑌃 𑌶𑍍𑌯𑌾𑌮𑌵𑌰𑍍𑌣𑌃)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அர்தநாரீசுவர மூர்த்தியானது 4 கைகளும், 3 கண்களுமுடையதாகும். உடலின் வலதுபக்கம் பாதி சிவஸ்வரூபமாகும். இடது பக்கம் பாதி உமாதேவியின் ஸ்வரூபமாகும். இடது பக்கத்தில் தலைவகுடும், நெற்றிச் சுட்டியுமிருக்க வேண்டும். வலது பக்கத்தில் நெற்றியில் அரைக் கண்ணிருக்கவேண்டும். வலது காதில் குண்டலமும், இடது காதில் கர்ண பத்திரமும் இருப்பதாகும். இடது பக்கத்தில் (கையை) இடுப்பில் வைத்திருக் வேண்டும். வலது கைகளில் அபயமும் மழுவுமிருக்க வேண்டும். இடது கைகளில் வரதமும் நீலோத்பலமு மிருக்கவேண்டும். உமாம்சமான இடது பக்கத்தில் அழகான ஸ்தனத்தைக் கல்பிக்கவேண்டும். வலது பக்கத்தில் அடிவயிறானது புலித்தோலாடையை அணிந்திருக்க வேண்டும். இடது பக்கத்தில் இடுப்பில் சித்ரவர்ணமான வஸ்திரத்தை உடுத்தியிருக்க வேண்டும். இடது காலானது, பாதஸரத்தை அணிந்திருக்க வேண்டும். வலது காலானது குஞ்சிதமாக இருக்க வேண்டும். பரமேசுவர பாகம் பவழ நிறமாகவும் பார்வதீ பாகம் பச்சை நிறமாகவு மிருக்கவேண்டும். இவ்விதமாக அர்த்தநாரீசுவர லக்ஷணம் கூறப்பட்டிருக்கின்றது. (பரமேசுவரபாகம் சிவப்பு நிறம். பார்வதி பாகம் பச்சை நிறம்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விடய வழிகாட்டி

		பக்கம்
I	வஂவ˘காாணெ-ஞிம௦ஜஷுாவநவியிவடிமெ	28
II	உதாாகாாணெ ஶிவஞிஜஷுாவந வடிமெ	32
III	காஞுாஃஜதெ	39
IV	காலமிருதம் நூலில் காணப்படும் வடமொழியுரையும் தமிழுரையும்	41
V	காஞுவுகாஶிகாயாஃ	42
VI	காலப்பிரகாசிகை நூலில் உள்ள மூலமும் உரையும்	49
VII	காஞுவியி வடிஞுஃ (காமிகாகமம் பூர்வபாகம்)	54
VIII	குமாரதந்திரம், அசலஸ்தாபன விதி.	60
IX	முஹூர்த்த சிந்தாமணி	60
X	காலவிதானம்	61
XI	வீமேசுர உள்ளமுடையான்	62
XII	சூடாமணி உள்ளமுடையான்	64
XIII	சரசோதி மாலை	66
XIV	சோதிட கிரக சிந்தாமணி	66
	ஆகம வழிபாட்டில் பாலஸ்தாபனத்தின் சிறப்பும் விலக்கப்பட வேண்டிய விக்கிரகங்களும்	67

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ்ருதிஷா ஃாஹூஃத் நிணர்யஃ

I வாஃவர்காரணெ-ஞிஃ ரஃஸூாவநவியிவட-ரெ-

சயநெ ஜக்ஷிணெ நெஷ்ஃ வ்ருஸஹுஜெுாதுாாயணெ ॥ 2-B1 ॥

ஸாகூவஷெ வதாயீர் வ சஷ்டீ வ வதாஞ்ஸீ।

நவஃ வ்ருதிவவெுவ வஞ் தியூஸாஹாஸூரதாஃ ॥ 3 ॥

(வ்ருதிவக - பிரதமை)

யஊாஹெுஷாநுிஸாஃவர்ாணி ஞுவிஷாஸாவர்வாாாணஃ।

ஜெ்யூஷா வ தீ்ணி வாஃவர்ாணி நைஜர்தஜெுவ வஜர்யெக ॥ 4॥

உரை

யஃ	-	பரணி	வாாாண -	சதயம்
ஆஸூாஷ	-	ஆயிலியம்	ஜெ்யூஷா -	கேட்டை
கநிு	-	கார்த்திகை	தீ்ணிவாஃவர்ாணி	- பூரம்
ஸாஃவர்	-	விசாகம்		பூராடம்
ஞுவிஷா	-	அவிட்டம்		- பூரட்டாதி
ஸாவர்	-	திருவாதிரை	நைஜர்தஃ -	மூலம்

ஸெஷாஸுாதியயொஊஃநி ஸாஹாஸூாவநக்ஜர்ணி ।

ராஸிஷூவி யநா ஜெுவ வக்வாரஞாராஸயஃ ॥ 5 ॥

கவ்ருஸஹுா ஊதி வ்யாதாஹெுஷாஸுா ஸாஹஊாஃ ஸூரதாஃ ।

ஸிதஸூஊஜெ்யாஶாராிநூாவாாாஹெு ஷதஊாஸூரதாஃ ॥ 6 ॥

ஸித - வெள்ளி, ஸஊஃ்ய - புதன், ஶாரா - வியாழன், ஐநா - திங்கள், சுபகரம்.

வூதிஷா ஊஹூதஂ நிணஂயஃ

சுஶா ஹா ாவிஶளயஂாா ஶுஹயொஜெ ஶா ஹவுஷாஃ ।

ாவி - ஞாயிறு, ஶளயஂ - சனி, ஶூா - செவ்வாய் இம் மூன்று வாரமும் அசுப (தீமை) கரம். ஆனால் சுபயோகத்தில் சுபம்தருவன.

ரொஹிண்யநிலுஶஂயுக்தஶ்நிவாாஸ்த ஶொஹநஃ ॥ 7 ॥

ரொஹிணீ - ரோகிணி, சுநிலு - சுவாதி இவற்றோடு கூடிய சனி வாரம் சுபகரம்

வஷாஶாவித்ரஶஂயுக்தஶயஂவாரொ வாஸ்ரதஃ ।

வஷா - ரேவதி, ஶாவித்ர - அத்தம் இவற்றோடு கூடிய ஞாயிறு வாரம் சிறந்தது

விஶ்வெவாஶ்விநீயுக்தஃ கூஜவாரொ வாஸ்ரதஃ ॥ 8 ॥

விஶ்வெவ - உத்தராடம், சுஶ்விநீ - அசுவினி இவற்றோடு கூடிய செவ்வாய் வாரம் சிறந்தது

ஶுஹாநாஂ ஹொரகாநா(ணா)ஞ்ச ஜெக்ஷணவியிநா ஶுஹாஃ।

ஶுஹாநாஞ்ஜயஶ்ஶஸ்தஸ்த ஶஶ்ஜயஂ விநா ॥ 9 ॥

முகூர்த்த லக்கினத்தில் சுபக்கிரகங்கள் இருப்பது நல்லது. ஆனால் இவர்களுள் சந்திரன் மாத்திரம் இருப்பது கூடாது

ஶூநஶ்ய நைஜநஷ்யாநெ ரஹாநு ஶவஂாஂஶ்வ வஜஂயெசு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ்ருதிஷா ஃ‍ஹூமத் நிண்யஃ

ைநெயந ஸ்தாநம் - எட்டாமிடம். இதில் ஒரு கிரகமுமிருத்தல் கூடாது.

ஆாஃஸெ்யகாஃஸீ வைவ வஞுசீ வ ஆிதீயகா ॥ 10 ॥
ஷஷ்ஷ்டீ வ நவசீ ஸூ்யாஃிஸிஃ க்ரூராங்கிதா ।
ஃஹ்யவாாா ஐதி ஜெூயாஸ்தாவநாஃிஷு வஜ்யெகஃ ॥ 11 ॥
வஷா வ ஸவ்தசீயுக்தஸ்த்வாஸ்விநீ வ ஆிதீயகா।
வூஷ்யவைஷ்ணவஸம்யுக்தஸ்தவாஸோத்தஸேண து ॥ 12 ॥
வௌஃஸ்யந ஜுஹாவாாஸ்து உத்தராஷாஃஸம்யுதஃ।
ஸோஃவாாஸ்து ஹஸ்தைந ஆஸ்விநீ பவுயவாாகஃ॥ 13 ॥
ஃஹ்யவாாா ஐதி ஜெூயாஸ்தாவநாஃிஷு வஜ்யெகஃ।

ஞாயிற்றுக் கிழமை துவாதசியும், திங்கள் ஏகாதசியும், செவ்வாய் பஞ்சமியும், புதன் துவிதியையும், வியாழன் ஷஷ்டியும், வெள்ளி அஷ்டமியும், சனி நவமியும் கூடினால் கரிநாளாகும். அன்றியும் சப்தமித்திதியோடு கூடிய ரேவதி நட்சத்திரமும், துவிதியையோடு கூடிய அசுவினி நட்சத்திரமும், துவாதசியோடு கூடிய பூச நட்சத்திரமும், (வைஷ்ணவம் - துவாதசித்திதி) உத்தர நட்சத்திரத்தோடு கூடிய வெள்ளிக்கிழமையும், பௌர்ணமியும் உத்தராடமும் கூடிய வியாழக்கிழமையும் (வௌஃஸ்ய - பௌர்ணமி)
அத்த நட்சத்திரத்தோடு கூடிய திங்கட்கிழமையும் அசுவினியோடு கூடிய புதன் கிழமையும் (ஃஹ்யவாா - தெக்தயோகம்) எனப்படும். இந்தக் கரிநாளில் ஸ்தாபனாதிகளை நீக்கவேண்டும்.

ப்ரதிஷ்டா முஹூர்த்த நிர்ணய:

வஹ்நி ப்ரஹ்ம கிரிஜா கணபதிஸ்ஸர்ப்ப: ஷண்முகோ ரவி:
சம்போ வஸவ நாக தர்மஹராய: காம: கலிஶ்சந்த்ர விதா ।
ஸதே ஸர்வத்திநாயிவாஸ்த்ர:... என்ற காலாமிர்தப் பிரமாணப்படி பிரதமைக்கு - அக்கினியும், துவிதியைக்கு பிரமாவும், திருதியைக்குப் பார்வதியும், சதுர்த்திக்கு விநாயகரும், பஞ்சமிக்கு ஆதிசேஷனும், ஷஷ்டிக்கு ஸ்கந்தரும், சப்தமிக்கு சூரியனும், அஷ்டமிக்கு சிவனும், நவமிக்கு அஷ்டவஸுக்களும், தசமிக்கு திக்கஜங்களும், துவாதசிக்கு விஷ்ணுவும், திரயோதசிக்கு மன்மதனும், சதுர்த்தசிக்கு கலிபுருஷனும், பௌர்ணமிக்கு சந்திரனும், அமாவாசைக்கு பிதிர்தேவதைகளும் அதிபதிகளாம். இதன்படியே வைஷ்ணவ - துவாதசி, ஸௌம்ய - பௌர்ணமி என்று அர்த்தமாயிற்று

ஸதே சரஸோஸநா: ப்ரோக்தா: கர்யாக ப்ராணிவிநாஶந:॥ 14 ॥
வாவப்ரஹஸஸாயுக்தாம் யுக்தகாம்க்ஷிதஸதோமா ।
வஜ்ரம் ஸ்தம்பவ்ருதீவாதம் விஷ்டிம் காணஸங்குலம் ॥ 15 ॥
கண்டகம் ப்ரஹஸஹு உக்ராவாதஞ்சு விஜகம் ।
ரஹணம் வைநக்ஷத்ரம் ஶுக்ரஞ்சு ஹஸ்திகம்பகம் ॥ 16 ॥
ஸ்வஜஞ்சைவ விஶேஷேண வர்ஜயேத் ப்ரயத்நத: ।
ப்ரதிஷ்டாம் வர்ஜயேஜ்ஜீவஶார்க்வாஸ்தமநே வி ச ॥ 17 ॥
(ஜீவ - குரு, ஶார்க்வ - சுக்கிரன், இவர்களின் அஸ்தமனம்)
ஸவம் வரீக்ஷ்ய பஹுயா ஶுபம் மஸ்தாவநாசனோகு॥ 18 ॥
ஶ்லோக ஸம்வ்யா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ்ரதிஷா ஊஹாதல் நிணர்யஃ

II உதாஹகாரணெ ஶிவஙிஜஙாவந வடஹெ

ஶாகூவஷ்ஂ விஜாயீஞு ஊதயஂ கீருகஞயா ।
விஷாஞு ஓஊல்வீஜைவ வதூராஂஶு விவஜ்யெகு ॥ 2 ॥
சூஷாஜ ஊஶ்ஶீஷ்ஞு ஊவஂ ஹாஷுவஷஂ தயா ।
சூஷாஜெ யாநுநாஶஂ வ்யாகு ஊஶ்ஶீஷெ் து ஜாமிணஃ ॥ 3 ॥
ஊவெ து வுதுஹீநஂ வ்யாகு ஹாஜெ வைவ கூருக்ஷயஃ ।
ஆடியில் - தானியநாசம், மார்கழியில் - ரோகம், மாசியில் - புத்திரஹீநம், புரட்டாசியில் - குலக்ஷயம்

வைதெ் வஂவகுகாஂ விஜி வைஶாவெ வ்யாயிநாஶநஃ ॥ 4 ॥
ஜ்யெஷெ் ஊ வவஷிஜிஃ வ்யாகு ஶ்ராவணெ ஜொக்ஷஷஂ ஹவெகு।
சூஶ்ஜெ கஜ்வாவருஂ காதிகெ ராஊவயநஃ ॥ 5 ॥

வளஷெ் ஊ ஷீவஊயாஷ்யஂ வாஜூநெ ஶதுநாஶநஃ।
வணதகுஊவவருஜொக்ஷஂ தியீநாஞு ததஃ ஶரணா ॥ 6 ॥

சித்திரையில் சம்பத்துவரும், வைகாசியில் வியாதி நீக்கம், ஆனியில் சர்வசித்தி, ஆவணியில் மோட்சப்பேறு, ஐப்பசியில் கர்மாவின் பலன் விரைவிற்சேருதல், கார்த்திகையில் கிராமவளர்ச்சி, தையில் தீர்க்காயுள், பங்குனியில் சத்துரு அழிதல் இது மாசபலன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ்ரதிஷா ௨ுஹூ௰த் நிணுய௨

இனித் திதி பலன் கேட்க

ஶுக்லு வக்ஷம் விஶெஷஞ ஊயஶூம் கூரஷ்ண வக்ஷகூ௨।
வ்ரயஊஞு உதுயீஞு ஷஷ்ஷஷ௨நவஶ்ரகெ ॥ 7 ॥
சுஊஞுதுஜஶீஞ்வைவ வஜ்யெத்து விஶெஷத௨॥

சுக்லபக்ஷம் விசேஷம், கிருஷ்ணபக்ஷம் மத்தியமம். பிரதமை, சதுர்த்தி, ஷஷ்டி, அஷ்டமி, நவமி, அமாவாசை, சதுர்த்தசி ஆகிய இத்திதிகளை நீக்கவேண்டும்

கூாயெத்ஸாயகூஶ்வெவ த்விதீயெ ஸவஸம்வஊ ॥ 8 ॥
தரதீயெ ஞொகவஶஞு வஞுஶூாம் ஸொமநாஶந௨।
ஸவுஶூாம் ஶ்ராஊவரஊி௨ ஸவூாகூ ஊஶஶூாஊாயுவ்ய்ந௨ ॥ 9 ॥
ஷகூாஊஶூாஊஷஹாம்ஶூம் த்வாஊஶூாம் ஶத்ருநாஶந௨।
த்ரயொஊஶூாம் கூஜவரஜிம் வளணிஊாயாம் த்விரம் ஹவெகூ ॥ 10 ॥
ஷதெ திமிஹூம் வெராக்தம் வாணாணாம் ஹமுஊுதுவதெ।

துவிதியையில் சர்வசம்பத்து, திருதியையில் உலகவசியம், பஞ்சமியில் நோய் நீக்கம், சப்தமியில் கிராமவிருத்தி, தசமியில் ஆயுள் வளர்ச்சி, ஏகாதசியில் அஷ்டபாக்கியம், (தனலக்ஷ்மி, தானியலக்ஷ்மி, முதலிய அஷ்டலக்ஷ்மி விலாசம்) துவாதசியில் பகைநீக்கம், திரயோதசியில் தொழில் விருத்தி, பௌர்ணமியில் நீண்ட வாழ்வு, இவை திதிபலன். இனி வார பலன் சொல்லப்படும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரதிஷ்டா முஹூர்த்த நிர்ணய:

𑌭𑍌𑌮𑌾𑌰𑍍𑌕𑌿𑌵𑌾𑌰𑍇 𑌨𑌾𑌶𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌰𑌵𑌿𑌵𑌾𑌰𑍇 𑌸𑍁𑌖𑌪𑍍𑌰𑌦𑌃 ॥ 11 ॥
𑌇𑌨𑍍𑌦𑍁𑌵𑌾𑌰𑍇 𑌚 𑌸𑍌𑌭𑌾𑌗𑍍𑌯𑌂 𑌬𑍁𑌧𑌵𑌾𑌰𑍇 𑌸𑍁𑌖𑌪𑍍𑌰𑌦𑌃।
𑌗𑍁𑌰𑍁𑌵𑌾𑌰𑍇 𑌪𑍍𑌰𑌜𑌾𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌂 𑌶𑍁𑌕𑍍𑌰𑌵𑌾𑌰𑍇 𑌚𑌿𑌰𑌾𑌯𑍁𑌷𑌃 ॥ 12 ॥
𑌸𑌪𑍍𑌤𑌵𑌾𑌰𑌫𑌲𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌅𑌶𑍍𑌵𑌿𑌨𑍍𑌯𑌾𑌦𑌿 𑌫𑌲𑌾𑌨𑍍 𑌶𑍃𑌣𑍁।

செவ்வாய், சனி வாரங்கள் அழிவைச் செய்வன, ஞாயிறு சுகந்தரும், திங்கள் நல்வாழ்வைத்தரும், புதன் சுகந்தரும், வியாழன் சந்தானவிருத்தி தரும், வெள்ளி நீண்ட ஆயுளைத்தரும். இது ஏழுகிழமைப்பலன். இனி நட்சத்திர பலன் சொல்லப்படும்.

𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌭𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌰𑌶𑍍𑌵𑌿𑌨𑍍𑌯𑌾𑌂 𑌭𑌰𑌣𑍀 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑍍𑌧𑍍𑌰𑍁𑌵𑌃 ॥ 13 ॥
𑌕𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑌾𑌪𑍍𑌯𑌰𑍍𑌥𑌨𑌾𑌶𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌰𑍋𑌹𑌿𑌣𑍀 𑌚 𑌸𑍁𑌖𑌪𑍍𑌰𑌦𑌾।
𑌮𑍃𑌗𑌶𑍀𑌰𑍍𑌷𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌵𑍃𑌦𑍍𑌧𑌿 𑌆𑌰𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌨𑌾𑌶𑌨𑌃 ॥ 14 ॥
𑌪𑍁𑌨𑌰𑍍𑌵𑌸𑍌𑌪𑌾𑌪𑌨𑌾𑌶𑌂 𑌪𑍁𑌷𑍍𑌯𑌂 𑌵𑍈 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍।
𑌆𑌶𑍍𑌲𑍇𑌷𑌂 𑌸𑌰𑍍𑌵𑌨𑌾𑌶𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌮𑌘𑌂 𑌵𑍈 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌜𑌾 𑌕𑍍𑌷𑌯𑌃 ॥15॥
𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌸𑍁 𑌮𑌾𑌨𑌹𑌾𑌨𑌿 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌉𑌤𑍍𑌤𑌰𑌾𑌸𑍁 𑌸𑍁𑌖𑌪𑍍𑌰𑌦𑌃।
𑌧𑌾𑌨𑍍𑌯𑌵𑌰𑍍𑌧𑌨𑌂 𑌹𑌸𑍍𑌤𑌾𑌸𑍁 𑌚𑌿𑌤𑍍𑌰𑌂 𑌵𑍈 𑌶𑌤𑍍𑌰𑍁𑌨𑌾𑌶𑌨𑌃 ॥ 16 ॥
𑌸𑍍𑌵𑌾𑌤𑍀 𑌚 𑌰𑌾𑌜𑌸𑌮𑍍𑌮𑌾𑌨𑌂 𑌵𑌿𑌶𑌾𑌖𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑌃।
𑌅𑌨𑍂𑌰𑌾𑌧𑌂 𑌬𑌿𑌮𑍍𑌬𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌾 𑌵𑍈 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌨𑌾𑌶𑌨𑌃 ॥ 17 ॥
𑌮𑍂𑌲𑌂 𑌵𑍈 𑌬𑌿𑌮𑍍𑌬𑌨𑌾𑌶𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌷𑌾𑌢𑌂 𑌰𑌿𑌪𑍁𑌕𑍍𑌷𑌯𑌃।
𑌉𑌤𑍍𑌤𑌰𑌾𑌷𑌾𑌢𑌂 𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌶𑍍𑌰𑌵𑌣𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌸𑌂𑌪𑌦𑌃 ॥ 18 ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரதிஷ்டா நக்ஷத்ர நிர்ணய:

ச்ரவிஷ்டா த்ரயநாமம் ஸ்வாதி சதபிஷக் ஹஸ்த்ரயநாமந: ।
பூர்வப்ரோஷ்டபதா சைவ ப்ரஜாநாமயநா ததா ॥ 19 ॥
உத்தராஷாடா ச ஸம்பத்திம் ரேவதீ பாக்ஷும் ஸ்வை: ।
நக்ஷத்ராணாம் ஸமம் ப்ரோக்தம் ராசீநாஞ் ஸமம் ஸ்மரணம் ॥ 20 ॥

அசுவினி	-	கிராமாபிவிருத்தி
பரணி	-	விரைவில் மரணந்தருதல்
கார்த்திகை	-	பொருளழிவு
ரோகிணி	-	சுகந்தருதல்
மிருகசீரிடம்	-	சந்தானவிருத்தி
திருவாதிரை	-	சகலமுமழிவு
புனர்பூசம்	-	பாபநீக்கம்
பூசம்	-	சாந்திதருதல்
ஆயிலியம்	-	சகலமுமழிவு
மகம்	-	சந்தான அழிவு
பூரம்	-	மானக்கேடு
உத்தரம்	-	சுகந்தருதல்
அத்தம்	-	ஆயுள்விருத்தி
சித்திரை	-	சத்துருஅழிவு
சோதி	-	அரசசன்மானம்
விசாகம்	-	கர்மாவின் நற்பலன் தருதல்
அனுஷம்	-	சரீரவிருத்தி
கேட்டை	-	மூத்தோர் அழிவு
மூலம்	-	சரீரஅழிவு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾 𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤 𑌨𑌿𑌰𑍍𑌣𑌯𑌃

பூராடம்	-	பகையழிவு
உத்தராடம்	-	விருத்திதருதல்
திருவோணம்	-	மோட்சசம்பத்து
அவிட்டம்	-	தார அழிவு
சதயம்	-	மரணநீக்கம்
பூரட்டாதி	-	சந்ததி அழிவு
உத்தரட்டாதி	-	செல்வப்பேறு
ரேவதி	-	வாக்கு வல்லபம் தருதல்

இவை நட்சத்திர பலன். இனி ராசிப் பலன் சொல்லப்படும்.

𑌮𑍇𑌷𑍇 𑌤𑍁 𑌕𑌾𑌰𑍍𑌯𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌂𑌪𑌦𑌾𑌢𑍍𑌯𑌂 𑌵𑍃𑌷𑌭𑍇 𑌤𑌥𑌾।
𑌮𑌿𑌥𑍁𑌨𑍇 𑌕𑌾𑌰𑍍𑌯𑌨𑌾𑌶𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌕𑌟𑍇 𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌶𑍋𑌭𑌿𑌤𑌃 ॥ 21 ॥
𑌸𑌿𑌂𑌹𑍇 𑌤𑍁 𑌕𑌰𑍍𑌮𑌸𑌾𑌫𑌲𑍍𑌯𑌂 𑌕𑌨𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌕𑍁𑌲𑌵𑌰𑍍𑌧𑌨𑌃।
𑌤𑍁𑌲𑌾𑌯𑌾𑌮𑌤𑍁𑌲𑍍𑌯𑌂 𑌸𑍌𑌭𑌾𑌗𑍍𑌯𑌂 𑌵𑍃𑌶𑍍𑌚𑌿𑌕𑍇 𑌵𑌿𑌤𑍍𑌤𑌨𑌾𑌶𑌨𑌃 ॥ 22 ॥
𑌚𑌾𑌪𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌮𑌕𑌰𑍇 𑌮𑌾𑌨𑌹𑌾𑌨𑌿𑌕𑍃𑌤𑍍।
𑌕𑍁𑌮𑍍𑌭𑍇 𑌤𑍁 𑌶𑌤𑍍𑌰𑍁𑌨𑌾𑌶𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌮𑍀𑌨𑍇 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌵𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌃 ॥ 23 ॥

மேடம்	-	காரியவிருத்தி
இடபம்	-	செல்வப்பேறு
மிதுனம்	-	காரியநாசம்
கடகம்	-	தேசம் விளங்குதல்
சிங்கம்	-	கர்மாசபலம் (பலன் விரைந்து தருதல்)
கன்னி	-	குலவிருத்தி
துலாம்	-	சமானமற்ற வாழ்வு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரதிஷ்டா முஹூர்த்த நிர்ணய:

விருச்சிகம் - பொருளழிவு

தனு - அறிவுவிருத்தி

மகரம் - மானக்கேடு

கும்பம் - பகையழிவு

மீனம் - சகல சுகமும் தருதல்

தேவதாநாம் ஹிதார்த்தாய திவா ஸ்தாப்ய முஹூர்த்தகே |
நிஶா சைவ யதா கார்யா அஸுராணாம் ஜயப்ரத: || 24 ||
பூர்வயாமே கார்யஸித்தி: த்விதீயே ஸத்வரம் பலம் |
த்ருதீயே ஸர்வஹாநி ஸ்யாத் சதுர்த்தே து தாமஸ: || 25 ||
யாமலக்ஷணமேவோக்தம் யோகாநாம் ஶ்ருணுஷ்வ |

பகலில் நல்ல முகூர்த்தமானால் தேவர்கட்குப் பிரீதியாய் நன்மைதரும். இரவிற் பிரதிஷ்டை செய்தால் அசுரர்கட்கு வெற்றியாய் தீமைதரும்.

பகலில் முதல்யாமம் - காரிய சித்திதரும்

பகலில் இரண்டாம் யாமம் - பலன் விரைவில் தரும்

பகலில் மூன்றாம் யாமம் - எல்லா அழிவும் தரும்

பகலில் நாலாம்யாமம் - தாமசம் (கெட்டபலன்) தரும்

இனி யோகபலன் சொல்லப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரதிஷ்டா யோகாதி நிர்ணய:

விஷ்கம்பம் ஶத்ருநாஶம் ஸ்யாத் ப்ரீதிஸ்ஸௌபாக்யவர்த்தநீ ॥ 26 ॥
ஆயுஷ்மாந் விஜயம் ப்ரோக்தம் ஸௌபாக்ய ஸம்பதஸ்ததா।
ஶோபநம் ஶ்ரேஷ்டமேவோக்தம் அதிகண்டம் அஶுபம் ததா ॥ 27 ॥
ஸுகர்மஸ்யாத் ஜயம் ஸ்யாத் த்ருதிம் சைவ ஶத்ருவர்த்தநீ।
ஶூலம் ஸித்திப்ரதம் விந்த்யாத் கண்டம் சைவ நாஶ ஸம்பவ: ॥ 28 ॥
வ்ருத்திம் சைவ ஶ்ரீப்ரதம் விந்த்யாத் த்ருவம் சைவ ஸர்வநாஶநீ।
வ்யாகாதம் ப்ரோக்தவாஸ்ய ஹர்ஷணம் ரோகநாஶநீ ॥ 29 ॥
வஜ்ரம் வித்யாப்ரதம் விந்த்யாத் ஸித்திஸ்ஸித்திப்ரதஸ்ததா।
வ்யதீபாதம் நாஶநம் ஸ்யாத் வரீயாந் ஸம்பதஸ்ததா ॥ 30 ॥
பரிகம் மரணம் ப்ரோக்தம் ஶிவம் ஸாம்யப்ரதஸ்ததா।
ஸித்தம் ஶிவப்ரதம் விந்த்யாத் ஸாத்யம் சைவ ஸாத்யமேவ ச ॥ 31 ॥
ஶுபம் ஶுபப்ரதம் விந்த்யாத் ஶுக்லம் சைவ தநமேவ ச।
ப்ராஹ்மீ ஶ்ரேஷ்டமிதி ப்ரோக்தம் ஐந்த்ரம் ராஜ்யஸாதக: ॥ 32 ॥
வைத்ருதீ நஷ்டமித்யுக்தம் ஸப்தவிம்ஶதி ஸம்யுதாந் ।
யோகாநிதி ஸம்ஜ்ஞேயம் கரணாநாம் பலம் ஶ்ருணு ॥(ஶ்ருண்வந்து)33 ॥
பவம் சைவ ஸர்வஸித்திஸ்யாத் பாலவம் பலவர்த்தநீ।
கௌலவம் ஶத்ருகம் ப்ரோக்தம் தைதிலம் ஶோகநஸ்ததா ॥ 34 ॥
கரஜீ ஸ்ரீப்ரதோ ஸ்யாத் வணிஜோ லாபவர்த்தநீ।
விஷ்டிம் விஷ்டிப்ரதஶ்சைவ ஸப்ததே ஜ்ஞேயவித்யதே ॥ 35 ॥

ஶ்லோக ஸம்க்யா 2-35

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ்ருதிஷா ஃஹூத் நிணய:

III காமூாஃரதெ-

வாஜெஷ்வ கவி ஜ்ஞ ஜீவ ஶஶிநாம் ஶ்ரொணத்ரயெ சொத்தரா
மைத்ராதித்யகரத்வயாந்த்யஶஶஹரக ஃஹ்ரப்ரஜெஶொஃஷு
ஹஸ்தாவர்ணஜயாஃஹ் சொஃமயநெ ஶுக்ஷைஜ்யொவ்ய்ஷயொ:
கயர்தாஃதிநம் விஹாய ச ஃஹும் ஷெவப்ரதிஷ்டாம் ஶுஃஷா॥

ஏழாவது பிந்து, 1வது சுலோகம்

கவி - வெள்ளி

ஜ்ஞ - புதன்

ஜீவ - வியாழன்

ஶஶிநாம் - திங்கள் இவர்களுடைய

வாஜெஷு - கிழமைகளில்

ஶ்ரொணத்ரயெ	-	திருவோணம், அவிட்டம், சதயம்
உத்தரா	-	உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி
மைத்ர	-	அனுஷம்
ஆதித்ய	-	புனர்பூசம்
கரத்வய	-	அத்தம், சித்திரை
அந்த்ய	-	ரேவதி
ஶஶஹரக	-	மிருகசீர்ஷம்
அஶ்வ	-	அசுவினி
ப்ரஜெஶ	-	ரோகிணி

உடுஷு (ஆகிய இந்த) நட்சத்திரங்களில்

ஹஸ்தா துவிதியை, சப்தமி, துவாதசி ஆகிய மூன்றும் பத்திரை

வர்ண பஞ்சமி, தசமி, பௌர்ணமி, அமாவாசை நான்கும் பூரணை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரதிஷ்டா காலத்வ நிர்ணய:

ஜயாஸு திரயோதசி, அஷ்டமி, திருதியை மூன்றும் ஜயை

இவைகளில்

உதகயநே உத்தராயணத்தில்

ஶுக்ர ஜீவயோ:- சுக்கிரனும், குருவும்

வ்ருத்தயோ:- அஸ்தமனம் (மௌட்டியம்) இல்லாது பிரகாசிக்கும்போது

கார்யா பிரதிஷ்டை செய்க.

(ஆனால்)

காமதிநம் ஜயதிதிகளுள் ஒன்றான திரயோதசியையும்

குஹூம் - பூர்ணதிதிகளுளொன்றான அமாவாசையையும்

விஹாய - நீக்கவேண்டும், நீக்கிச் (செய்ய வேண்டும்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ்ருதிஷ்டா காஹூர்த் நிண்ர்யஃ

IV காலாமிருதம் நூலில் காணப்படும் வடமொழியுரையும் தமிழுரையும்

வ்ரு॥ வாஸெஷ்விதி॥ கவிஜ்ஞஜீவஶஶிநாம் ஶுக்ரு பாயரா
வம்ஶாணாம், வாஸெஷு, ஶ்ரோணத்ரயெ ஶ்ரவணயநிஷ்டாஶத
ஹிஷக்த்ரயெ, உத்தராஷெத்ராஷித்ர கா ஷயாத்யஶஶஹஸ்தஹஸ்
வ்ருஜெஶொஉஷு உத்தரொத்தராஷாஷொத்தராஷாஷூாநர்ா
யாவநவர்ஷம் ஹஸ்த வித்ராஸவதீகரமஶீர்ஷர்ஶ்விநீரொஹிணீ
நக்ஷத்ரெஷு, ஹஷாவர்ணர்ஜயாஃ - ஷஷதியஃ வர்ணர்தியயொ
ஜய திய்யஶ்வ தாவ, உஉயநெ, உத்தராயணெ, ஶுக்ரெஜ்யயொஃ
ஶுக்ருபரஹஸ்வதெ்ஃ, வக்ஷ்யொஃ கநஸ்தம்பதயொ ஸ்வதொஃ
ராஶுக்ரஶஹ்யாஹிதெ வதீத்ர்ஃ, ஜயதியிஷு காசுநம்
த்ரயொஉஶீம், வர்ணர்தியிஷு காஹூ கசாவாஸ்ரா த்ருக்வா -
வர்வெர்காத்ஶு ஹிவவெ ஶாம் தெவவ்ருதிஷ்டாம் காயர்ாக॥

ஏழாவது பிந்து

(அ-கை) பிறகு எல்லாத்தேவைகளுக்கும் பிரதிஷ்டை செய்யும் காலத்தைக் கூறுகின்றார்.

(தா-ம்) வெள்ளி, புதன், வியாழன், திங்கட்கிழமைகளிலும், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, அனுஷம், புனர்பூசம் ஹஸ்தம், சித்திரை, ரேவதி, மிருகசீரிடம், அசுவினி, ரோகிணி நட்சத்திரங்களிலும், பூர்ணதிதிகளிலும் ஜயதிதிகளிலும் உத்தராயணத்திலும், சுக்கிர பிரகஸ்பதிகள் அஸ்தமனமாகா திருக்கையிலும் (அதாவது குரு, சுக்கிர மௌட்டியமில்லா திருக்கயிலும்) சுபமான தேவப்பிரதிஷ்டையைச் செய்யக்கடவது. ஆனால் ஜபதிதிகளுட் சேர்ந்த திரயோதசியையும், பூர்ணதிதிகளில் அமாவாசியையும் பிரதிஷ்டை விஷயத்தில் விலக்க வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ்ரதிஷ்டா ஃாஹூர்த் நிண்ய:

V காருவ்ரகாஸிகாயாஃ -

கூதஃவாரு வ்ரவக்ஷ்யாஃமி ஜெவதாஹ்ஸ்தாவநம் வாரஃ।
கூயநெ தஹ்தரெ கூர்யாகூ கூ௦ஹூரவ௦ விவஜ்யெகூ ॥ 1 ॥
வஹ்வ்வஷெ ச வாணூஷெக் ஸமுயாதெ நிஶாகரெ।
ஃரெதெ விஃழெ வெநாஃமி ஹூரவாஂஶீஶவள யஃா ॥ 2 ॥
(ஹூர்வ - சுக்கிரன், குஂஶீர்வ - வியாழன் இவர்களிருவரும், விஃழெ வெநாஃமி ஃரெதெ யஃா - சுத்தமான ஆகாயத்தில் உதித்த பொழுது எனவே அஸ்தமனமில்லாத பொழுது)

யஜஃநாநாஃகூமுஷெக் கூதவ்ய௦ ஸ்தாவந௦ ஸாயெஃ।
ரொஹிணூஃதி திஷ்யநூவளஷ்ணஹஸ்த உத்தராத்யஃ ॥ 3 ॥
ஸ்வாதீ ச ஸ்தாவநெ ஶ்ரெஷ்டா ஜெவதாநா௦ விஶெஷதஃ।

ரோகிணி, புனர்பூசம், பூசம், மிருகசீரிடம், ரேவதி, அத்தம், உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, சோதி இவைகள் விசேஷமானவை

விஷ்ணு சித்ராஸ்வி ஃஹூாநி வஸூதைத்ரஞ்ச ஃயஃா:॥ 4 ॥

திருவோணம், சித்திரை, அசுவினி, மூலம், அவிட்டம், அனுஷம் இவை மத்திமம்

ஏஜாஹ்ஸ்திய ஸ்வாஃ ப்ரஶஸ்தா நவஃ௦ விநா।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரதிஷ்டா காலநிர்ணய:

பிரதமை, திருதியை முதலிய ஒற்றித்த திதிகள் ஓஜ எனப்படும். இவற்றில் நவமி தவிர மற்றவை நல்லவை.

பூர்வெ(அ)பரெ தஶமீ ஷஷ்டீ த்விதீயா சைவ வர்ஜிதா:॥ 5 ॥

பூர்வ, அபரமாகிய இரு பக்ஷங்களிலும் தசமி ஷஷ்டி துவிதியை ஆகிய திதிகள் நல்லவை

ஶுக்ரேந்த்ரஜீவஸௌம்யானாம் ஸம்ஶகெ ஶிவமீக்ஷயெ।
ஏகாணெ காமுஹொராயாம் ஸ்தாபநம் ஸம்ப்ரஶஸ்யதெ॥ 6 ॥
ராஶயஸ்து ஸ்திரா ஶ்ரேஷ்டா தேவீநாமுபயாஸ்ததா:

ஸ்திரராசிகள் சிரேஷ்டமானவை. தேவிப்பிரதிஷ்டைக்கு உபயராசிகளும் நல்லன.

சராஶ்ச ராஶய ஸர்வெ வர்ஜநீயா: ப்ரயத்நத: ॥ 7 ॥

சரராசிகள் நீக்கத்தக்கன

உச்சஸ்தாநகதஸ்ஸூர்யோ யஜமாநஸ்ய வாஹந:।
சந்த்ரஸ்து நீசராஶிஸ்தோ ஶாந்திஶ்ச ஸம்ப்ரயச்சதி ॥ 8 ॥
ஶுக்ரஸ்தாநகதஸ்ஸூர்யோ ஶுக்ரஸௌக்யப்ரதாயக:।
மித்ரக்ஷேத்ரகதஸ்ஸூர்யஸ்ஸுதர்ஶநம் கரிஷ்யதி ॥ 9 ॥
ஸர்வேஷாமபி ஸௌம்யாநாம் ஸ்தாபநே முநிஸம்ஸ்திதா:।
நாஶயத்யபி சைவ த்ராஸம் ஜநவஸ்யதயா ॥ 10 ॥ .

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ்ருதிஷா ஃாஹாீத் நிணர்யஃ

சூரியன், ராகு, சந்திரன், சனி, இவர்கள் லக்கினத்திலிருந்தால் கிராமத்தையும், ஜனங்களையும் விரைவில் அழிப்பார்கள்

ஶாஹாஷ்ீஉயஸம்ஷாஶுகூ ஸவர்ஸளவ்யநாவஹாஃ।

சுபக் கிரகங்களுதயத்திலிருந்தால் சகல சுகங்களையும் செல்வத்தையும் கொடுப்பார்கள்

யநஷாநமதாஃ வாவாஃ கூர்வந்தி யநநாஶநஃ ॥ 11 ॥
ஶாஹாஷா அநுஸம்யாகதா யநஜா ஷத்ர ஸம்ஷிதாஃ

இரண்டாமிடத்தில் பாபக்கிரகங்களிருந்தால் பொருளழிவு செய்வார்கள். சுபக்கிரகங்கள் சந்திரனோடிரண்டிலிருந்தால் பொருள் விருத்தி செய்வார்கள்.

ஹாதரஷாநமதாஷவெர் ருஹாஷாஷிவிவயர்நாஃ ॥ 12 ॥

மூன்றாமிடத்துக்கிரகங்கள் சந்தோஷவிருத்தி செய்வார்கள்

பநுஷாநமதாஃ வாவாஃ கூர்வந்தி ஸுவநாஶநஃ।

நாலாமிடத்துப் பாபக்கிரகங்களிருந்தால் சுகத்தை அழிப்பார்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வுதிஷா ஃஹூத் நிணயஃ

தஜைவ வஜயிஷுதி ஸௌஜாஸூ நூவிவஜிதாஃ ॥ 13 ॥

நாலில் சந்திரனல்லாத மற்றச் சுபக்கிரகங்களிருந்தால் சுகத்தை விருத்தி செய்வார்கள்

ஸுதஸூாநமதாஃ கூராஃ கூவதி ஸுதநாஶநஃ।

ஐந்தாமிடத்தில் பாபக்கிரகங்களிருந்தால் புத்திரநாசம் செய்வார்கள்

தது ஸிதாஸூஹாஸூவெ வுதுயஃ ஸுவவுஷாஃ ॥ 14 ॥

ஐந்தில் சுபக்கிரகங்களிருந்தால் புத்திரர், தருமம், சுகம் இவற்றை விருத்தி செய்வார்கள்

வுதுஸூாநமதஃ கூயாகஃ ஸௌவநாஶம் நிஶாகரஃ

ஐந்தில் சந்திரனிருந்தால் சுகக்கேடுசெய்வான்

நாஶயதி ஶிவமநு கூராா ஸூதுஸூாநம் ஸஃஶிதாஃ ॥ 15 ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ்ருதிஷா ஃ்ஹலத் நிண்யஃ

ஆறாமிடத்தில் பாபமிருந்தால் சத்துருக்களை அழிப்பார்கள்

ஶத்ரு்ஸ்தாநமதெ ஜீவெ ஶத்ருவரஜிம் கரிஷ்யதி।

ஆறில் வியாழனிருந்தால் சத்துருவை விருத்தி செய்வான்

ஸ்தாந ஹம்ஶவ்ருஷளதத்ரு ஸம்ஸ்திதள வந்ரஹாமவ்வள ॥ 16 ॥

ஆறில் சந்திரன், வெள்ளி இருந்தால் ஸ்தான மாற்றம் செய்வார்கள்

கூயாஜாஃத்ரும ஸ்ஸயெ்ா. யஜமாநவிநாஶநஃ।

(ஜாஃத்ரு ஏழாமிடம்) இதில் இருக்கும் சூரியன் யஜமானனை அழிப்பான

ஸளாஃ ஸளவ்யவிநாஶீ ஸ்யாக பாயஃ பாத்ரவிநாஶநஃ ॥ 17 ॥
கூஜஸ்ஸ்ரிஹயம் கூயாக விஶாசஹவநம்ஹரமஃ
ஜீவெந்ூ ஸவ்ருஃஸ்தள செக யநயாநயாமஜொ ஹவெக ॥ 18 ॥

ஏழில் சனி சுகக்கேடு செய்வான். அதில் புதனிருந்தால் புத்திர அழிவு செய்வான். அதில் செவ்வாய் இருந்தால் அக்கினி பயம் செய்வான். அதில் வெள்ளி பிசாசுச்சேஷ்டை செய்வான், அதில் வியாழனும் சந்திரனும் இருந்தால் தனதானிய வரவு உண்டாகும்.

சுஷ்ஃஸ்தா ரஹாஸ்வெ் கூவஞ்சி கூருநாஶநஃ।

எட்டாமிடத்தில் எந்தக்கிரகமிருந்தாலும் குல அழிவு செய்வார்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾 𑌭𑌾𑌵𑌾𑌰𑍍𑌥 𑌨𑌿𑌰𑍍𑌣𑌯𑌃

𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌥𑌾𑌨𑌗𑌤𑌾𑌸𑍍𑌸𑍌𑌮𑍍𑌯𑌾𑌃 𑌕𑍁𑌰𑍍𑌯𑍁𑌰𑍍𑌧𑌰𑍍𑌮𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌮𑍍 ॥ 19 ॥
𑌪𑌾𑌪𑌾𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌯𑍁𑌤𑌾𑌃 𑌕𑍁𑌰𑍍𑌯𑍁𑌸𑍍𑌸𑍌𑌖𑍍𑌯𑌧𑌰𑍍𑌮𑌧𑌨𑌕𑍍𑌷𑌯𑌮𑍍।

ஒன்பதாமிடத்தில் சுபக்கிரகங்கள் இருந்தால் தர்ம விருத்தியைச் செய்வார்கள். அதில் பாபக்கிரகங்கள் சந்திரனோடிருந்தால் சுகம், தருமம், தனம் இவற்றை அழிப்பார்.

𑌕𑌰𑍍𑌮𑌸𑍍𑌥𑌾𑌨𑌗𑌤𑌾𑌃 𑌕𑍍𑌰𑍂𑌰𑌾𑌃 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌸𑍍𑌥𑌾𑌨𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 ॥ 20 ॥
𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑍇𑌣 𑌸𑌂𑌯𑍁𑌤𑌾 𑌸𑍌𑌮𑍍𑌯𑌾𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌮𑌿𑌤𑍍𑌰𑌸𑍁𑌖𑌪𑍍𑌰𑌦𑌾𑌃।

பத்தாமிடத்திலிருக்கிற பாபக்கிரகங்கள் ஸ்தான (இடம்) அழிவு செய்வார்கள். இதில் சந்திரனோடு சுபக்கிரகங்களிருந்தால் புத்திரர், மித்திரர் சுகம் விருத்தி செய்வார்கள்

𑌲𑌾𑌭 𑌸𑍍𑌥𑌾𑌨𑌗𑌤𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌯𑍁𑌃𑌶𑍍𑌰𑍀𑌸𑍁𑌖𑌪𑍍𑌰𑌦𑌾𑌃 ॥ 21 ॥

பதினோராமிடத்திலிருக்கிற கிரகங்கள் புத்திரர் ஆயுள் செல்வம் சுகம் இவற்றைத் தருவார்கள்

𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌸𑍍𑌥𑌾 𑌗𑍍𑌰𑌹𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇 𑌕𑌰𑍍𑌤𑍁𑌰𑍍𑌦𑌾𑌰𑌿𑌦𑍍𑌰𑍍𑌯𑌦𑌾 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃।

பன்னிரண்டாமிடத்திலிருக்கிற கிரகங்கள் கர்த்தாவுக்கு தரித்திரத்தை விளைவிப்பார்கள்

𑌵𑍍𑌯𑌯𑌸𑍍𑌥𑍌 𑌧𑌨𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌞𑍍𑌚 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑌾𑌂 𑌶𑍁𑌕𑍍𑌰𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌜𑍌 ॥ 22 ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ்ருதிஷா ஊஹூஷத் நிணூயஃ

ஆனால் பன்னிரண்டில் வியாழன் புதன் இருந்தால் தனவிருத்தியைச் செய்வார்கள்

நக்ஷத்ராஜெ வ தியூஜெ வஷாஜெ வ ஞிநக்ஷயெ।
வெயிதக்ஷெ வ்யதீவாதெ ருஹஜொஷவிவஜிதெ ॥ 23 ॥
ஊஸஸூநூஞிநெ ஈாஸள வரிவெஷெ வ ஊஞிநெ।
ஷஉஸீதிஜுவெ வைவ ஸ்தாவநம் வஜயெக ஸுயீஃ ॥ 24 ॥

நட்சத்திரம் - அந்தம், திதி - அந்தம், வஷ - அந்தம், ஞிநக்ஷயம்
“ஷகஸ்ஸூ ஸாவநெ சுவஹிதியீநாம் திுதயம் யஜா।
தஜா ஞிநக்ஷயஃ வொ்ராக்தஃ ....”
என்ற விதிப்படி ஒரு ராப்பகல் தினத்தில் மூன்று திதி வியாபிப்பது தினக்ஷயம் எனப்படும். வேதை நட்சத்திரம், வியதீபாதம். கிரகதோஷத்தால் விலக்கப்பட்டநாள், மாசசூனியம், சூனியராசி, பரிவேஷம், ஊஞிநம் (மேகத்தால் மறைக்கப்பட்ட தினம், ஷஉஸீதி முகம், [மிதுனம், கன்னி, தனுஸ். மீனம், ஆகிய ராசிகளின் அம்சமாக சங்கியைகளால் குறிக்கப்படும் தினம்.

ஷவிம்ஸொ யநூஷொ ஹாஜெ, ஊவிம்ஸெ கநிஜிஷஸ்ுவ।
ஜியூநாஷாஉஸெ ஹாஜெ கநூயாஸ்து வதூஷெ।
தூஞூாஜி ஷஉஸீதூநாம் ஷஉஸீதிஜுவம் ஸ்ுஊக । (கநிஜிஷ - மீனம்)
ஐதி ஸுயஸிஜாஷத்திற் சொல்லப்பட்டது.] ஆகியவைகளில் அறிவாளி ஸ்தாபனத்தை விலக்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரதிஷ்டா முஹூர்த்த நிர்ணய:

VI காலப்பிரகாசிகை

(இந் நூலில் காணப்படும் மூலமும் தமிழ் உரையும்)

அத: பரம் ப்ரவக்ஷ்யாமி தேவதாஸ்தாபனம் ஶுபம் (நவம்)।
அயநே து உத்தரே குர்யாத் கும்பமாஸம் விவர்ஜயேத் ॥ 1 ॥

பூர்வபக்ஷே ச புண்யர்க்ஷேஷு பலயுக்தே நிஶாகரே।
த்ருஶ்யதே விமலே வ்யோம்னி பார்க்கவாஜீவஸௌம்ய யதா ॥ 2 ॥

யஜமாநாநாம் ஜன்மர்க்ஷேஷு கர்தவ்யம் ஸ்தாபனம் புதை:।
ரோஹிண்யாதிதி திஷ்யந்து வைஷ்ணவஹஸ்தோத்தராஸ்ததா ॥ 3 ॥

ஸ்வாதீ ச ஸ்தாபனே ஶ்ரேஷ்டா தேவதாநாம் விஶேஷத:।
விஷ்ணு சித்ராஶ்விமூலாநி வஸுமைத்ரம் ச மத்யமா: ॥ 4 ॥

ஓஜாஸ்து திதய: ஸர்வா: ப்ரஶஸ்தா நவமீம் விநா।
யுக்மாஸ்து தஶமீ ஷஷ்டீ த்விதீயா சைவ பூஜிதா: ॥ 5 ॥

ஶுக்ரேந்து ஜீவ ஸௌம்யாநாமம்ஶகே திவஸோதயே।
த்ரேக்காணே கார்யஹோராயாம் ஸ்தாபனம் ஸம்ப்ரஶஸ்யதே ॥ 6 ॥

ராஶயஸ்து ஸ்திரா: ஶ்ரேஷ்டா தேவீநாம் மத்யமா: ஶுபா:।
சராஶ்ச ராஶய: ஸர்வே வர்ஜநீயா: ப்ரயத்நத: ॥ 7 ॥

உச்சஸ்தான கதஶ்சந்த்ரோ யஜமாநஸுகாவஹ:।
சந்த்ரஸ்து நீசராஶிஸ்தோ தாரித்ர்யம் ஸம்ப்ரயச்சதி ॥ 8 ॥

மித்ர ஸ்தான கதஶ்சந்த்ரோ யஜமாநஸுகாவஹ:।
ஶத்ரு க்ஷேத்ர கதஶ்சந்த்ர: ஶத்ரு வ்ருத்திம் கரிஷ்யதி ॥ 9 ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ்ருதிஷா ஊஹுர்த் நிணர்ய:

ஸூயர்ாாஹ்விநு ஸளாாஶ்வுகு ஷூாவநெ முஹு ஸம்ஹிதா:।
நாஶயநூ்ஷிா்ாஷெவ ஹ்ருாஊம் ஜநவஷம் தயா ॥ 10 ॥

ஶூஹாஷூஜய ஸம்ஷூாஶ்வுகு ஸவர்ஸளவ்ரயநாவஹா:।
யநஷூாந மதா: வாவா: குவர்ஷி யநநாஶந:॥ 11 ॥

ஶூஹ்ராஷூ ஷநூ ஸம்யூகா: யநஷாஷூத்ர ஸம்ஹிதா:।
ஹாதரஷூாந மதா: ஸவெர் ஹ்ருஹாஷூஷி விவயர்நா: ॥ 12 ॥

ஸநூஷூாநமதா: வாவா: குவர்ஷி ஸூவநாஶந:।
தஷெவ வயர்யிஷ்யஷி ஸளஷ்யாஶுநூ விவஜர்தா: ॥ 13 ॥

ஸூதஷூாநமதா: கூ்ாா: குவர்ஷி ஸூதநாஶந:।
தத்ர ஷூதா: ஶூஹா: ஸவெர் வூத்ர யஜர்ஸூவவ்ரஷா: ॥ 14 ॥

வூத்ர ஷூாநமத: குயர்ாகு ஸளவ்ரநாஶம் நிஶாகூ:।
நாஶயஷி ரிவூநு கூாா: ஶத்ரூஷூாநம் ஸஊாஶ்ரிதா: ॥15 ॥

ஶதூ ஷூாந மதெ ஜீவெ ஶதூ வர்ஜிம் கூஷ்யதி।
ஷூாந ஹும்ஶ வ்ருஷள தத்ர ஸம்ஷூதள ஷநூஹாமர்வள ॥ 16 ॥

குயர்ாஜாஷித்ரும: ஸூயெர்ா யஜஊாந விநாஶந:
ஸளாி: ஸளவ்ர விநாஶ: ஸ்ராஷூய: வூத்ர விநாஶந: ॥ 17 ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வுதிஷா ஶாஹூமுத் நிண்யঃ

கூஜஸுதி ஸயம் கூயாகஃ விஶாவஸவநம் ஸுரஞா:॥
ஜீவெநூ ஸவுஶஸுளவெகஃ யந யாநுாமணொ ஸவெகஃ ॥ 18 ॥

சுஷஶஸுா ருஹா: ஸவெ் கூவ்ஞி கூமு நாஶநஃ।
யஜ்ஸுாந மதா: ஸளஶூா: கூயா் ய்ஜ் விவய்நஃ ॥ 19 ॥

வாவாஶுநுயாதா: கூயா்: ஸளவுயஜ்யநக்ஷயாநு।
ஶாஹஸுாந மதா: கூமுணா: கூவ்ஞி ஸுாந நாஶநஃ ॥ 20 ॥

உநெுண ஸம்யாதா: ஸளஶூா: வாதுஶிதுஸாவவுஶா:॥
ஶுாஹஸுாந மதா: ஸவெ் வாதுாயா: ஶுீஸாவவுஶா: ॥21 ॥

ஊாஉஶஸுா ருஹா: ஸவெ் கூத்ர ஶாஶிஶுுஶா ஸுரதா:॥
வுயஸுள யநவருஜீங்ஞா கூயாதாம் மாணா உநுஜள ॥ 22 ॥

நக்ஷதுாணெ உ தியுணெ வஷாணெ உாயநக்ஷயெ।
வுாயிதகெஷ் வுதீவாதெ ருஹஷொஷ விவஜி்தெ ॥ 23 ॥

ஶாஸஶமுநுஶிநெ ணாஶள வாிவெஷெ உ ஶாஶி்நெ।
ஷஉஶீதி ஶாவெ வெவ ஸுாவநம் வஜ்யெகஃ ஸாயீ: ॥ 24 ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரதிஷ்டா காலநிர்ணய:

காலப்பிரகாசிகை

இருபத்தி எட்டாவது அத்தியாயம்

இது முதல் நூதன தேவதாபிரதிஷ்டை ஸ்தாபனம் சம்பந்தமாகச் சொல்லவிருக்கிறேன்.

தேவதா ஸ்தாபனத்தை உத்தராயணத்தில் செய்யவேண்டும். மாசி மாதத்தைத் தவிர்க்கவேண்டும்.

வளர்பிறையில் - சுப நக்ஷத்திரத்தில் சந்திரன் பலமுடன் இருக்கும்பொழுது, சுக்ரனும், குருவும் நிர்மலமான ஆகாசத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் பொழுது (குரு-சுக்ர மௌட்யம் இருக்கலாகாது) யஜமானனுக்கு அனுகூலமான நக்ஷத்திரத்தில் வித்வான்களால் நூதன தேவதா ஸ்தாபனம் செய்யப்பட வேண்டும்.

ரோகிணி, புனர்பூசம், மிருகசீர்ஷம், ரேவதி, ஹஸ்தம், உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, ஸ்வாதி ஆகிய நக்ஷத்திரங்கள் தேவதாபிரதிஷ்டை விஷயத்தில் உத்தமமானவை.

திருவோணம், சித்திரை, அசுவினி, மூலம், அவிட்டம், அனுஷம் ஆகிய நக்ஷத்திரங்கள் மத்யமம்.

நவமி திதி த்விர - மற்ற ஒற்றைப்பட்ட திதிகள், இரட்டித்த திதிகளில் தசமி, ஷஷ்டி, திவிதீயை ஆகியவை சுபம்.

சுக்ரன், சந்திரன், குரு, புதன், இவர்களின் வார அம்சங்கள் லக்னம், திரேக்காணம், ஹோரை இவைகளில் தேவதா பிரதிஷ்டை செய்வது சுபம்.

ராசிகளில் ஸ்திர ராசிகள் உத்தமம். துர்க்கை போன்ற ஸ்த்ரீ தேவதைகளுக்குக் உபய ராசிகள் நல்லவையாகும். சரராசிகள் யாவும் விலக்கத் தக்கவை.

சந்திரன் உச்சத்தில் இருக்கும்போது தேவதாபிரதிஷ்டை செய்யப்பட்டால் அது யஜமானனுக்கு சௌக்யம் உண்டு (ஏற்படும்). சந்திரன் நீசராசியில் இருக்கும்போது இந்த தேவதா பிரதிஷ்டை நடந்தால் யஜமானனுக்கு தாரித்ரியம். (Poverty) மித்ர ராசியில் இருந்தால் சௌக்யம் - தனாதி வசதிகளை அளிப்பார். சந்திரன் சத்ரு ஸ்தானத்தில் இருந்தால் அதிகம் சத்ருக்கள் உண்டு. நிச்சயம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரதிஷ்டா முஹூர்த்த நிர்ணய:

தேவதா பிரதிஷ்டை காலத்தில் லக்னத்தில் சூர்யன், ராஹு, சந்திரன், சனி (செவ்வாய்) ஆகியவர்கள் இருந்தால் அந்த தேவதா பிரதிஷ்டை நடக்கும் கிராமம், தேசம் இவற்றை விரைவிலேயே நாசம் செய்வர். லக்கினத்தில் சுபர்கள் (சுபக்கிரஹங்கள்) இருப்பின் சகலவித சௌக்யங்களையும் தனவிருத்தியையும் அளிப்பார்கள்.

தன ஸ்தானத்தில் பாபிகள் இருந்தால் தனநாசம்

இரண்டாம் இடத்தில் சுபர்கள் சந்திரனுடன் கூடியிருப்பின் மிக அதிக தனங்களை அளிப்பர்.

மூன்றாம் இடத்தில் உள்ள எல்லா கிரஹங்களுமே மகிழ்ச்சியளிப்பர்.

நான்காமிடமான பந்து ஸ்தானத்தில் (The sign of relatives) உள்ள பாபிகள் (melefics). சுகநாசத்தைச் செய்வர். சந்திரனைத் தவிர மற்ற சுபர்கள் (Benefics) 4-ல இருந்தால் சுகத்தை விருத்தி செய்வர்.

5- ஆமிடத்தில் பாபிகள் இருந்தால் புத்ர நாசத்தைச் செய்கிறார்கள். 5-ல் இருக்கும் சுபர்கள் - புத்ர-பாக்ய-சௌக்யம் தனாதி நன்மைகளைச் செய்வர்.

புத்ர ஸ்தானமெனப்படும் 5-ல் சந்திரன் இருந்தால் சௌக்ய நாசத்தைச் செய்வார்.

சத்ரு ஸ்தானம் எனப்படும் 6-ல் அசுப கிரஹங்கள் இருந்தால் பகைவர்களை அழிப்பார்.

தேவதா பிரதிஷ்டையாகும் லக்னத்திற்கு - ஆறாம் இடமான சத்ரு ஸ்தானத்தில் குரு இருந்தால் பகைவர்களின் அபிவிருத்தி ஏற்படும்.

ஆறாம் இடத்தில் சந்திரனும் சுக்கிரனும் இருந்தால் ஸ்தான ப்ரம்சம் (may tempt the 'yajaman' to reliquish his position) செய்வர்.

7 ஆமிடத்தில் சூர்யன் இருந்தால் யஜமானனை நாசம் செய்வர். 7-ல் உள்ள சனி சுகக் குறைவையும், புதன் புத்ர நாசத்தையும், செவ்வாய்-அக்னி பயத்தையும் செய்வர். 7-ல் சுக்ரன் இருந்தால் அந்த தேவதா பிரதிஷ்டை நடக்கும் இடத்தில் பைசாசங்கள் குடியிருக்கலாகும். (Venus in the 7th will divert the temple into a haunt of devils)

7-ல் குருவும், சந்திரனும் இருந்தால் தனதான்யங்கள் மிகுந்திருக்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ்ரதிஷா ஃஹூர்த் நிண்யஃ

8ஆமிடத்தில் எந்த ஒரு கிரஹமும் இருக்கலாகாது. இருப்பின் குலநாசம் ஏற்படும். 9ஆமிடத்தில் இருக்கும் சுபர்கள் தர்மவிருத்தியைச் செய்வர். சந்திரனுடன் சேர்ந்த பாபகிரஹங்கள் 9ல் இருந்தால் ஸௌக்யம், தர்மம் இவற்றிற்குக் குறைவைச் செய்வர். 10ல் இருக்கும் பாபிகள் ஸ்தான நாசத்தைச் செய்வர். சுபர்கள் சந்திரனுடன் சேர்ந்திருப்பின் சகல செல்வங்களையும் புத்ரர்கள் நண்பர்களின் அபிவிருத்தியையும் செய்வர்.

11ல் இருக்கும் கிரஹங்கள் யாவும் புத்ரன், ஆயுஸ், சௌக்யம் யாவற்றையும் அளிப்பார்.

12ல் கிரஹங்கள் இருந்தால் யஜமானனுக்கு தாரித்ர்யத்தை (Poverty) அளிப்பார்.

12ம் இடத்தில் குருவும், புதனும் இருந்தால் தனவிருத்தியைச் செய்வர் (will increase wealth)

நக்ஷத்ரம், திதி-வருடம், அயனம் இவற்றின் முடிவினும் வேதையான நக்ஷத்திரமுள்ள ராசியிலும் (லக்னத்திலும்) வியதீபாதம் கிரஹணம் சூன்யமாஸம் சூன்யதினம் சூன்யராசி பரிவேஷம் துர்தினம் (மேகம் மூடிய (சூரியனே தெரியாதபடி) நாள்) ஷடசீதி முகம் ஆகியவற்றில் தேவதா ஸ்தாபனத்தை விலக்குதல் வேண்டும்.

VII காமிகே வடலஃ (காமிகாகமம் பூர்வபாகம்)

சுய காமும் வ்ரவக்ஷ்ராசி ஸவெ்ஷாஞு ஸுவாவஹஃ ।
ஊவஊவஸ் விநா ஶஸ்ம் ஹாநொ ஈயந ஃதாஃ ॥
உக்ஷிணெ சுவரிதெ ஊவஸ காதிகாஶுயுஜாவவி ।
ஶ்ராவண ஶ்ரு வியீயனெ தஃநெ்ர நிநிதா ஃதா ஃ॥
ஶுக்ஷவக்ஷ ஶ்ருஹொாzந்ரஶ்ரு ஸவுஃஞொாzஸிதொ ஃதஃ॥
ஶுகெவாஷ்ர தரதீயாஶம் கூரஷெ உாஞ்ஞுவா த்ஜெசு ॥
ஃயுஊள ஃயுமளஹாமள ஶெ்ஷா வநூள வ்ரக்ஷீதிதள ।
நவஶ்ம் வஞுஃஶூள உ ஹிசுவா யுஜெதாஞியிஃ ॥
குஃராஃவி உ யூாஸு ஷிதீயா நஶஶீ ஞயா ।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾 𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤 𑌨𑌿𑌰𑍍𑌣𑌯𑌃

𑌕𑍃𑌷𑍍𑌣𑍇 𑌷𑌷𑍍𑌠𑍍𑌯𑌾𑌂 𑌯𑌾𑌮𑍍𑌯𑌾𑌷𑌾𑌢𑌾𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌨𑌿𑌰𑍍𑌋𑌤𑌾 𑌸𑍍𑌮𑍃𑌤 ॥
𑌰𑍋𑌹𑌿𑌣𑍀 𑌚𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌶𑍍𑌵𑌿𑌨𑍍𑌯𑍌 𑌹𑌸𑍍𑌤𑌂 𑌸𑍍𑌵𑌾𑌤𑍀 𑌪𑍁𑌨𑌰𑍍𑌵𑌸𑍂 ।
𑌅𑌨𑍂𑌰𑌾𑌧𑌾 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍𑌭𑍂𑌰𑍍𑌕𑍍𑌷𑌂 𑌸𑍌𑌮𑍍𑌯𑌂 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌂 𑌵𑌾𑌰𑍁𑌣𑌂 𑌤𑌥𑌾 ॥
𑌚𑌿𑌤𑍍𑌰𑌾 𑌶𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑍌𑌷𑍍𑌣𑌾𑌶𑍍𑌚 𑌅𑌨𑍁𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌾 𑌪𑍍𑌰𑌶𑌂𑌸𑌿𑌤𑌾𑌃 ।
𑌪𑌞𑍍𑌚𑌮𑍍𑌯𑌾𑌂 𑌶𑍁𑌕𑍍𑌲𑌷𑌷𑍍𑌠𑍀 𑌚𑍈𑌵 𑌵𑌿𑌶𑌾𑌖𑌾 𑌪𑍂𑌰𑍍𑌵𑌜𑍇 𑌸𑍍𑌮𑍃𑌤 ॥
𑌦𑍈𑌵𑍇𑌷𑍍𑌟𑌂 𑌕𑌥𑌿𑌤𑌂 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌜𑍇 𑌤𑌦𑍍𑌵𑌿𑌧𑍇 𑌤𑌤𑌃 ।
𑌆𑌨𑍍𑌯𑍇 𑌪𑍌𑌷𑍍𑌣𑍍𑌯𑌪𑍌𑌷𑍍𑌣𑌾𑌶𑍍𑌚 𑌤𑌦𑍍𑌰𑍇𑌷𑍍𑌯 𑌨𑌿𑌨𑍍𑌦𑌿𑌤𑌾 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾 ॥
𑌵𑌾𑌰𑌾 𑌗𑍁𑌰𑍁𑌜𑍍𑌞𑌾𑌕𑌾𑌰𑍍𑌕𑍍𑌯 𑌶𑍁𑌕𑍍𑌰𑌶𑍍𑌚 𑌦𑍇𑌵𑌵𑌾𑌰𑌾𑌃 𑌪𑍍𑌰𑌶𑌂𑌸𑌿𑌤𑌃 ।
𑌅𑌨𑍍𑌯𑍇 𑌰𑌵𑌿 𑌵𑌾𑌰𑍇𑌷𑍁 𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍𑌤𑍁 𑌸𑌿𑌤𑌾𑌪𑌰𑍇 ॥
𑌤𑌦𑍍𑌵𑍃𑌶𑍍𑌚𑌿𑌕𑌗𑌤𑍇 𑌸𑌾𑌨𑍍𑌦𑍍𑌰 𑌵𑍇𑌶𑍍𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌂 𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 ।
𑌶𑍁𑌭𑌕𑌰𑍍𑌮 𑌨 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌜𑍀𑌵𑍇 𑌚𑌾𑌸𑍍𑌤𑌙𑍍𑌗𑌤𑍇 𑌬𑍁𑌧𑍈𑌃 ॥
𑌶𑍁𑌕𑍍𑌰𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌮𑌯𑍇 𑌵𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌦𑍍𑌯𑌂 𑌨 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ।
𑌦𑌿𑌵𑌾 𑌮𑌹𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌂 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌕𑌰𑍍𑌮 𑌚 ॥
𑌸𑌰𑍍𑌵𑌦𑍋𑌷𑌕𑌰𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌰𑌾𑌤𑍍𑌰𑍌 𑌵𑌾 𑌵𑍇𑌶𑌨𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌰𑌾𑌤𑍍𑌰𑍌 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌬𑌲𑌿𑌂 𑌤𑍍𑌯𑌾𑌗𑍇𑌨𑌾𑌗𑍍𑌨𑍌 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌕𑌥𑌞𑍍𑌚𑌨 ॥
𑌉𑌤𑍍𑌤𑌰𑌃 𑌸𑍍𑌥𑌿𑌰𑌰𑌾𑌶𑌿𑌸𑍍𑌸𑍍𑌯𑌾 𑌨𑍍𑌯𑍂𑌨𑍇 𑌸𑍂𑌰𑍍𑌯𑍋 𑌹𑌯𑌾𑌤𑌕𑌃 ।
𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑍍𑌯 𑌸𑍍𑌵𑌰 𑌰𑌾𑌶𑌿𑌸𑍍𑌤𑍁 𑌸𑌜𑍀𑌵𑌸𑍍𑌚𑌚𑍍𑌛𑌹𑌪𑍍𑌰𑌦𑌃 ॥
𑌗𑍁𑌰𑍁𑌹𑌾𑌰𑍍𑌗𑍍𑌵 𑌵𑌾𑌣𑍀𑌨𑌾 𑌦𑍃𑌷𑍍𑌟𑌯 𑌸𑍍𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌯𑌤𑍇 ।
𑌗𑍁𑌰𑍁𑌦𑍃𑌷𑍍𑌟𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑍀𑌨𑌾𑌂 𑌸𑍍𑌰𑌗𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑌯𑌃 ॥
𑌵𑌿𑌶𑌾𑌂 𑌬𑍁𑌧𑍇𑌨 𑌦𑍃𑌷𑍍𑌟𑌶𑍍𑌚 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌶𑍍𑌚𑍈𑌵 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ।
𑌤𑍍𑌰𑌿𑌷𑌡𑍇𑌕𑌾𑌦𑌶𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌪𑌾𑌪𑌾𑌸𑍍𑌤𑍁 𑌨𑌿𑌶𑌿 𑌶𑍋𑌭𑌨𑌾𑌃 ॥
𑌵𑍍𑌯𑌯𑌂 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾 𑌶𑍁𑌭𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌶𑍁𑌭𑌦𑌾 𑌮𑌤𑌾𑌃 ॥
𑌚𑌤𑍁𑌰𑌸𑍍𑌰𑍇 𑌶𑍁𑌭𑌾𑌃 𑌪𑌾𑌪𑌾 𑌵𑌰𑍍𑌜𑌨𑍀𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌤𑌃 ॥
𑌉𑌦𑌯𑌸𑍍𑌥𑌂 𑌹𑌿𑌮𑌾𑌂𑌶𑍁𑌂 𑌚 𑌷𑌷𑍍𑌠𑌾𑌷𑍍𑌟𑌮𑌗𑌤𑌂 𑌶𑍁𑌭𑌃 ।
𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌦𑍍𑌦𑍇𑌶𑌿𑌕𑍋 𑌧𑍀𑌮𑌾𑌨𑍍 𑌬𑌹𑍁𑌦𑍋𑌷𑌸𑌮𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ்ருதிஷா ஊஹூர்த் நிணர்யஃ

கணகம் ஸ்ருஹஉணஞு ஸ்ஙூணஊக்தும் ரூஹெண வ ।
யூக்தஞு காம்க்ஷிதஞொஊம் ஸஞ்ஜெ ஜெஸிகொதஃ॥
வெயிதக்ஷம் வ்யதீவாதம் வஜும் ஶூகுணஞைவ வ ।
விஷ்கம்ஹம் வரிவஞைவ ரஷும் வைய்ருதிஹஷணெ॥
தயாzதிரம்ஐ ஊநக்ஷம் ஷஐஸீ திஊவ ஞயா ।
ஊஸஶூந்யம் ரூஹைஹீஞ நமுவார ஞைவ வ ॥
ரஹஹொஷ ஸஊவிஷெ ஜூழா நக்ஷத்ரகாஷி யக ।
திமிநக்ஷத்ரஊஸாஸாய நாஞஞு வஜ்யெக ॥
கமிஊஸம் த்ருஜெஜீஊ நெஸிகஸூ விஶெஷதஃ॥
யஜஊ நா நூகமுஷெ ஸுஸ்ஹொஷெ ரூணாயிகெ ॥
வஷாஹெ வாம ஊய்ஹெ முநெ ரூஹஸுயாநிதெ ।
காரயெஊஷூகஜைர் ததஸவஸம்வக ஸஊஜயெ ॥

ஜதி காஜிகாவெ ஊஹாதஞெ க்ரியாவாஜெ
காழுவியிநூஊ நவஃ வடழ ஃ॥

ஶ்லோகம் உஙஅ ஶ்லோகம் கஙளள½

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரதிஷ்டா முஹூர்த்த நிர்ணய:

காலவிதி படல சந்த்ரிகை

கால விசேஷம்.

பிறகு ஸமஸ்த கர்மங்கட்கும் சுகத்தைத் தருவதான க்ாலத்தைச் சொல்லப் போகின்றேன். மாசிமாதந் தவிர சூர்யன் வடக்கே செல்லும் உத்தராயந காலமானது சிறப்பாகும். சீக்கிரத்தில் ஆக வேண்டுமானால் தக்ஷிணாயநத்தில் கார்த்திகை ஐப்பசி மாதங்களும் ஆவணியும் விதிக்கப்படுகின்றன. அதைப் பார்க்கிலும் மற்றவை குறைவாகச் சம்மதிக்கப்பட்டன.

சுக்ல பக்ஷம் (வளர்பிறை) சுபம். தேய்பிறையில் சப்தமி வரை கொள்ளலாம். வளர்பிறையில் கதினைந்தில் மூன்றிலோரு பாகமாகிய பஞ்சமி வரையும், தேய்பிறை இறுதியில் மூன்றிலொன்றாகிய ஏகாதசி முதல் அமாவாசை வரையிலும் நீக்க வேண்டும். நடுப்பாகம் ஐந்து நாளும் மத்திமமாகவும், மற்றவை கிறந்ததாகவும் கூறப்பட்டன. ஒற்றைப்படையாகிய நவமி பர்வம் அமாவாசைகளையும், முதலாவதாகிய பிரதமை திதியையும், இரட்டைப்பாடையாகிய திதிகளில் த்விதியையும், தசமியையும், அவ்வாறே தேய்பிறையில் ஷஷ்டியையும் விட்டு யாவை மிகுதியோ அவை எல்லாம் இந்த விஷயத்தில் நிந்திக்கப்படா.

ரோகிணி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி இவை மூன்றும், அஸ்தம் ஸ்வாதி, புனர்பூசம், அனுஷம், மிருகசீர்ஷம், திருவோணம், பூராடம், மகம், சித்திரை, அவிட்டம், ரேவதி இவை மனிதர்கட்காகக் கூறப்பட்டன.

சிறப்புடைய சதயம், விசாகம், பூரம், பூராடம், பூரட்டாதி இவையோடு கூட தேவர்கள் விஷயத்தில் திருவாதிரையுங் கூறப்பட்டன. இவையாவும் சிவனிடத்திற் சம்மதிக்கப்பட்டன. (இவை ப்ரதிஷ்டா விஷயங்கட்கு ஆகுமென்பது,)

மனிதர் விஷயத்தில் பூசமும் ரேவதியும் ஆகும். அவற்றைப் பார்க்கிலும் வேறான கிருத்திகை, பரணி, ஆயில்யம், கேட்டை, மூலமென்னும் நட்சத்திரங்கள் ஆகாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரதிஷ்டா முஹூர்த்த நிர்ணய:

காலிகாகமே பஞ்சவர்ணாமே

வார பலன்

செவ்வாய் ஞாயிறு வாரங்களை விட்டு மற்றத் தேவவாரங்கள் சிறப்பாகக் கூறப்பட்டன. மானுடர்களட, கருத்த நிறமுள்ள சனி வாரத்தையும் நீக்க வேண்டும்.

அஸ்தங்க பலன்

புத்திமான்கள், சூரியன் அஸ்தமனத்தையடைநதபோது வீடு கட்டக்கூடாது. குரவானவர் அஸ்தமனத்தை அடைந்த போது சுப கார்யம் செய்யக் கூடாது. சுக்கிருடைய அஸ்தமனத்திலும் பிரதிஷ்டை முதலானதை செய்விக்கக் கூடாது.

இராப் பகல் பலன்

பகலில் கர்ப்பாதானமும், இரவில் வாஸ்து கார்யமும் தோஷத்தைத் தரும், இரவில் (ஓரிடத்தில்) பிரவேசித்தல் ஆகும். கிராம நிமித்தமாக இரவில் அக்னியில் வாஸ்து பலியை யொருக்காலும் செய்யக் கூடாது.

ராசிப் பலன்

ஸ்திரராசி உத்தமமாகும். உபய ராசி மத்திமமாகும். சர ராசி நீக்கத் தக்கது. சர ராசி குருவோ: கூடியிருக்குமாயின் சுபத்தைத் தரும்.

உதய பலன்.

குரு, சுக்ர, புதன்களுடைய உதயமானது யாவத் கர்மங்கட்கும் சுபத்தைத் தரும். அந்தனர்கட்கு குரு உதயமும், க்ஷத்திரியர்கட்கு சுக்கிரோதயமும், வைக்யர்கட்கு புதோதயமும் மிகச் சிறந்தவை. சூத்திரர் விஷயத்திலும் வைச்யர்கட்கு வொப்பாக விதிக்கப்படுகின்றது.

ஸ்நாந பலன்

3வது, 6வது, 11வது இடத்தில் இரவில் பாபிகள் யாவரும் சுபர்கள்தான். சுபர்கள் யாவரும் 12வது இடத்தை தவிர எல்லா விடங்களிலும் சுபத்தைத் தருபவர்களாகச் சம்மதிக்கப்பட்டன. கேந்திரத்தில் சுபர்கள் சிறந்தவர்கள். பாபிகள் நீன்னத்தக்கவர்கள் 2வது, 6வது, 7வது இடங்களையடைந்த சந்திரனை சுபனாகக் கொள்ள வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரதிஷ்டா முஹூர்த்த நிர்ணய:

கோசார பலன் முதலியன

புத்திமானாகிய ஆசாரியர் கோசாரத்திலிருக்கும் அடியிற் கூறுமைந்தையும் நீக்க வேண்டும். குரூரநக்ஷத்திரம், பிரமதண்டம். தூமகேதுவிலிருந்து விடப்பட்டது. கிரகணத்தோடு கூடினது, கிரகணத்தினா லபேக்ஷிக்கப்பட்டது ஆகிய இந்த நட்சத்திரத்தை ஆசாரியோத்தமர் விடவேண்டும்.

வேதை நட்சத்திரம் வ்யதிபாதம் சூலம் வஜ்ரம் அவ்வாறே, விஷ்கம்பம் கரிகம் கண்டம் வைதிருதி ஹர்ஷணம் அவ்வாறே, அதிகண்டம் அஸ்தங்கத நட்சத்திரம் அவ்வாறே, ஷடசீதிமுக மென்னும் யோகம் சூன்யமாசம், கிரகங்களால் பின்னப்பட்டது. அவ்வாறே, தக்தவாரம் பகிரகதோஷங்களாற் சூழப்பட்ட ஜ்வாலா நட்சத்திர முதலானது யாதோ அதையும், திதி நட்சத்திர மாச வருஷ அயநங்களின் முடிவையும் வர்ஜிக்க வேண்டும். புத்திமானாகிய ஆசாரியர் முக்கியமாய் அதிகமாசங்களில் வர்ஜிக்க வேண்டும்.

வாஸ்து பூஜா காலம்

அற்ப குற்றமும் அதிக குணமுள்ளதாகவு மிருக்கிற, எஜமானனுக் கநுகூலமான நட்சத்திரமாகவும், பிராதக் காலத்திலும் அல்லது மத்யானத்தும் லக்ன கிரக பலன்களோடு கூடிய தினத்தில் வாஸ்து கார்யத்தை ஸமஸ்த சம்பத்துகளின் பூர்த்திக்காகச் செய்ய வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ்ரதிஷ்டா ஊஹூர்த்த நிண்யஃ

VIII குமாரதந்திரதம், அசலஸ்தாபன விதி.

(மேற்கோளும் உரையும்)

குமாரதந்திரத்தில், விசாக நட்சத்திரத்தில் சுப்பிரமணியருக்குப் பிரதிஷ்டை செய்யக் கூடாதென்பது தெளிவு. அதுமட்டுமன்றி கேட்டை, மூலம், ஆயிலியம், கிருத்திகை, சதயம், அவிட்டம், திருவாதிரை ஆகியனவும் பொருத்தமற்ற நட்சத்திரங்கள்.

-கௌமார தந்த்ரே-
கசலு ஸ்தாவந வியிஃ

ஜ்யேஷ்டாஜி வர்வ் நைஜதந்ரா ஶ்லேஷாந்ரிஶ்வ வாரூணஃ ।
ஶ்ரவிஷ்டாஜா விஶாவாவ நேஷ்டம் ஸ்தாவந கர்மணி ॥

IX முஹூர்த்த சிந்தாமணி (மேற்கோளும் உரையும்)

ஊஹூர்த்த விந்தாமணிஃ

யந நிவயகாஃ ஸஃ ஶ்ராஹவஸம்ஸ்தஃ
வ்யய ஹவநேsவி யநாமஜம் கரோதி ॥

[வ்யயஃ செலவு.]

சுக்கிரன் லாபஸ்தானமாகிய 11-ம் இடத்தில் இருந்தால் பணம் சம்பாதித்தலையும், வ்யயஸ்தானமாகிய 12-ம் இடத்தில் இருந்தால் பணவரவினையும் செய்வான். முஹூர்த்த சிந்தாமணி நூல் (மோதீலால் பனாரஸீதாஸ் - 1995 வெளியீடு- பக்கம் 195) பீயூஷதாரா எனும் உரையில் விதிரத்னம் என்ற நூல்மேற்கோள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ்ருதிஷா ஊஹூர்த் நிண்யஃ

சுக்கிரன் லக்னத்திற்கு 12-ம் இடத்தில் இருந்தால் லக்ஷதோஷ நிவ்ருத்தி என்பது சிலர் கருத்து.

X காமு வியாநஃ காலவிதானம் (மேற்கோளும் உரையும்)

ஶாஸஊஹூர்த்ஸ்வ் ஓளமுஸ்ஸூஃ

ஶ்லோ॥ ஓிவஸொமுணஷொஷாஹூாம் விஜிஶ்ருஷ்யாகு வாஸூம்।
கெவமும் முணஸம்யுக்தொ ஷெவா நாஊவிஜுமுஸ்ஸ॥
ஷொ ஷாந் ஸவ்ாநு வரிதக்ஷூஊஶக்ஷ பஹுவத்ஸொஃ।
தஸூா துர்க்ஷ க்ஷவீர்த ஷுஷொஷமுணாயிகெ॥ உ॥ உக॥

தினமானது குணதோஷங்களோடு கூடியேயிருக்கும். கேவலம் குணங்களோடு மாத்திரம் கூடின காலமானது தேவர்களுக்கும் துர்லபமானது. தோஷங்களெல்லா வற்றையும் விட்டு உத்தம முகூர்த்தம் கிடைப்பதற்கு வெகு வர்ஷங்கள் சென்றபின்பும் சாத்தியமன்று. ஆகையால் புத்திசாலியானவன் நன்றாக முகூர்த்தங்களை ஆராய்ந்து பார்த்து தோஷம் அல்பமாயும் குணங்கள் அதிகமாயுமிருக்கிற காலத்தில் சுபங்களைச் செய்யக்கடவன்.

சுஸகாண ஷிநெத்ரக்ஷம்
பயிரம் ஷாகு ஊக்தஹாக
கிதி நவ ஷாஉஶக்ஷீணீ
தெஷஷாவாஹெ க்ஷதெ க்ஷாகு॥

சூரியன் விட்ட நக்ஷத்திரம் முதல் 3 மூன்று நக்ஷத்திரம் குருடு அதற்கு மேல் 9 ஒற்றைக் கண்கள் 12 இரட்டைக்கண்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரதிஷ்டா முஹூர்த்த நிர்ணய:

XI வீமேசுர உள்ளமுடையான் நூலில் தேவப்பிரதிஷ்டை

முகூர்த்தப்படலத்தில

உத்தராயணத்தேக பரிமான்றலை
யுத்திரங்கள் பனைதோணி முற்கனி
வைத்தமாலதையுத்தமமத்திமம்
அங்கை செங்கை மரக்காலுலக்கையும்
சுத்தநற்கொட்டினமுமுதயமும்
சொல்லுமாசிப் பிறப்பக்கண்ணற்றநாண
மெத்துவாவினரட்டித்தபக்கமும்
விலக்குமென்றுவீமேசர்விதித்ததே.

தேவப்பிரதிஷ்டைக்கு உத்தராயணம் பிறந்த வாரம், அசுவினி, ரோகிணி, மிருகசீரிடம், உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, அனுஷம், ரேவதி, மகம், புனர்பூசம், இவை உத்தமம்.
இனி அத்தம், திருவாதிரை, சோதி, திருவோணம் ஆகிய இவைகளும் காலற்றநாள் உடலற்றநாள் (இடையற்ற) நாள் தலையற்ற நாள் ஆகிய இவைகளும் மத்திமம் என்க. சுப வாரங்களும், அமிர்த யோகங்களுமாய் சுபக்கிரகங்கள் நோக்கிலும் பண்ணுவது மாசி மாதத்திலும், பிற்பக்கத்திலும் கண்ணில்லாத நாளும் உவா இரண்டும் இராத்திரி காலமும் இரட்டித்த பக்கமும் இவையெல்லாம் விலக்கப்படும் என்று வீமேசர் விதித்தது.

இதுவுமது

விதித்தபொன்வெள்ளிமுடஞ்சரவோரை
விருட்டிகர்த்தாவுக்காறெட்டீராறுமா
யுதித்தவெள்ளிபொல்லானெழுபாலர்பொன்
னொன் றுமூன்றாரிற்றேரிலுயர்நல
மிதித்தவீராறினாவிற்போல்வான்மதி
யெட்டனிற்கோட்களெல்லாருமாசுதம்
பதித்தவேற்றிலுதிக்கப் பிரதிஷ்டைகள்
பண்ணநன்ரமவீமேசர்பதத்தையே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரதிஷ்டா முஹூர்த்த நிர்ணயஃ

இ-ள், குரு சுக்கிரன் மூடமுஞ் சரராசியும் விருஷ்டியோகமும் கர்த்தாவுக்கு 6-8-12 ஆமிராசியும் ஆகாது. சுக்கிரன் 8-ம் இடம் பொல்லன் பாபக்கிரகங்கள் 11-3-6-ம் இடந்தேடி நிற்கில் நல்லவர் 12-ம் இடம் இடபமதி பொல்லான் 8-ம் இடமாகிய எல்லாக் கிரகங்களும் பொல்லார், சுக்கிரன் ரிஷபத்தி லுதயமாக சிவகுருவீமநாதர் முதலான திரிமூர்த்திகளுக்கும், மற்றுமுண்டான தேவர்களுக்கம், பிரதிஷ்டைகள் பண்ணுவது சரம் இடத்தில் பிருதீவு அப்பு அந்த எஜமானனுக்கும், பண்ணுகிற குருக்களுக்கும் பிருதீவு உதிக்கப்பண்ண உத்தமம்.

பதந்தருஞ்சரசெவ்வாய் தான் பிற்பக்கம்
பன்னாலுபூர்வபட்சத்தினட்டமி
விதஞ்செயுஞ்சத்தமாதர்பிரதிட்டைகண்
மிக்கசத்திக்குபயஞ்சரநல
முதிர்ந்துவாயிருத்தை ரட்டித்தபக்க
மூதேவிக்குமூரிறைக்குப்பொருந்துநா
ளிதந்தமா தாந்தநற்கோட்களெட்சியி
லிசைதிருநாண்முகூர்த்தமதோ துமே.

சரராசியிலும், செவ்வாய்க்கிழமையிலும், அமரபட்சத்து சதுர்த்தசியும், பூர்வபட்சத் தஷ்டமியும், சத்தமாதாக்களை எழுந்தருளப்பண்ணுவது ஶ்ரீதேவப் பிரதிஷ்டைகளுக்கும் உபயசரம் நன்றென்பது உவாவும் இருத்தையும் இரட்டித்த பக்கமும் மூதேவிக்காம். ஊருக்கு ஊராளுகிற கர்த்தனுக்குப் பொருந்தின நாளில் சங்கிரமகாலங்களில் மாதாந்தத்தில் நற்கோளுதயத்தில் சந்தி திருநாளெழுந்தருளப்பண்ணுவது. தேவப்பிரதிஷ்டை முடிந்தன். இனி வந்தவனுக்குத் தற்காலப் பொருந்தஞ் சொல்லுவோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரதிஷ்டா முஹூர்த்த நிர்ணய:

தெய்வப் பிரதிஷ்டை

XII சூடாமணி உள்ளமுடையான்

அதிகநன் றுளபூ சங்க ளவுட மைந் தானந் தோனி
குதிரையுத் திரங்கள் மூன்றுங் கோணுக நன்று சோதி
புதியமா லீச னத்த மத்திமம் புகட்கோள்வாரங்
கதிர்வட குருநாள் தெய்வப் பிரதிட்டைசெய் கமலக் கண்ணா.

(இ-ள்) ரோகிணி, புநர்பூசம், அனுஷம், மிருகசீரிடம், அசுபதி, ரேவதி உத்திரங்கள் 3-ம் மாத மிவை யுத்தமம் சோதி, திருவோணம், அத்தமிவை மத்திப: மல்லாத இவை மத்திபம்: அல்லாதவை யாகாது நற்கோள்வார உதையங்கள் நன்று, உத்தராயணம் பிறந்த வாரே பிரதிஷ்டை பண்ணுவ தென்றவாறு.

கண்ணிலா நாட்கள் மாசி கடியபிற் பக்க மொன்பான்
எண்ணுவா விரட்டை பக்க பிராப்யுகர் செம்பொன் மூடன்
தண்ணிய சகடம் விட்டி சரராசி தலையாய் நின்ற
வண்ணல்தன் னோரைக் காறெட் டீராறு பிரதிஷ்டைக் காகா.

(இ-ளு கண்ணில்லாத நாடக்ள மாசிமாதம், அமரபட்சம், நவமி, உவா, இரட்டித்த பக்கம் இராத்திரி சுக்கிரன், பிரகஸ்பதி, அஸ்தமனம், சகடம், விஷ்டி, சரராசிகளில் கர்த்தாவினுடைய ராசிக்கு 9-8-12 மிராசியுமிவை பிரதிஷ்டைக்கு வற்சிக்கப்பட்டது. எ-று.

ஆகாத பாபர் மூன்றோ டாறுபன் னொன்று நல்லர்
ஏகார்க ளெட்டி லியாரு மேழிடம் வெள்ளி பொல்லான்
மாகாறுமதிய நான்கு மீராறு மறுவிற் றீயன்
பாபாரும் பவிடையில் வெள்ளை மிகநன்று பிரதிஷ்டை பண்ண

(இ-ள்) பாபர் 3-6-11-மிடம் நல்லர், 8-மிட மெல்லோரும் பொல்லார், 7-மிடம் தீயன், சந்திரன் 4-12-மிடந் தீயர், ரிஷபத்தில் வெள்ளி யுதையமாகப் பிரதிஷ்டை செய்யப்பெறில் விசேஷித்து நன்று. எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரதிஷ்டா முஹூர்த்த நிர்ணய:

பண்மொழி சரஞ்சேய் பின்னிற் பதினான்கு முன்னிலெட்டுப்
பெண்ணெழு வற்கு நன்றாம் பெருகிய சரோபயங்க
ளெண்ணும்பெண் தெய்வ நாட்டா மிறைவர் மூவர்க்கு மாகு
டண்ணிய சங்கி ராந்தி மாதாந்தத் திருநாள் சாற்றே

(இ-ள்) சரராசியும், செவ்வாய்க்கிழமையும், அமரபட்சத்து சதுர்த்தசியும், பூர்வபட்சத்து அஷ்டமியு மிவை சத்தமாதாக்களை எழுந்தருளவிக்கலாம், சரராசிகள் உபையராசிகளும் ஸ்ரீ தெய்வப் பிரதிஷ்டைக்கும் ராஜாவினுடைய நாளுக்கும், ஊர்பிறந்த நாளுக்கும் பொருந்த நாட்களிலே சங்கிரம காலத்திலும் மாதாந்தங்களிலும் திருநாளெழுந்நருளிவிப்பது நன்று, ரித்தையு மிரட்டிந்த பக்கங்களும், உவாவும் மூதேவி பிரதிஷ்டைக்காமென்பது முன் சொன்ன நாட்களிலே சுபக்கிரகங்கள் நோக்க பதின்மூன்றும் பிரதிஷ்டை பண்ணுவதென்றவாறு.

திருமர் தேவர்க் கெல்லாஞ் சிறந்தவை காசி திங்க
ளூரியநற் பக்கந் தன்னி லுயர்ந் தயர்ந் தநாள் வாரமேத்தத்
தருமிகப் பவுத்தி ரங்கள் தருமருக் கொழுந்து சாற்றும்
பொருவரு மாடி திங்கள் பதினான்கட் டமியும் போற்றி.

(இ-ள்) வைகாசிமாதத்தில் பூர்வபட்சத்தில் சுபகன்மங்களுக்குச் சொன்ன நாளில் நற்கோள்வார உதையங்களில் ஆகாசம் நிர்மலமாகத் தேவர்களுக்கெல்லாம் பவித்திரமும் மருக்கொழுந்து சாத்துவது அமரபக்ஷத்து ஆடிமாதத்திலேயாவது அஷ்பதினான்கிலாவது சாத்துவதென்றவாறு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

XIII சரசோதி மாலை நூலில் குணாகுணப்படலம்

அக்கினி யோகம்

சந்திரன்பன்னொன் றாறுதபனனேழ்பன்னிரண்டும்
புந்தியெட்டிரண்டாம் பக்கம் புகரவன்பத்து மெட்டு
மந்திரிக்கொண்பதாறுமண்மகனைந்துமேழு
மந்தனொன்பதும் பன்னொன்றும் வன்னியோகங்களாமே.

ஞாயிற்றுக் கிழமையில்	துவாதசியும்
திங்கட் கிழமையில்	சஷ்டியும்
செவ்வாய்க்கிழமையில்	சப்தமியும்
புதன் கிழமையில்	அஷ்டமியும்
வியாழக்கிழமையில்	நவமியும்
வெள்ளிக்கிழமையில்	தசமியும்
சனிக் கிழமையில்	ஏகாதசியும் வருவன.

XIV சோதிட கிரக சிந்தாமணி

ஆதித்த பார்வை

சூரியன் நின்ற நாளுக்கு முன் மூன்று, பின் மூன்று நாள்களும் குருட்டு நாள்களாகும்.

அதற்கு முன்னான்கு, பின்னான்கு நாள்களும் கண் பார்வையுள்ள நாள்களாகும். மற்ற நாள்கள் இருகண் பார்வையுள்ளனவாம்.

விருத்தம்

மேதகு கதிரோனின்ற நாளு மற்றதன்மேன் மூன்றுங்,
கோதறு பின்னின்மூன்று குருட்டுநாளென்று கொள்க.
ஒதிய வதற்குப் பின்முன் நான்கு ளொருகண் காணும்,
ஏதமி னின்றநாள்களிரு காணுண் டருக்கற்கென்றே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகம வழிபாட்டில் பாலஸ்தாபனத்தின் சிறப்பும் விலக்கப்பட வேண்டிய விக்கிரகங்களும்

ஆகம சிற்ப ஆய்வுக் கட்டுரை
பிரதிஷ்டா பூஷனம் சிவாகமஞானபானு சிவாச்சார்யார்
சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்
நயினை யாழ்ப்பாணம் - இலங்கை

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்ற மூதாட்டியின் வாக்கிற்கு அமைய மக்களாகப் பிறந்தவர்கள் எல்லோரும் பெருமை கொள்ள வேண்டும். மனிதன் என்ற சொல் "மன்" என்ற வடமொழி வினையடியில் இருந்து பிறந்தது. அதை அடிப்படையாக வைத்துத்தான் பல மொழிகளிலும் மனிதன் குறிப்பிடப்படுகிறான். "மன்" என்றால் "நினைத்தல்" என்பது பொருள். நினைக்கக்கூடிய கருவியாகிய மனதை வைத்திருப்பவன் மனிதன். யாரை நினைக்க வேண்டும் என்ற கேள்விக்கு அப்பர் சுவாமிகள்,

"வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்ந்த சென்னியும்
தந்த இறைவனை" என்று கூறுவார்.

அப்படி இறைவனை நினைக்கத்தான் நமது முன்னோர்கள் கோயில்கள் என்ற இறை நிலையங்களை நிறுவியுள்ளனர்.

ஆதிகாலம் தொட்டே இந்து மதத்தவர்க்கு இறைவன் என்ற ஒரு உயர்பொருள் உண்டு எனும் எண்ணம் தோன்றியிருக்க வேண்டும். ஆதலால்தான் ஆதியில் உருவத்தைப் பார்க்க முன் இறை உயர்வைப் பார்த்தனர். இயற்கைச் சக்திகளை இறைவனாகக் கண்டு வழிபட்டனர். இவற்றை வேதங்களில் சிறப்பாகக் காணலாம். பின்பு உருவங்களைக் கொடுத்து வழிபட்ட இந்து மதத்தினர் அவற்றுக்குரிய ஒழுங்கு விதிகளை அறியாது இருந்தனர். இதை சிந்துவெளி காலப் பரப்பில் காணலாம். கோயில்களை அறியாத பழங்குடித் தமிழர்கள் காடு, ஆறு, குளக்கரை ஓரம், ஆலமரங்கள் போன்ற இடங்களில் இறைவனை வணங்கினர். இது சிறப்பாக சங்க காலத்தில் காணலாம். அக்கால நூல்களுள் ஒன்றான திருமுருகாற்றுப்படையில் நக்கீரர்.

"காடும் காவும் காவின் பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறு பல்வைப்பும்" என்று குறிப்பிடுகிறார்.

சங்க மருவிய காலத்தில்தான் கோயில் என்ற நிலை உருப்பெறத் தொடங்கியது. விக்கிரகங்கள் அமைப்பதற்குரிய பொருட்களை ஆகமங்கள் சிறப்பாக கூறியுள்ளன. அப்பொருட்களை பயன்படுத்தியதாக மணிமேகலை என்னும் காப்பியம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"மண்ணினும், கல்லினும், மரத்தினும்
சுவரினும் கண்ணி தெய்வதம் காட்டுநர் வகுக்க"

என்று குறிப்புத் தருகிறது. எவ்வாறுதான் விக்கிரகங்கள் அமைக்கப்பட்டாலும் அவற்றை அமைக்க வேண்டிய விதிகளையும், வழிபாடாற்ற வேண்டிய நெறிகளையும் முறையாக பின்பற்ற வேண்டும். அவற்றை சிறப்பாக விளக்க வந்தவையே ஆகமங்கள் ஆகும். "ஆகமம்" என்றால் இறைவனிடம் இருந்து வந்தது என்று பொருள்படும். இதையே திருமூலர் 10ம் திருமுறையான திருமந்திரத்தில்.

"வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்" என நிறுவியுள்ளார். ஆகமங்கள் இருபத்தியெட்டு உள்ளன. காமிகம் முதல் வாதுளம் வரையுள்ள 28 ஆகமங்களும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு மார்க்கங்களின் மூலம் இறைவனை அடைவதற்கான வழிகளை காட்டி நிற்கின்றன. ஆகமங்கள் விளக்கும் கிரியைகள் கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் எனும் நான்கு பகுதிகளாக விளக்கம் தருகின்றன. அவற்றை பின்பற்றியே வழிபாடு செய்ய வேண்டும். விக்கிரகங்களிலோ அல்லது கோயிலிலோ ஏதாவது குற்றம் ஏற்படுமாயின் அதற்குரிய ஆகம முறையை செய்து கொள்ள வேண்டும். குற்றமுள்ள விக்கிரகங்களை வழிபடுவதால் அந்த தேசத்தில் மழையில்லாமல் போகும் என்பதை அஜிதாகமம் பின்வருமாறு கூறுகிறது.

"ஜீர்ண லிங்கத்து பேரம் வா யத்ர தேஸே து பூஜ்யதே
தத்ராநாவ்ருஷ்டி ஜாபீதிர்வர்ததெ நாதர ஸம்சய:"

இதையே திருமந்திரமும்

ஆற்றருநோய் மிக்கு அவன் மழையின்றி
போற்றரும் மன்னரும் போர்வலி குன்றுவர்
கற்றுவதத்தான் திருக்கோயில்கள் எல்லாம்
சாற்றிய பூசைகள் தப்பிடில்தானே

எனக் கூறுகிறது (பாடல் 517) ஆகவேதான் கோயில் அமைப்பு முறையை ஆகமங்களும், சிற்பசெந்நூல்களும் சிறப்பாக கூறி அதில் அமைக்கப்படவேண்டிய விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்யும் முறையையும் நான்கு விதமாக கூறியுள்ளன.

அதாவது ஒரு கிராமத்தில் புதிதாக ஒரு ஆலயம் அமைத்து விக்கிரகத்தை எழுந்தருளச் செய்வது அநாவர்த்தனப் பிரதிஷ்டை எனப்படும். ஒரு இடத்தில் லிங்கம் (அல்லது ஏதாவது விக்கிரகம்) சமுத்திரத்தனாலோ நதியினாலோ அல்லது தீய மிருகங்களால் வேறு இடத்திற்கு அசைக்கப்பட்டால் அது ஆவர்த்தணப் பிரதிஷ்டை ஆகும். விமானங்களில் வர்ணம் இல்லாமல் புதிதாக வர்ணம் தீட்டி கோயிலை புதுப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிப்பதற்காக பாலாலயம் அமைத்து பிரதிஷ்டை பண்ணுவது புனராவர்த்தனம் எனப்படும். சண்டாளர்கள், பாபிகள், திருடர்கள் விம்பங்களைத் தொட்டால் அந்தத் தோஷம் நீங்குவதற்காகச் செய்வது அந்தரிதம் ஆகும்.

ஆகமத்தில் "விக்கிரகம்" என்றசொல் "மேலான இடம்" அல்லது "விஷேடமாக எழுந்தருளும் இடம்" என்று பொருள்படும். "பிரதிஷ்டை" எனும்போது "பிர" என்பது "சிறப்பாக" அல்லது "உயர்வாக" என்ற பொருளையும், "திஷ்ட" என்பது "நிற்றல்" எனும் கருத்தையும் தருகிறது. எனவே விக்கிரக பிரதிஷ்டை என்பது "விஷேடமாக எழுந்தருளும் சிலையில் இறைவனைச் சிறப்பாக நிற்கச் செய்தல்" என்று பொருள்படுகிறது. கும்பாபிடேகத்தைத் தரிசிப்பதால் பாவங்கள் எல்லாம் நீங்குகின்றன என்பது சமய நம்பிக்கை. அதன் சிறப்பை சம்பந்தர் மயிலாப்பூரில் உள்ள கபாலீச்சரரைப் பற்றிப் பாடும்போது

"உரிஞ்சாய வாழ்க்கை யமணுடைய போக்கும்
இருஞ்சாக்கியர்க ளெடுத்துரைப்ப நாட்டில்
குருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சர மமர்ந்தாள்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்"

என கும்பாபிடேகச் சிறப்பைக் கூறுகிறார். ஆதலால்தான் அன்றுதொட்டு இன்றுவரை கோயில் கட்டுவதிலும் அதைப் புதுப்பிப்பதிலும் இந்து மதத்தவர்கள் அதிக ஈடு பாடு கொடுத்து வருகின்றனர். இதையே அப்பர் சுவாமிகள் ஐந்தாம் திருமுறையில் திருமீயச்சூர் எனும் இடத்தில் கோயில் கொண்டு இருக்கும் இறைவனை நோக்கி,

"தோற்றுங் கோயிலும் தோன்றிய கோயிலும்
வேற்றுக் கோயில் பலவுற"

எனத் தோன்றியுள்ள கோயிலுடன் தோன்றும் கோயிலையும் சிறப்பித்துள்ளார்.

முன்பு அநாவர்த்தனம் செய்த கோயில்களை மீண்டும் 12 வருட முடிவிலோ அல்லது அதற்கு முன்னமோ புனராவர்த்தனம் செய்ய வேண்டும் என காமிகாகமம் கூறுகிறது. புனராவர்த்தனப் பிரதிஷ்டையில் பாலஸ்தாபனம் முக்கியமாகக் கருதப்படுகின்றது. இது இரண்டுவிதமாக காரணாகமம் கூறுகிறது.

முதலாவது கிராமம் அல்லது நகரம் அல்லது இராஜதானி இன்னும் மற்ற இடங்களில் பிரதான ஆலயம் கட்டியபின் முதன்முதலாக புனராவர்த்தனம் செய்வ தற்காகக் கட்டப்படுவது பாலாலயம் அல்லது பாலஸ்தாபனம். இதை காரணாகமம்,

"க்ராமேவா நகரேவாவி பத்தநே ராஜதாநிகே
ஏதேஷ்வந்யேஷ" தேஸேஷ" மூலஸ்தாநஸ்ய யத்பரா"

பாலாலயத்தில் பிரதிஷ்டை செய்து பின் மூலாலயத்தில் மூலலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்துவிட்டு பாலாலயத்தை நீக்கவேண்டும். பின்பு மூலாலயம், பீடம்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விம்பங்கள் பழுதுபட்ட காலத்தில் இவைகளை கம்பத்தில் ஆவாஹித்து பாலவிம்பத்தில் சேர்ப்பதற்கு, இரண்டாவது அல்லது அதற்குப் பிற்பட்ட புனராவர்த்தனத்திற்காக அமைக்கும் ஆலயம் தருணாலயம் எனப்படும். இது சுப்பிரபேத ஆகமத்திலும், அம்சுமானாகமத்திலும் காணப்படுகின்றது.

"ஆத்யம் பாலக்ரஹம் கல்ப்யம் மூலகெஹம் தத: பரம்
மூலலிங்கம் பிரதிக்ஷ்டாப்ய பச்சாத் பாலக்ரகம் தீயஜேத்
பந: பிராசாதகரணெ சின்னேபிந்நெ ரவீக்ருதே."

பாலாலயத்தில் ஸ்தாபனம் செய்தபின்பே மூலாலயத்தில் பிரதிஷ்டை செய்யவேண்டும். பாலஸ்தாபனம் இல்லாத பிரதிஷ்டை பல கெடுதல்களை உண்டாக்கும் என ஸுக்ஷமாகமத்தில் கூறப்பட்டுள்ளது. அதில் குறிப்பாக புத்திர பௌத்திரர்களுக்கு தீமை ஏற்படும் என்று விளக்கப்பட்டுள்ளது.

"பாலஸ்தாபநம் விநாயத்ர புத்ரபௌத்ர விநாசநம்"

பாலஸ்தாபனம் அமைக்கப்பட வேண்டிய திக்குகளை காமிகாமம் சிறப்பாகக் கூறுகிறது. இக்காமிகாமம் பாலஸ்தாபனம் இன்றி மூலஸ்தாபனம் இல்லை என்றும் கூறுகிறது.

"பாலஸ்தாநம் விநாவித்வான் மூலஸ்தானனம் ந காரயேத்"

மூலவிக்கிரகம் சிலாவிக்கிரகமாக இருந்து அதில் ஏதேனும் பழுது (ஜீர்ணம்) ஏற்பட்டால் அவற்றை அகற்றும் அல்லது சீர்திருத்தும் விதி முறைகளை ஆகமங்கள் வகுத்துள்ளன. எந்தப் பொருளால் விக்கிரகம் அமைக்கப்பட்டிருக்கிறதோ பின் அது பழுதுபட்டபின் அதே பொருளால் அமைக்கப்பட வேண்டும் என்பதை விம்பாகமம் கூறுகிறது.

"ம்ருண் மயம் சேத் ம்ருதாகுர்யாத் தாருசேத் தாருணாதரு
லோகஜம் யதி லோகெந சிலாயாம் சைலயம் யதி"

(சிலை) விக்கிரகத்தை நோக்குமிடத்து அதன் முகம், இமைகள், மூக்கு, கண் போன்றவை குற்றமுடையதாயின் அதை விலக்கி புதியதொரு விம்பத்தை ஸ்தாபிக்க வேண்டும் என ரௌரவ ஆகமம் விளக்கி அப்பழைய விக்கிரகத்தைச் சமுத்திரத்தில் விடும்படியும் கூறுகிறது.

"ப்ருரேகா பக்ஷம ரேகா ச ஆஸ்யரேகா ச நாஸிகா
ஸர்வாங்கானாம் க்ஷயம் த்ருஷ்டவா ப்ரதிமாம் ச விஸர்ஜயெத"

"சைலஜம் த்ருவபேறம் யதங்கஹீநம் பவேத்யதி
தத்பேரம் ச சமாதாய சமுத்ரெ பிரக்ஷி வெத்ததா"

மேலும் தலை, புஜம், கால்கள், சேதம் ஏற்பட்டாலும் அதை விலக்கி அவ் விக்கிரகத்தை சமுத்திரத்தில் விடவேண்டும் என்பதை பூர்வ காரணாகமம் (பாடல் 234) விளக்குகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"ப்ருரேகா பக்ஷ்மரேகா ச ஆஸ்யரேகா ச நாஸிகா
ஏதாஸாம் ச க்ஷ்யம் த்ருஷ்ட்வா ப்ரதிமாம் பதிவர்ஜயெத்
தத்பேரம் து பரிக்ராஹ்ய சமுத்ரே து விநிக்ஷியபேத"

இதையே சுப்பிரபேதாகமமும் கூறுகிறது.

"சர்வாங்காநாம் க்ஷயம் த்ருஷ்ட்வா ப்ரதிமாம் ச விஸரீயெத்"

லலிதாகமம் எனும் ஆகமத்திலும்

"சிலாவிக்கிரகத்தில் ஏதாவது அங்கம் குள்ளமுடையதாயின் அதை எடுத்து சமுத்திரத்தில் விட வேண்டும்" என்று பின்வருமாறு கூறுகிறது.

"சைலம் ச த்ருவபேரம் யதங்க உற்நம் பவேத்யதி
தத் பேரம் ச சமாதாய சமுத்ரே ப்ரக்ஷிவெத்தது"

விம்பாகமத்திலே குற்றமுள்ள விக்கிரகத்தை நதியில் விடுத்து புதிய விக்கிரகத்தை அதே பொருள்கொண்டே அதாவது முன்பு எந்தப் பொருள் விக்கிரகம் அமைப்பதற்கு பயன்படுத்தப்பட்டதோ அதே பொருள் கொண்டே அமைக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது. இது பற்றி முதலிலேயெ குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதே கருத்தை ஸூக்ஷிமாகமம் 48வது படலம்.

(11வது வரி முதல் 14வது வரி வரை உள்ளவை) விளக்குகிறது. அதில் மண்ணால், உலோகத்தால், கல்லினால் செய்யப்பட்ட விம்பங்களில் குற்றம் அல்லது நெருப்பு பட்டால் "அதை பூஜையில் பயன்படுத்தக் கூடாது" என்றும் அப்படி பூஜை செய்யின் ராஜாவிற்கு அழிவும், நாட்டிற்கு கேடும் விளையும் என்றும் "அதை நீரில் விடவேண்டும" என்பதையும் சுட்டிக்காட்டி எந்தப் பொருளால் விக்கிரகம் செய்யப்பட்டிருக்கிறதோ அதே பொருளால்தான் புதிய விக்கிரகம் செய்ய வேண்டும் என்றும் கூறுகிறது.

"தஸ்மாத் பேரம் சமுத்ருத்ய ஜலெ வாவி ஸ்தலே விவா"

மேலும்
"சிலா சேச் சைலஜம் ஸ்வயம" என்றும் விளக்குகிறது. ரௌரவாகமும் சிலையில் செய்யப்பட்டிருந்தால் மீண்டும் செய்யும்போது சிலையால்தான் செய்யப்பட வேண்டும் என

"சிலையா சைலஜம் குரு"

(55வது) படலம் 10வது வரி) விளக்கி நிற்கிறது. குமாரதந்திரத்திலும் இக் கருத்து,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"எந்தப் பொருளினால் ஒரு விக்கிரகம் செய்யப்பட்டிருக்கிறதோ பின் ஜீர்ணமாகி விலக்கிய பின் அதே பொருளால்தான் விக்கிரகத்தைச் செய்ய வேண்டும்" என்றும் கூறுகிறது.

"யத்வஸ்துனா க்ருதம் பேரம் குர்யாத் தத்வஸ்துவர புனஃ"
ஸ்ரீமகுடாகமத்தில்,

"சலிதம் பதிதம் வாவி நந் ஸ்ரேதோ விவேதிதம"
(150)வது பாடல்) என்ற குறிப்பு காணப்படுகிறது. அதாவது

"விக்கிரகத்தில் ஏதாவது அசைவுகளோ அல்லது ஒரு அங்கம் விழுந்தாலோ அதை நதியில் சேர்க்க வேண்டும்" என்று கூறுகிறது. லலிதம் எனும் மூலாகமத்தில் இருந்து வந்த குமார தந்திரத்தில்

"சிலாவிக்கிரகம் பழுது அடைந்தால் அதை உரிய வாகனத்தில் சகடை, யானை, ரதம் அல்லது சிவிகையில் ஏற்றி சமுத்திரத்தில் அல்லது தடாகத்தில் அல்லது கிணற்றில் விடவேண்டும். என்று விளக்கப்பட்டுள்ளது.

"சைலஜம் ஜீர்ணம் சமுத்ருத்ய சகடே வா கஜே விவா
ரதே வா சிவிகாயாம் வா விநிநா ரோப்ய பத்திமான்
சமுத்ரெ வா தடாகேவா கூவேவாவி விசர்ஜயேத்"

இவ்வாறு விக்கிரகங்களுக்கு ஏற்பட்ட குற்றத்தை நீக்கும் முறையைக் கூறிய ஆகமங்கள்,

சிலா விக்கிரகமே எல்லோரும் வழிபடுவதற்கு ஏற்றது என்றும் கூறியுள்ளது. இது சிறப்பாக காமிகாமத்தில்

"சைலஜம்ச ப்ரஹ்மானாதி சதுர்வானாதி ஸாரேன சதுர்விதம"

சுப்பிரபேதாகமத்தில் "எல்லோருமே கருமைச் சிலையை வழிபடலாம்" என்று கூறப்பட்டுள்ளது.

"ஸர்வேஷாந்து சிலாக்ருஷ்ணா ஸர்வஸம்பத் கரீஸ்ம்ருதா"

இதை சிற்ப ரத்னாகரம் எனும் சிற்ப நூல்

"சூத்திரர்களுக்கு கருமைச் சிலையே ஏற்றது
சூத்ர.................. கிருஷ்ணாச்ச" என்று கூறுகிறது.

எனவே இவ்வாறு ஆகமங்கள் விதிக்கப்பட்ட விதிமுறைகளை பின்பற்றி இறைவனை பிரதிஷ்டை பண்ணி இறையருள் நிறைபெற்று முறைவாழ மறைபோற்றும் இறைவனையே வேண்டுவோம்.

சுபமஸ்து அனைவருக்கும் மங்கள முண்டாகட்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



இத் தொகுப்பு நூலின் ஆசிரியர் சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள் நயினை நாகபூஷணி தேவஸ்தான பரம்பரை ஆதீன குரு சிறந்த சிவாச்சார்ய மரபைச் சேர்ந்தவர். எமது நாட்டிலும், பிறநாடுகளிலும் எமது சிவாகம மரபு சிறப்பாக வளம் பெறத் தொண்டாற்றுபவர். தமது வாழ்நாளின் அனுபவத்தின் வெளிப்பாடாக பிரதிஷ்ட்டை நிகழ்த்தப்படுவதற்குப் பொருத்தமான முகூர்த்த நிர்ணயம் செய்யும் வகையில் இந்நூலைத் தொகுத்துள்ளார். இதனைச் சிவாச்சார்ய உலகமும், சைவ அன்பர்களும் மனமுவந்து வரவேற்பர் என்பதில் ஐயமில்லை.

பேராசிரியர். ப. கோபாலகிருஷ்ண ஐயர்
கலைப்பீடாதிபதி
யாழ் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி.

Printed by : Luxmi Printer, 195, Wolfendhal Street, Colombo 13, Sri Lanka. Tel : 448545, 458273 Tel/Fax : 330588